IslamHouse.com
مركز أصول
Osoul Center
www.osoulcenter.com
Rabwah



# மாதர்களுக்கான உதிரப் போக்கு

ஆசிரியர்
அஷ்ஷேக் முஹம்மத் பின்
ஸாலிஹ் அல் உஸைமீன் (ரஹ்)

தமிழில்
எம். அஹ்மத் (அப்பாஸி)
அபூ அப்திர்ரஹ்மான்

தமிழ்
Tamil
تاميلي

# رسالة في الدماء الطبيعية للنساء

لفضيلة الشيخ
**محمد بن صالح العثيمين**

ترجمة
**أبو عبد الرحمن أحمد بن محمد**

Tamil
தமிழ்
تاميلي

Osoul Center
www.osoulcenter.com

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டாளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்பிடும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

+966 504 442 532

+966 11 445 4900

+966 11 497 0126

P.O.BOX 29465 Riyadh 11457

osoul@rabwah.com

www.osoulcenter.com

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும்
நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் பெயரால்...

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| உள்ளடக்கம் | 7 |
| மொழிபெயர்த்தோன் உரை | 9 |
| முன்னுரை | 13 |
| மாதவிடாயின் விளக்கமும், அதன் உள்ளார்ந்த காரணமும் | 17 |
| உள்ளார்ந்த காரணம்: | 17 |
| மாதவிடாயின் வயதெல்லையும் தவணையும் | 19 |
| கர்ப்பிணியின் மாதவிடாய்: | 30 |
| 1.விவாகரத்து. | 32 |
| 2.கர்ப்பிணியின் மாதவிடாய் `இத்தா"வில் கணக்கிடப்படமாட்டாது. | 33 |
| மாதவிடாயில் தற்செயலாக ஏற்படும் மாற்றங்கள் | 35 |
| 1.வழமையாக மாதவிடாய் ஏற்படும் நாட்களின் எண்ணிக்கை மாறுபடல்: | 35 |
| 2.மாதவிடாய் ஏற்படும் வழமையான காலம் மாறுபடல்: | 35 |
| 3.மஞ்சள் அல்லது | 37 |
| 4.மாதவிடாயில் தொடர்ச்சியற்ற நிலை: | 40 |
| 5.இரத்தத்தில் வறட்சி நிலை ஏற்படல்: | 42 |
| மாதவிடாயின் சட்டங்கள் | 43 |
| தொடருதிரப்போக்கும், அதன் சட்டங்களும் | 69 |
| தொடருதிரப்போக்கின் நிலைகள்: | 70 |

| | |
|---|---|
| இஸ்திஹாழாப் பெண்களுக்கு நிகரானவர்களின் நிலை: | 74 |
| இஸ்திஹாழாவின் சட்டங்கள்: | 76 |
| பிரசவ ருதுவும், அதன் சட்டங்களும் | 81 |
| (நிபாஸ்) பிரசவ ருதுவின் சட்டங்கள்: | 84 |
| மாதவிடாயைத் தடுக்கும், அல்லது வரவழைக்கும் சாதனங்களைப் பயன்படுத்தல் மற்றும், கருத்தடை அல்லது கருக்கலைப்புச் சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பான சட்டங்கள். | 89 |
| மாதவிடாயைத் தடுக்கும் சாதனங்களைப் பயன்படுத்தல்: | 89 |
| மாதவிடாயை வரவழைக்கும் சாதனங்களைப் பயன்படுத்தல்: | 90 |
| கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தல்: | 91 |
| கருக்கலைப்புச் சாதனங்களைப் பயன்படுத்தல்: | 92 |
| முடிவுரை | 97 |
| மாதவிடாய் சட்டங்கள் சம்பந்தமான சில மார்க்கத் தீர்ப்புகள் | 101 |

# மொழிபெயர்த்தோன் உரை

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவன் தனித்தவன். இணை, துணையற்றவன். உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன். சாந்தியும் சமாதானமும் எமக்கு நேர்வழி காட்ட வந்த இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள், மறுமை நாள் வரை அவர்களைப் பின்பற்றும் அனைத்து நல்லடியார்கள் மீதும் உண்டாவதாக.

இறைவன் ஆண்களையும் பெண்களையும் படைத்து, இரு சாராருக்கும் தனித்துவமான சில இயல்புகளை வைத்துள்ளான். பெண்களுக்கு இறைவன் படைத்துள்ள இயற்கை உபாதைகளுள், அவர்கள் பருவமடைந்தது முதல் கருவறையிலிருந்து வெளிப்படும் உதிரப்போக்கு பிரதானமானதாகும். அவ்வாறு வெளிப்படும் உதிரத்தை இஸ்லாம் மூன்று வகையாக வகுத்து, ஒவ்வொன்றிற்கும் தனித்துவமான சட்டதிட்டங்களை நெறிப்படுத்தியுள்ளது.

ஒரு பெண் பருவமடைந்தது முதல் எவ்வித நோயுமின்றி அவளது கருவறையிலிருந்து வெளிப்படும் மாதவிடாய் (ஹைழ்), பிரசவத்தின் போதும் அதனைத் தொடர்ந்தும் வெளிப்படும் பிரசவத் தீட்டு (நிபாஸ்), இரு மாதவிடாய்களுக்கிடையில் நோயின் காரணமாக வெளிப்படும் தொடருதிரப்போக்கு (இஸ்திஹாழா) ஆகியனவே அவையாகும்.

இவை பற்றி பல அறிஞர்கள் முற்காலத்திலும்,

தற்காலத்திலும் வைத்திய ரீதியாகவும், மார்க்க ரீதியாகவும் நூற்கள், கட்டுரைகள், ஆய்வுகள் என பல்வேறு வடிவங்களில் ஆக்கங்களை வெளியிட்டுள்ளனர். அவ்வாறான ஆக்கங்களில் ஸஊதி அரேபியாவின் பிரபல மார்க்க அறிஞர் அஷ்ஷேக் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன் (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட “الدماء الطبيعية للنساء» (பெண்களுக்கேற்படும் இயற்கை உதிரப்போக்கு) என்ற சிறு நூல் முக்கியமானது. இந்நூல் ஏற்கனவே மொழிபெயர்க்கப்பட்டிருப்பினும் சட்டதிட்டங்கள் சம்பந்தப்பட்ட சில தவறுகள் இடம்பெற்றிருப்பதைக் கருத்திற்கொண்டு அவற்றைத் திருத்தி மீள்ப்பதிவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அம்மொழி பெயர்ப்பின் மூலப் பிரதியை எவ்வகையிலும் பெற்றுக்கொள்வது சாத்தியமற்றது என அறிந்து அம்முயற்சி கைவிடப்பட்டு, ரியாதிலுள்ள ரப்வா த.்.வா நிலையத்தின் அனுசரணையுடன் மீண்டும் அந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதன் பலனே உங்கள் கையில் தவழும் இச்சிறு நூலாகும். முந்திக் கொண்டவர் என்ற அடிப்படையில் முதலில் மொழிபெயர்த்த காலஞ் சென்ற அஷ்ஷேக் எஸ். எம். மன்ஸூர் அவர்களுக்கே முழுப்பெருமையும் சாரும். (அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக)

இச்சிறு முயற்சியிலும் தவறுகள் காணப்படுமிடுத்து அதனை சுட்டிக்காட்டும் உரிமை இதனை வாசிக்கும் அனைவருக்கும் உண்டு.


இதில் இடம்பெறும் அல்குர்ஆன் வசனங்களை அதன் அத்தியாய, வசன இலக்கங்களுடன் குறிப்பிட்டுள்ளதுடன், நபிமொழிகளை இயன்றளவு அதன் மூலநூலின் இலக்கத்துடன் முன்வைக்க முயற்சித்துள்ளேன்.

இச்சிறு நூலை மீளாய்வு செய்து, அதிலுள்ள தவறுகளைத் திருத்தித் தந்த எனது மதிப்பிற்குரிய ஆசிரியர்களான அஷ்ஷேக் எம். ஓ. பௌஸுர் ரஹ்மான் (பஹ்ஜி), அஷ்ஷேக் எம். எஸ். எம். முஆஸ் (பஹ்ஜி), எனது பல்கலைக்கழகத் தோழர்களான அஷ்ஷேக் எம். ஜே. எம். ரிஸ்மி (அப்பாஸி, ரியாதி), அஷ்ஷேக் எம். ஜே. எம். ஹிஸ்புல்லாஹ் (அன்வாரி) ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இச்சிறு முயற்சியை வல்லவன் அல்லாஹ் ஏற்று, நிரப்பமான கூலியை நல்குவானாக. இதனை வடிவமைக்க எவ்வகையிலும் ஒத்துழைப்பு வழங்கியோர், இதனை வாசிப்போர் அனைவருக்கும் நல்லருள் புரிவானாக.

சாந்தியும் சமாதானமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர், தோழர்கள், மறுமை நாள் வரை அவர்களைத் துயரும் அனைவர் மீதும் என்றென்றும் உண்டாவதாக. எல்லாப் புகழும் ஏக வல்லன் அல்லாஹ்வுக்கே.

எம். அஹ்மத் (அப்பாஸி)
வெலிகம
இலங்கை.
1436 – 06 – 05
2015 – 03 – 25



# முன்னுரை

சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே சொந்தம். அவனை நாம் போற்றுகிறோம். அவனிடமே உதவியும் தேடுகிறோம். எமது உள்ளம்இ செயல்கள் போன்றவற்றினால் ஏற்படும் கெடுதிகள் யாவற்றிலிருந்தும் அவனிடமே பாதுகாவல் தேடுகிறோம். அவன் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவனை வழிகெடுப்பவன் யாருமில்லை, யாரை வழிகெடுத்தானோ அவனுக்கு நேர்வழி காட்டுவோர் யாருமில்லை. உண்மையாக வணங்கப்படத் தகுதியான இறைவன் அவனைத் தவிர யாருமில்லை என சான்று பகர்கின்றேன். அவன் தனித்தவன். அவனுக்கு இணை எதுவும் கிடையாது. மேலும் நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், தூதருமாவார்கள் என்றும் சான்று பகர்கின்றேன். அல்லாஹ் அன்னார் மீதும் அன்னாரது கிளையார்கள், தோழர்கள், மற்றும் இறுதிநாள் வரை அவரைப் பின்தொடர்வோர் அனைவர் மீதும் சாந்தியையும் சமாதானத்தையும் அருள்வானாக.

பெண்ணுக்கு ஏற்படும் ஹைழ்[(1)], நிபாஸ்[(2)], இஸ்திஹாழா[(3)]

(1) ஹைழ்: பெண்கள் பருவமடையும் போது கருவறையிலிருந்து மாதாந்தம் வெளிப்படும் உதிரப்போக்கு.

(2) நிபாஸ்: பெண்களின் பிரசவத்தின் போதும், அதனைத் தொடர்ந்தும் வெளிப்படும் உதிரப்போக்கு.

(3) இஸ்திஹாழா: இரு மாதவிடாய் காலங்களுக்கிடையில் வெளிப்படும் தொடர் உதிரப்போக்கு.

போன்றவை பற்றித் தெளிவு பெறுவதும், அதன் சட்டங்களை அறிவதும் காலத்தின் தேவையாகும். அது பற்றிய ஆய்வுகளை முன்வைத்துள்ள அறிஞர்களின் கூற்றுக்களில் சரியானதை இனங்காணவும், அக்கூற்றுக்களில் பலமானது, பலமற்றதைத் தரம்பிரிப்பதில் அல்குர்ஆனையும், ஸுன்னாவையும்(1) சார்ந்திருக்கவும் இவை பற்றிய சட்ட திட்டங்களைக் கற்பது அவசியமாகும்.

இவற்றில் அல்குர்ஆனையும், ஸுன்னாவையும் சார்ந்திருக்கக் காரணம்:

*1.* அல்லாஹ் தன் அடியார்களுக்கு இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டே வணக்க வழிபாடுகளையும், அதன் சட்டதிட்டங்களையும் கடமையாக்குகின்றான்.

*2.* உள அமைதி, மகிழ்ச்சியுணர்வு, மனத்தூய்மை, தடைகளுக்கான தீர்வு ஆகியவற்றை அல்குர்ஆன், ஸுன்னாவைச் சார்ந்திருப்பதன் மூலம் மாத்திரமே அடைந்து கொள்ளலாம்.

*3.* அல்குர்ஆனும், ஸுன்னாவும் ஏனையவற்றுக்கு ஆதாரமாகுமே தவிர, அவ்விரண்டிற்கும் ஏனையவை ஆதாரமாக அமையாது.

ஏனெனில், இறைவேதம் அல்குர்ஆன் மற்றும் நபிமொழிகளைத் தவிர வேறெதுவும் ஆதாரங்களாக

---

(1) ஸுன்னா: நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரமே மார்க்க சட்டக் கலையில் ஸுன்னா எனப்படுகிறது. ஹதீஸ் கலையில் மேற்கூறப்பட்ட மூன்றுடன் அவர்களின் அங்க அடையாளங்கள் மற்றும் பண்புகளும் இணைத்துக் கொள்ளப்படும்..

ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவ்வாறே, அறிஞர்களின் பலமான கூற்றிற்கினங்க பின்வரும் இரு நிபந்தனைகளுடன் ஸஹாபாக்களின்[1] கூற்றுக்களும் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன.

*1.* அல்குர்ஆனுக்கோ, ஸுன்னாவிற்கோ அக்கூற்று முரண்படக்கூடாது. அவ்வாறு முரண்படுமாயின் அக்கூற்றைத் தவிர்த்து அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் உள்ளதையே எடுக்க வேண்டும்.

*2.* அக்கூற்று ஏனைய நபித்தோழர்களின் கூற்றுக்களுக்கு முரண்படக்கூடாது. அவ்வாறு முரண்பட்டால் பின்வரும் அல்குர்ஆன் வசனத்திற்கமைய ஆதாரத்தின் அடிப்படையில் பலமானதைத் தெரிவு செய்து பின்பற்ற வேண்டும்.

قَالَ تَعَالَى: ﴿فَإِن تَنَٰزَعۡتُمۡ فِي شَيۡءٖ فَرُدُّوهُ إِلَى ٱللَّهِ وَٱلرَّسُولِ إِن كُنتُمۡ تُؤۡمِنُونَ بِٱللَّهِ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِۚ ذَٰلِكَ خَيۡرٞ وَأَحۡسَنُ تَأۡوِيلًا﴾ [النساء: ٥٩]

நீங்கள் ஏதேனும் ஒரு விடயத்தில் முரண்பட்டுக் கொண்டால், நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் - அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள் - இதுதான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான, அழகான முடிவாக இருக்கும். (அந்நிஸா: 59)

---

(1) ஸஹாபாக்கள்: நபி (ஸல்) அவர்களை விசுவாசங்கொண்ட நிலையில் சந்தித்து, அதே நிலையில் மரணித்த நபித் தோழர்களே ஸஹாபாக்கள் எனப்படுவர். இவர்களில் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தவர்கள் முஹாஜிர்கள் எனவும், அவர்களுக்கு உதவி, ஒத்தாசை புரிந்த மதீனாவாசிகள் அன்ஸாரிகள் எனவும் இரு பிரிவினராக வகைப்படுத்தப்படுவர்.

**பெண்களின் உதிரப்போக்குகள் சம்பந்தமான சட்டதிட்டங்களை உள்ளடக்கியுள்ள இச்சிறுநூல், பின்வரும் தலைப்புக்களில் ஆராயப்படவுள்ளது.**

பாடம் 01: மாதவிடாயின் விளக்கமும், அதன் உள்ளார்ந்த காரணமும்.

பாடம் 02: மாதவிடாயின் காலமும், தவணையும்.

பாடம் 03: மாதவிடாயில் தற்செயலாக ஏற்படும் வித்தியாசங்கள்.

பாடம் 04: மாதவிடாயின் சட்டங்கள்.

பாடம் 05: தொடருதிரப்போக்கும், அதன் சட்டங்களும்.

பாடம் 06: பிரசவ இரத்தமும், அதன் சட்டங்களும்.

பாடம் 07: மாதவிடாயைத் தடுக்கும் அல்லது வரவழைக்கும் சாதனங்களைப் பயன்படுத்துதல் மற்றும், கருத்தடை அல்லது கருக்கலைப்புச் சாதனங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான சட்டங்கள்.

# பாடம் 01
# மாதவிடாயின் விளக்கமும், அதன் உள்ளார்ந்த காரணமும்

**அகராதியில்:** ஹைழ் என்பது ஒரு பொருள் வடிந்தோடுவதை அல்லது ஓடுவதைக் குறிக்கின்றது.

**மார்க்க அடிப்படையில்:** ஒரு பெண்ணுக்கு வெளிக்காரணங்கள் எதுவுமின்றி குறிப்பிட்ட காலத்தில் இயற்கையாக ஏற்படும் இரத்தப்போக்கையே ஹைழ் எனப்படும். இது நோய், காயம், கருச்சிதைவு, பிரசவம் போன்ற வெளிக்காரணம் எதுவுமின்றி இயற்கையாக வெளியாகும் இரத்தப் போக்கையே குறிக்கும். இவ்வியற்கையான இரத்தம் பெண்ணின் உடல்நிலை, சூழல், (வாழும் பிரதேசத்தின்) கால நிலைக்கேற்ப மாறுபடுவதும், ஒவ்வொருவருக்கும் மத்தியில் வேறுபாடுகள் காணப்படுவதும் இயல்பாகும்.

## உள்ளார்ந்த காரணம்:

தாயின் கருவறையில் உருவாகும் சிசுவிற்குத் தேவைப்படும் உணவை சிசுவின் மீது மிகக் கருணையுள்ளவர்களால் கூட வெளியிலிருந்து வழங்க முடியாத நிலையில், அல்லாஹ்தஆலா பெண்களுக் கென்றே சில குருதிச் சுரப்பிகளை ஏற்படுத்தியிருக்கிறான். அவற்றின் மூலம் தாயின் கருவறையிலுள்ள சிசுவிற்கான உணவு (அதனைச் சாப்பிட்டு, சமிபாடடையும்

தேவையின்றி) இரத்த நாளங்களில் ஊடுறுவி, தொப்புள் கொடியூடாகவே சென்றடைகின்றது. ஒவ்வொரு சிசுவுக்கும் இவ்வாறே உணவளிக்கப்படுகின்றது. (இவ்வாறு படைத்த) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்கள் அனைவரிலும்) மிக அழகான படைப்பாளன். இதுவே மாதவிடாய் ஏற்படுவதற்கான உள்ளார்ந்த காரணமாகும். இதன் காரணமாகவே ஒரு தாய் கருவுற்றால் மாதவிடாய் தடைப்பட்டுவிடுவதை அவதானிக்கலாம். கருவுற்ற ஒரு பெண்ணுக்கு அக்கால எல்லையினுள் மாதவிடாய் ஏற்படுவது மிக அரிதாகும். அவ்வாறே, பாலூட்டும் தாய்மார்களுக்கும் (குறிப்பாக ஆரம்பப் பருவத்தில்) அரிதாகவே மாதவிடாய் ஏற்படுவதுண்டு.

# பாடம் 02
# மாதவிடாயின் வயதெல்லையும் தவணையும்

இதனை பின்வருமாறு இரு தலைப்புக்களில் விவரிக்கலாம்:

*1.* மாதவிடாயின் பருவம் (ஆரம்பமாகும், முடிவுறும் வயதெல்லைகள்).

*2.* மாதவிடாயின் தவணை.

## முதலாவது: மாதவிடாயின் பருவம்

பெரும்பாலும் ஒரு பெண்ணுக்கு 12 வயது முதல் 50 வயது வரையுள்ள பருவ காலத்தினுள் மாதவிடாய் ஏற்படுவதே இயல்பாகும். சிலவேளை பெண்ணின் உடல்நிலை, சூழல், (வாழும் பிரதேசத்தின்) கால நிலைக்கேற்ப முன்கூட்டியே ஆரம்பமாகும், தாமதமாகி முடிவுறும் நிலைகளும் ஏற்படுவதுண்டு.

மாதவிடாய் ஆரம்பமாவதற்கோ, முடிவுறுவதற்கோ குறிப்பிட்ட வயதெல்லை உண்டா? என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. “மாதவிடாய் குறிப்பிட்ட வயதுக்கு முன்பு ஆரம்பமாகவோ, குறிப்பிட்ட வயதைத் தாண்டி முடிவுறவோ மாட்டாது. அவ்வாறு ஏற்படுமாயின் அதை நோயாகக் கணிக்க வேண்டுமே தவிர மாதவிடாயாகக் கணிக்கக்கூடாது” என சில அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இமாம் தாரமீ[1] (ரஹ்) அவர்கள் இது பற்றிய கருத்து வேறுபாடுகளை எடுத்துக்கூறிவிட்டு பின்வருமாறு கூறியுள்ளார்கள்: "என்னைப் பொருத்தவரையில் இவ்வனைத்துக் கருத்துக்களும் தவறாகும். ஏனெனில் இ(ந்த மாதவிடாய் சம்பந்தப்பட்ட)வை அனைத்திலும் அளவுகோல் இரத்தம் தென்படுவதாகும். எந்நிலையிலும், எவ்வயதிலும், எவ்வளவு இரத்தம் தென்பட்டாலும் அதனை மாதவிடாயாகக் கருதுவதே ஏற்புடையதாகும்".[2] அறிஞர்கள் முன்வைத்துள்ள கூற்றுக்களில் இமாம் தாரமீ (ரஹ்) அவர்களின் இக்கூற்றே சரியானது. ஷைஹுல் இஸ்லாம் இமாம் இப்னு தைமிய்யா[3] (ரஹ்) அவர்களும் இக்கருத்தையே தெரிவு செய்துள்ளார்கள்.

ஒரு பெண் 9 வயதை விடக் குறைவானவளாகவோ, 50 வயததைத் தாண்டியவளாகவோ இருந்தாலும் மாதவிடாய் இரத்தத்தைக் எப்போது காண்கின்றாளோ அச்சமயம்

---

(1) இமாம் தாரமீ: அபூ முஹம்மத் அப்துல்லாஹ் பின் அப்துர்ரஹ்மான் அத்தாரமீ என்பதே இவரின் பெயராகும். இவ்வறிஞர் பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார்கள். ஹி. 181ல் பிறந்த இவர்களிடம் இமாம்களான முஸ்லிம், அபூ தாவூத், திர்மிதீ போன்றோர் கல்விகற்றுள்ளமை இவரின் சிறப்பாகும். முஸ்னத் அத்தாரமீ என்ற பிரபல ஹதீஸ் தொகுப்பின் ஆசிரியரான இவர் ஹி. 255ல் காலமானார்கள்.

(2) அல் மஜ்மூ.். ஷரஹுல் முஹத்தப். பாகம்: 1 பக்கம்: 386. (நூலாசிரியர்: இமாம் நவவீ (ரஹ்))

(3) இமாம் இப்னு தைமிய்யா என அறியப்படும் இவரின் முழுப்பெயர் அபுல் அப்பாஸ் அஹ்மத் பின் அப்தில் ஹலீம் பின் அப்திஸ்ஸலாம் இப்னு தைமியா அல்ஹர்ரானீ அத்திமஷ்கீ என்பதாகும். ஹி.661ல் பிறந்த இவர்கள் பகுத்தறிவுவாதிகள், ஸூ.்பியாக்கள், ஷீஆக்கள் போன்ற வழிகெட்ட பிரிவினருக்கெதிராக தகுந்த பதில் அளித்ததுடன் தத்தாரிகளின் படையெடுப்புக்கெதிரகவும் இவர்கள் ஆற்றிய பங்கு மகத்தானது எனலாம். பல மார்க்க நூற்களைத் தொகுத்த இமாம்களான இப்னுல் கைய்யிம், இப்னு கஸீர், .்தஹபீ போன்றோர் இவருடைய சிரேஷ்ட மாணவர்களாவர். இவர்கள் ஹி. 728ல் காலமானார்கள்.

முதல் மாதவிடாய் ஏற்பட்டுள்ளவளாகவே கணிக்கப்பட வேண்டும். ஏனெனில் அல்லாஹ்வும், அவனது தூதரும் மாதவிடாயின் சட்டங்களை (இரத்தம்) தென்படுவதிலேயே தொடர்புபடுத்தியுள்ளனர். அதற்கென குறிப்பிட்ட வயதெல்லையை நிர்ணயிக்கவில்லை. எனவே எந்த இரத்தத்துடன் சட்டங்கள் தொடர்புபடுத்தப் பட்டுள்ளதோ அதனையே அளவுகோலாகக் கருதுவது அவசியமாகும். அதனை ஒரு குறிப்பிட்ட வயதிற்குள் வரையறுப்பதாயின் அல்குர்ஆன் அல்லது ஸுன்னாவிலிருந்து ஆதாரத்தைப் பெறுவது அவசியமாகும். அதற்குரிய ஆதாரம் (அவ்விரண்டிலும்) காணப்பட முடியாது.

## இரண்டாவது: மாதவிடாயின் தவணை

மாதவிடாயின் குறைந்த கால அளவு, கூடிய கால அளவுகளைக் கணிப்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் சுமார் 6 - 7 கருத்துக்கள் காணப்படுகின்றன. மாதவிடாயில் குறைந்த கால அளவிற்கோ கூடிய கால அளவிற்கோ காலவரையறையை நிர்ணயிக்க முடியாது என ஒரு பிரிவினர் கூறுவதாக இமாம் இப்னுல் முன்திர்[1] (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர்.

நூலாசிரியர்: "நான் கூறுகிறேன்: இக்கருத்து முந்திய பாடத்தில் கூறப்பட்ட இமாம் தாரமீ (ரஹ்) அவர்களின் கருத்தைப் போன்றதே. ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்களின் தெரிவும் இதுவே. இக்கருத்தே மிகச்சரியானது. ஏனெனில் அல்குர்ஆனும், ஸுன்னாவும்,

---

(1) இமாம் இப்னுல் முன்திர்: அபூ பக்ர் முஹம்மத் பின் இப்ராஹீம் இப்னுல் முன்திர் என்பதே இவரின் பெயராகும். ஹி.242ல் பிறந்த இவர் மக்காவில் நீண்டகாலம் மார்க்கப் பேரறிஞராக செயற்பட்டது மாத்திரமின்றி பல நூற்களை எழுதியுள்ளார்கள். அல் இஜ்மா·. என்ற நூல் அவற்றுள் முதன்மையானதாகும். ஹி.319ல் இவர்கள் காலமானார்கள்.

கியாஸும்[1] இதனையே சுட்டிக்காட்டுகின்றன” எனக் குறிப்பிடுகின்றனர்.

### ஆதாரம் 01:

﴿ وَيَسْـَٔلُونَكَ عَنِ ٱلْمَحِيضِ ۖ قُلْ هُوَ أَذًى فَٱعْتَزِلُوا۟ ٱلنِّسَآءَ فِى ٱلْمَحِيضِ ۖ وَلَا تَقْرَبُوهُنَّ حَتَّىٰ يَطْهُرْنَ ﴾ [البقرة: ٢٢٢]

(நபியே!) மாதவிடாய் பற்றி அவர்கள் உம்மிடம் வினவுகின்றனர். அது ஓர் உபாதை(யான தீட்டு) என நீர் கூறும். ஆகவே மாதவிடாயின்போது பெண்களை விட்டும் விலகியிருங்கள். அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள். (அல்பகரா: 222).

(மாதவிடாய் காலத்தில் இல்லறத்தில் ஈடுபடக்கூடாது என்ற) தடையின் முடிவை (அவள்) தூய்மை அடைவதிலேயே அல்லாஹ் நிர்ணயித்துள்ளான். மாறாக, 1, 3, 15 நாட்கள் என குறிப்பிட்ட தவணை ஒன்றை வரையறையிடவில்லை. எனவே இத்தடைச் சட்டத்திற்குரிய பொதுவிதி மாதவிடாய் ஏற்படுவதும், தூய்மையாவதுமே (தவிர, நாட்களைக் கருத்திற்கொண்டல்ல) என்பது வெளிச்சமாகும். எனவே, மாதவிடாய் ஏற்படும்போது இ(த்தடை)ச்சட்டம் விதியாகி, தூய்மையடைந்ததும் நீங்கிவிடுகிறது என்பதே பொருத்தமானதாகும்.

### ஆதாரம் 02:

(ஹஜ்ஜதுல் வதா∴இன்[2] போது) அன்னை

---

(1) கியாஸ்: அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் நேரடியாகக் கூறப்படாத நவீன ஒரு பிரச்சினைக்கு அவ்விரண்டையும் வைத்து ஆராய்ந்து எடுக்கப்படும் முடிவுக்கே கியாஸ் எனப்படுகின்றது. இதற்கு சில நிபந்தனைகளும், விதிமுறைகளும் உள்ளன.

(2) ஹஜ்ஜதுல் வதா∴: ஹிஜ்ரி 10 ம் ஆண்டு நபி (ஸல்) அவர்களும், நபித்தோழர்களும் நிறைவேற்றிய இஸ்லாத்தின் (முதல்) ஹஜ் ஹஜ்ஜதுல் வதா∴ எனப்படும். நபி (ஸல்) அவர்கள் இதன் பின்பு சில மாதங்கள் மாத்திரமே வாழ்ந்தார்கள்.

ஆஇஷா[(1)] (ரழி) அவர்கள் உம்ரா[(2)] வுக்காக இஹ்ராம்[(3)] நிய்யத் வைத்த நிலையில் மாதவிடாய் ஏற்பட்டது. நபி (ஸல்) அவர்கள் அன்னையவர்களைப் பார்த்து நீர் சுத்தமாகும் வரை (க∴பாவைத்) தவாப் செய்வதைத் தவிர ஹாஜிகள்[(4)] செய்யும் ஏனைய வணக்கங்களைச் செய்வீராக எனப் பணித்தார்கள். துல்ஹஜ் மாதம் 10 வது நாளன்று தான் சுத்தமானதாக ஆஇஷா (ரழி) அவர்கள் கூறினார்கள்.[(5)]

புஹாரியின் அறிவிப்பில் நீர் (தூய்மையாகும் வரை) காத்திருப்பீராக. தூய்மையானதும் தன்ஈமுக்குச் சென்று மீண்டும் (உம்ராவுக்காக) இஹ்ராம் நிய்யத் வைப்பீராக என நபியவர்கள் கூறியதாக இடம்பெற்றுள்ளது[(6)]. எனவே,

---

(1) உம்முல் மு∴மினீன் (நம்பிக்கையாளர்களின் தாய்) ஆஇ'ா (ரழி) அவர்கள், (இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களின் நெருங்கிய தோழரும், அருமை நேசருமான அபூபக்ர் (ரழி) அவர்களின் செல்வப் புதல்வியாவார். நபியவர்கள் ஹிஜ்ரத் செல்வதற்கு முன்பே இவர்களைத் திருமணம் செய்திருந்தாலும், (ஹிஜ்ரத்தின் பின்பு) அவர்கள் 9 வயதை அடைந்திருந்த நிலையில் மதீனாவில் வைத்து இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். நபியவர்கள் மரணிக்கும்போது அவர்களின் வயது 18 ஆகும். அன்னையவர்கள் ஹிஜ்ரி 57 அல்லது 58 ல் மரணித்து பகீஉல் ∴கர்கதில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களுடைய (மரண சாசனத்திற்கினங்க) ஜனாஸாத் தொழுகையை அபூஹுரைரா (ரழி) நடத்தினார்கள்.

(2) உம்ரா: வசதியும் உடலாரோக்கியமும் உள்ள ஒரு முஸ்லிம் (மீக்காத்) எல்லையில் நிய்யத் வைத்து, மக்கா சென்று ஏழு முறை க∴பாவை வலம்வந்து, ஸபா மர்வா மலைகளுக்கு மத்தியில் ஏழு தடவை தொங்கோட்டம் ஓடி, தலை முடியைச் சிரைப்பதற்கே உம்ரா எனப்படும். இதனை நிறைவேற்ற சில விதிமுறைகளும், ஒழுங்குகளும் உள்ளன.

(3) இஹ்ராம்: ஹஜ் அல்லது உம்ரா வணக்கத்தில் நுழைவதற்காக நிய்யத் வைப்பதையே இஹ்ராம் எனப்படும். நிய்யத் வைத்தது முதல் வணக்கத்தை நிறைவேற்றி முடியும் வரை சில விடயங்களைத் தவிர்ந்திருப்பது அவசியமாகும்.

(4) ஹாஜிகள்: இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையாகிய ஹஜ் வணக்கத்தை நிறைவேற்றுபவர்களையே ஹாஜிகள் என்றழைக்கப்படுவர்.

(5) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), நூல்: முஸ்லிம் 1211.

(6) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி). நூல்: புஹாரி 305.

நபி (ஸல்) அவர்களும் இத்தடையின் முடிவை கால எல்லையை அன்றி தூய்மையடைவதைக் கவனித்தே கணிப்பிட்டுள்ளார்கள். மேலும், மாதவிடாயை மையமாக வைத்தே இச்சட்டம் தொடர்புபட்டுள்ளது என்பதை இ(ந்நபிமொழி) தெளிவுபடுத்துகின்றது.

### ஆதாரம் 03:

மார்க்க சட்டக்கலை அறிஞர்கள் முன்வைத்துள்ள இந்த ஆய்வுகள் மற்றும் விவரங்கள் பற்றித் தெளிவுபடுத்தப்பட வேண்டிய அவசியமிருந்தும் (இவை போன்ற விடயங்கள்) அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ விபரமாக விளக்கப்படவில்லை. அடியார்கள் இதனை விரிவாக விளங்கி வழிபட வேண்டியளவு அவசியமான சட்டமாக இருப்பின், தொழுகை, நோன்பு, விவாகம், விவாகரத்து, சொத்துரிமை போன்ற சட்டங்கள் நுணுக்கமாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதைப் போன்று, அல்லாஹ்வும் அவனது தூதரும் இச் சட்டங்களையும் மிகத் தெளிவாக விளக்கியிருப்பார்கள்.

தொழுகைகளின் எண்ணிக்கைகள், நேரங்கள், ருகூஃ[1], ஸுஜூத்[2] மற்றும் ஸகாத்[3], அது விதியாகும் பொருட்கள்,

(1) ருகூஃ: தொழுகையில் ஒவ்வொரு ரக்அத்திலும் பாத்திஹா அத்தியாயமும் இன்னொரு அத்தியாயமும் ஓதியதன் பின்பு இரு கைகளையும் முட்டுக்காலில் வைத்து குனிந்திருக்கும் நிலையே ருகூஃ எனப்படும்.

(2) ஸுஜூது: ருகூஃ செய்து விட்டு நடுநிலைக்கு வந்து நேராக நின்ற பின்பு முகம்,கை, கால்களை நிலத்தில் வைத்தவாறு சிரம் பணிவதற்கே ஸுஜூது எனப்படும்.

(3) ஸகாத்: இது இஸ்லாத்தில் தொழுகைக்கு அடுத்தபடியான மூன்றாவது பிரதான கடமையாகும். ஹிஜ்ரி 2ம் ஆண்டு இது விதியாக்கப்பட்டது. குறிப்பிட்ட சில பொருட்களில் குறிப்பிட்ட ஓர் அளவை எத்தும் போது விகிதாசார அடிப்படையில் அதிலிருந்து குறிப்பிட்ட ஒரு தொகையை 8 கூட்டத்தினருக்கு வழங்கும் கட்டாய தர்மமே ஸகாத் எனப்படும். இதனுடைய சட்ட திட்டங்கள் விரிவானவை.

அதன் நிஸாப்[1], விநியோகிக்கப்பட வேண்டிய காலம், அளவு, முறை போன்றவற்றை அல்லாஹ்வும், அவனது தூதரும் விளக்கியுள்ளனர். அவ்வாறே நோன்பின் காலவரையறை, ஹஜ்[2] பற்றிய விடயங்கள் மாத்திரமின்றி அதைவிட அற்ப விடயங்களான உண்ணல் பருகல் ஒழுக்கங்கள், தூங்குதல், இல்லறத்தில் ஈடுபடல், உட்காருதல், (வீட்டில்) நுழைதல், வெளியேறுதல் போன்றவற்றுடன் மலசலம் கழிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள், சுத்தம் செய்வதற்காகப் பயன்படுத்த வேண்டிய கற்களின் எண்ணிக்கை என அனைத்தும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மார்க்கத்தைப் பூர்த்தியாக்கி அடியார்களுக்கு அருள்புரியும் விதமாக நுட்பமான, வெளிரங்கமான பல்வேறு விடயங்கள் விளக்கப்பட்டுள்ளதைப் போன்று (மாதவிடாயின் காலவரையறை பற்றிய தெளிவையும் அல்லாஹ்வும், அவனது தூதரும்) விளக்கியிருப்பார்கள். அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

﴿وَنَزَّلْنَا عَلَيْكَ ٱلْكِتَٰبَ تِبْيَٰنًا لِّكُلِّ شَىْءٍ﴾ [النحل: ٨٩]

மேலும், இவ்வேதத்தை ஒவ்வொன்றையும் தெளிவுபடுத்தக்கூடியதாக உம்மீது நாம் இறக்கி வைத்துள்ளளோம். (அந்நஹ்ல்: 89).

﴿مَا كَانَ حَدِيثًا يُفْتَرَىٰ وَلَٰكِن تَصْدِيقَ ٱلَّذِى بَيْنَ يَدَيْهِ وَتَفْصِيلَ كُلِّ شَىْءٍ﴾
[يوسف: ١١١]

---

(1) நிஸாப்: எந்தெந்தப் பொருட்களில் ஸகாத் கடமையாகுமோ அப்பொருட்கள் குறிப்பிட்ட ஓர் அளவை எத்தினால் மாத்திரமே ஸகாத் கடமையாகும். அவ்வாறு ஒவ்வொரு பொருளிலும் எத்த வேண்டிய அளவையே நிஸாப் எனப்படும்.

(2) ஹஜ்: இது இஸ்லாத்தில் பிரதானமான இறுதிக் கடமையாகும். ஹிஜ்ரி 6 அல்லது 9ல் இது விதியாக்கப்பட்டது. வசதியும், ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தனது வாழ்நாளில் ஒரு தடவை இக்கடமையை நிறைவேற்றுவது அவசியமாகும். இஸ்லாமிய ஆண்டின் கடைசி மாதமான துல்ஹஜ் மாதத்தில் மக்கா நகரிலேயே இக்கடமை நிறைவேற்றப்படுகிறது.

இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாக இருக்கவில்லை. எனினும், இதற்கு முன்னுள்ள (வேதத்)தை உண்மைப்படுத்தக் கூடியதாகவும், ஒவ்வொன்றையும் விபரிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. (யூஸுப்: 111).

அல்குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ அதைப்பற்றிய எவ்வித மதிப்பீடுகளோ, விவரங்களோ குறிப்பிடப்படாதபோது அதில் கருத்துவேறுபாடு கொள்வதைத் தவிர்த்து மாதவிடாய் என்ற பெயரையே சார்ந்திருக்க வேண்டும். மாதவிடாய் ஏற்பட்டுள்ளதா, இல்லையா என்பதைக் கருத்திற்கொண்டே மார்க்க சட்டங்கள் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

அல்குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ கூறப்படாத சட்டத்தை ஏற்க முடியாது என்ற பொது விதிக்கிணங்க (இந்த மூன்றாம் ஆதாரம்) இந்த (மாதவிடாய்) விடயத்திலும், ஏனைய மார்க்க விடயங்களிலும் உங்களுக்குப் பயனளிக்கும். ஏனெனில் மார்க்க சட்டங்களைப் பொருத்த வரை, அவை அல்குர்ஆன் அல்லது ஸுன்னவிலிருந்து பெறப்படும் ஆதாரம் மூலமாகவோ, அல்லது அறியப்பட்ட இஜ்மா‍ஃ[1], ஏற்கப்படத்தக்க கியாஸ் மூலமாகவோ தவிர நிரூபணமாகமாட்டாது.

ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் தமது பொது விதியொன்றை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்: இது போன்ற சட்டங்களைச் சார்ந்ததுதான் மாதவிடாயும். அல்லாஹ் அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் பல்வேறு சட்டங்களை அதனுடன் தொடர்பு

(1) இஜ்மாஃ : இஸ்லாத்தின் துணை மூலாதாரங்களில் இதுவும் முதன்மையானது. நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்பு, அல்குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ கூறப்படாத ஒரு பிரச்சினைக்கு ஒரே காலத்தில் வாழும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க தகுதியான அறிஞர்களால் அவ்விரண்டையும் அடிப்படையாகக்கொண்டு ஆராய்ந்து எடுக்கப்படும் தீர்ப்பில் கருத்து வேற்றுமையின்றி ஒன்றுபடுவதே இஜ்மாஃ எனப்படும்.

படுத்திக் குறிப்பிட்டுள்ளான். எனினும், அதன் குறைந்த, கூடிய அளவுகளையோ, இரு மாதவிடாய்களுக்கு இடைப்பட்ட தூய்மையான காலஅளவு பற்றியோ (மக்கள் இதனால் சோதிக்கப்பட்டும், அதனை விளக்கும் தேவையிருந்தும்) அவன் வரையறுக்கவில்லை. (அரபு) மொழியும் இரு அளவுகளையும் வேறுபடுத்திக் காட்டவில்லை. இவ்வாறிருந்தும், யார் (மாதவிடாயின் கால எல்லைக்கு) வரையறை இடுகின்றாரோ அவர் அல்குர்ஆனுக்கும், ஸுன்னாவிற்கும் மாறுசெய்துவிட்டார்.(1)

### ஆதாரம் 04: கியாஸ்

மாதவிடாய்(ச் சட்டத்திற்)கான காரணத்தை இறைவன் குறிப்பிடும்போது (அதிலுள்ள) தீங்கையே சுட்டிக் காட்டியுள்ளான். அவ்வகையில், மாதவிடாயுடன் இருக்கும் காலமெல்லாம் தீங்கும் இருப்பது இயல்பாகும். மாறாக, 2 ஆம் முதலாம் நாட்களுக்கு மத்தியிலோ, 4 ஆம் 3 ஆம் நாட்களுக்கு மத்தியிலோ, 16 ஆம் 15 ஆம் நாட்களுக்கு மத்தியிலோ, 18 ஆம் 17 ஆம் நாட்களுக்கு மத்தியிலோ எவ்வித வேறுபாடும் கிடையாது. மாதவிடாய் என்பது மாதவிடாயே, தீங்கு என்பது தீங்கே. (தீங்கு என்ற) நிலை இரு தினங்களிலும் ஒத்த தன்மையுடையதாகவே உள்ளது. இரு தினங்களின் காரணங்களும் வேறுபாடின்றி ஒன்றாக இருக்கும்போது சட்டத்தில் மாத்திரம் எவ்வாறு வேறுபாடு காண முடியும்? இது சரியான அளவுகோலுக்கு மாற்றமாக இல்லையா? இரு தினங்களின் காரணங்களும் ஒன்றாக இருக்கும் பட்சத்தில், சட்டத்திலும் அவ்விரு தினங்களையும் சமப்படுத்துவதுதானே சரியான (அளவீடு) கியாஸாகும்.

(1) பார்க்க: ஃபதாவா இப்னி தைமிய்யா பாகம்: 19 பக்கம்: 237.

## ஆதாரம் 05:மாறுபட்ட கருத்துக்களும் முரண்பாடுகளும்

(மாதவிடாயின் காலவரையறையை) நிர்ணயிப் பவர்களின் மாறுபட்ட கருத்துக்களும் முரண்பாடுகளும், இப்பிரச்சினையில் சரியானதைத் தீர்மானிக்கத் தகுந்த எந்தொரு ஆதாரமும் இல்லை என்பதையே உணர்த்துகின்றன. இவை ஒன்றில் சரியாகவும் இருக்கலாம் அல்லது தவறாகவும் இருக்கலாம் என்ற இரு நிலைகளுக்கும் வாய்ப்புள்ள, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சட்டங்களே. இதில் ஒன்றை விட மற்றொன்று தெரிவுசெய்யத் தகுந்தது என்ற நிலையைப் பெறமுடியாது. ஆகவே, இவ்வாறான பிரச்சினைகளின்போது அல்குர்ஆனின், ஸ"ன்னாவின் பக்கம் மீளுவதே சாலச்சிறந்தது.

மாதவிடாயின் குறைந்த கால அளவிற்கோ அல்லது கூடிய கால அளவிற்கோ வரையறை எதுவும் இல்லை என்ற கூற்றே கூற்றுக்களில் உறுதியானதும், சரியானதும் என்பதை நீங்கள் புரிந்து கொண்டால், காயம் போன்ற வெளிக்காரணம் எதுவுமின்றி ஒரு பெண் இயற்கையாகக் காணும் சகல விதமான இரத்தங்களையும் காலத்தையோ, வயதையோ கருதாது அது மாதவிடாய் இரத்தம் என்பதை அறிந்துகொள்ளலாம். எனினும் இரத்தம் (தடைப்படாது) தொடர்ந்து வருமாயின் அல்லது மாதத்தில் ஓரிரு நாட்கள் மாத்திரம் நின்றுவிட்டு ஏனைய நாட்களில் தொடர்ந்து வந்தால் அதனை இஸ்திஹாழா (தொடருதிரப்போக்கு) எனப்படும். அதன் விபரம் பின்னர் கூறப்படும். இன்ஷா அல்லாஹ்.

ஷைஹு"ல் இஸ்லாம் இப்னு தைமிய்யா.'. (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: "இஸ்திஹாழா என்று நிரூபணமாகும் வரை, கற்பப்பையிலிருந்து வெளிவரும் அனைத்துவித இரத்தங்களும் மாதவிடாய் என்பதே அடிப்படையாகும்[1]. காயம் அல்லது பரம்பரை (நோயின்

(1) பார்க்க: .'.பதாவா இப்னி தைமிய்யா பாகம்: 19 பக்கம்: 238.

காரணமாக வெளியாகும்) இரத்தம் என்று அறியப்படாதவரை (பெண்ணின் கற்பப்பையிலிருந்து) வெளிவரும் இரத்தம் மாதவிடாயாகும்”[1].

மாதவிடயயைக் கணிப்பதில் வரையறை விதித்தவர்களுடைய கருத்தைவிட (எதிர் மறையான) இக்கூற்று ஆதார அடிப்படையில் பலமிக்கது போன்றே, புரிந்து கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் மிகச் சுலபமானதாக உள்ளது. இஸ்லாமிய மார்க்கத்தின் உயிர் நாடியையும், பொது விதியையும் இக்கூற்று அனுசரித்துப் போவதனால் மேற்கூறப்பட்டது போன்ற இக்கருத்தே ஏற்கப்பட மிகத் தகுதியானதாகும். அ(ந்த உயிர் நாடியான)து வசதி மற்றும் எளிது என்பதாகும். இறைவன் பின்வருமாறு கூறுகின்றான்:

﴿وَمَا جَعَلَ عَلَيۡكُمۡ فِي ٱلدِّينِ مِنۡ حَرَجٖ﴾ [الحج: ٧٨]

இந்த மார்க்கத்தில் அவன் உங்களுக்கு எவ்வித சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை. (அல் ஹஜ்: 78).

நபி (ஸல்) அவர்கள்: “நிச்சயமாக இந்த மார்க்கம் எளிதானது. இம்மார்க்கத்தை எவரும் (தமக்கு) சிரமமானதாக ஆக்கினால், அவரை அது மிகைத்துவிடும். எனவே, நடு நிலையையே மேற்கொள்ளுங்கள், இயன்ற வற்றைச் செய்யுங்கள், நற்செய்தியையே சொல்லுங்கள்” என்று கூறினார்கள்[2]. அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: “நபி (ஸல்) அவர்களுக்கு இரண்டு விடயங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் அவர்கள் அவ்விரண்டில் இலகுவானதையே (அது பாவமாக இல்லாதிருக்கும் பட்சத்தில்) எப்போதும் தேர்ந்தெடுப்பார்கள்”[3] எனப் பகன்றார்கள்.

---

(1) பார்க்க: ஃபதாவா இப்னி தைமிய்யா பாகம்: 19 பக்கம்: 241.

(2) அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரழி), நூல்: புஹாரி 39.

(3) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), நூல்: புஹாரி 3560, முஸ்லிம் 2327.

## கர்ப்பிணியின் மாதவிடாய்:

பெரும்பாலும் ஒரு பெண் கருவுற்றால் அவளுடைய மாதவிடாய் நின்றுவிடுகிறது. இமாம் அஹ்மத் பின் ஹன்பல்[1] (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: "மாதவிடாய் நின்று விடுவதன் மூலமே பெண்கள் தாம் கருவுற்றிருப்பதை அறிகின்றனர்."[2]. ஒரு கர்ப்பிணி தனது பிரவசவத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு பிரசவ வலியுடன் இரத்தம் வெளியாவதைக் கண்டால் அது பிரசவ இரத்தமாகும். பிரசவத்திற்கு நீண்ட நாட்களுக்கு முன்னரோ, அல்லது சில நாட்களுக்கு முன்னர் வலியின்றியோ இரத்தம் வெளியானால் அதனை பிரசவ இரத்தமாகக் கருதக்கூடாது. எனினும் அதனை மாதவிடாயாகக் கருதுவதா? அல்லது நோயால் ஏற்படும் இரத்தமாகக் கருதுவதா? என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுள்ளது.

அவ்விரத்தம் அவளது வழக்கமான மாதவிடாய்ச் சுழற்சியுடன் காணப்பட்டால் அது மாதவிடாய் என்பதே வலுவான கருத்தாகும். ஏனெனில் மாதவிடாய் என்று கூறுவதைத் தடுக்கும் காரணிகள் இல்லாதபோது பெண்ணிலிருந்து வெளியாகும் இரத்தம் மாதவிடாய்

---

(1) அபூ அப்தில்லாஹ் அஹ்மத் பின் முஹம்மத் பின் ஹன்பல் அஷ்ஷைபானீ அல்மாதினீ என்ற இவர் பிரபலமான மார்க்க அறிஞராவார். ஹி.164ல் பிறந்த இவர் பலரிடத்தில் கல்வி பயின்றுள்ளார்கள். அவர்களில் இமாம் ஷாபிஈ (ரஹ்) குறிப்பிடத்தக்கவர். இமாம்களான புஹாரி, முஸ்லிம், அபூ தாவூத் போன்ற ஹதீஸ்துறை ஆசிரியர்களும் இவரிடத்தில் கல்வி கற்றுள்ளமை இவரின் சிறப்பாகும். இஸ்லாமிய அடிப்படைக் கொள்கையில் உறுதி மிக்கவராக இருந்ததன் காரணமாக மு.ஃ.தஸிலாக்களால் துன்புறுத்தப்பட்டார்கள். இவர்கள் தொகுத்த முஸ்னத் எனும் ஹதீஸ் நூலே நபிமொழித் தொகுப்புகளில் பெரியதாகும். தனது 77வது வயதில் ஹி.241ல் பக்தாதில் இறையடி சேர்ந்தார்கள்.

(2) அல்மு.ஃ.னீ (இமாம் இப்னு ஃ.குதாமா என்பவர்களுக்குரியது), பாகம்: 01, பக்கம்: 444

என்பதே அடிப்படையாகும். அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ கர்ப்பிணிகளுக்கு மாதவிடாய் ஏற்படமாட்டாது எனக் கூறப்படவில்லை.

இமாம்களான மாலிக்[1] (ரஹ்), ஷாபிஈ[2] (ரஹ்) ஆகியோரின் மத்ஹப்களும்[3] இக்கருத்தையே கொண்டுள்ளதுடன்

(1) அபூ அப்தில்லாஹ் மாலிக் பின் அனஸ் அல் அஸ்பஹீ அல் ஹிம்யரீ என்ற இவர் இமாமு தாரில் ஹிஜ்ரா.. (மதீனாவின் இமாம்) என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்கள். ஹி. 93 ல் பிறந்த இவர் ரபீஅதுர்ர.ய் என்ற அறிஞர் உட்பட பல்வேறு அறிஞர்களிடம் கல்வியைத் தொடர்ந்துள்ளார்கள். ஷு..பா, ஷாபிஈ, ஸஈத் பின் மன்ஸூர் போன்ற இமாம்களும் இவர்களிடம் கல்வி பயின்றுள்ளனர். அல் முவத்தா என்ற நபிமொழிக் கிரந்தத்தை தொகுத்தெழுதியதன் மூலம் ஹதீஸ்களை முதலில் நூலுருப்படுத்திய பெருமை இவரையே சாரும். இவர்கள் தமது 86வது வயதில் ஹி.179ல் மறைந்தார்கள்.

(2) அபூ அப்தில்லாஹ் முஹம்மத் பின் இத்ரீஸ் பின் அல் அப்பாஸ் அல்குரஷீ அல்முத்தலிபீ அஷ்ஷாபிஈ என்ற பெயரைக் கொண்ட இவர் பல கலைகளில் தேர்ச்சி பெற்ற பிரபலமான மார்க்க அறிஞராவார். ஹி. 150 ல் பிறந்த இவர், இமாம் மாலிக் (ரஹ்), ஸுப்யான் இப்னு உயைனா (ரஹ்) போன்ற புகழ்பெற்ற மார்க்க அறிஞர்களிடத்தில் கல்வி பயின்றுள்ளதோடு இமாம் புஹாரியின் ஆசிரியரான அல் ஹுமைதீ (ரஹ்) மற்றும் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) போன்றோருக்கு ஆசிரியராகவும் திகழ்ந்துள்ளார்கள். அர்ரிஸாலா எனும் நூலை எழுதியதன் மூலம் உஸூலுல் பிக்ஹ் (மார்க்கச் சட்டக் கலையின் அடிப்படைகள்) என்ற கலையை நூலுருவில் வடிவமைத்த சிறப்பைப் பெற்றார்கள். மேலும் அரபு மொழியில் தேர்ச்சி பெற்று கவிஞராகவும் காணப்பட்டார்கள். தனது 54வது வயதில் ஹி.204ல் எகிப்தில் காலமானார்கள்.

(3) மத்ஹப்: குறிப்பட்ட ஓர் மார்க்க அறிஞரின் மார்க்க சம்பந்தமான கருத்துக்களுக்கே மத்ஹப் எனப்படும். அவ்வறிஞரின் மறைவுக்குப் பின்பு அவருடைய மாணவர்களோ அல்லது வேறு சிலரோ அவர் முன்வைத்த கருத்துக்களைத் தொகுத்து அதனை அந்த அறிஞருடைய மத்ஹப் என்று கூறுவர். இவ்வாறு (பிக்ஹு) மார்க்கச் சட்டக் கலையில் நான்கு மத்ஹப்கள் பிரபல்யமானவை. அவை:

1. இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களின் கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ள ஹனபீ மத்ஹப்.
2. இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ள மாலிக் மத்ஹப்.

ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்)வின் தெரிவும் இதுவாகும். அவர்கள் "இ∴க்தியாராத்" எனும் தனது நூலில்: "இதனை இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களின் ஓர் அறிவிப்பாக இமாம் பைஹகீ[1] (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மாறாக, இக்கருத்தளவில் (இமாம் அஹ்மத் அவர்கள் பின்னர்) மாறியதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார்கள்.[2] இதனடிப்படையில், இரண்டு விடயங்களைத் தவிர கர்ப்பிணியல்லாத மாதவிடாய்ப் பெண்ணுக்கு இருக்கும் சட்டங்கள் அனைத்தும் கர்ப்பிணியான மாதவிடாய்ப் பெண்ணுக்கும் உண்டு என்பதை அறியலாம். அவ்விரு விடயங்களும்:

## 1. விவாகரத்து.

"இத்தா"[3] விதியாகும் சாதாரண பெண்ணை

3. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ள ஷாபிஈ மத்ஹப்.
4. இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் கருத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ள ஹன்பலி மத்ஹப்.

இவையன்றி இமாம் ஸுப்யானுத் ∴தவ்ரீ, இமாம் ஒவ்∴தாஈ போன்றோருக்கும் மத்ஹப்கள் இருப்பினும் அவை மக்களுக்கு மத்தியில் பிரபல்யம் பெறவில்லை. மத்ஹப்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அல்குர்ஆன் மற்றும் நபி மொழிக்கு நேர்படுவதாக இருந்தால் மாத்திரமே எடுக்க வேண்டும். மாறாக அவை அல்குர்ஆன், ஸுன்னாவுக்கு முரண்படுமாயின் அவற்றைக் கைவிட்டுவிட்டு அல்குர்ஆன், ஸுன்னாவுக்கே முதலிடம் வழங்கவேண்டும்.

(1) அஹ்மத் பின் ஹுஸைன் பின் அலீ அபூ பக்ர் அல்பைஹகீ என்பவர் பிரபல ஹதீஸ் கலை அறிஞராவார். ஹி.384ல் பிறந்த இவர் அல் முஸ்தத்ரக் என்ற ஹதீஸ் நூலின் ஆசிரியர் அபூ அப்தில்லாஹ் அல்ஹாகிம், மற்றும் இப்னு ∴பொவ்ரக் என்போரிடம் கல்வி பயின்றார்கள். அஷ்அரிய்யாச் சிந்தனையுடைய இப்னு ∴பொவ்ரக்கிடம் கற்றதால் அதே வழி தவறிய கொள்கையால் இவரும் கவரப்பட்டார்கள். அஸ்ஸுனனுல் குப்ரா, தலாஇலுன் நுபுவ்வா∴ போன்ற பிரபலமான நூல்களை எழுதிய இவர் ஹி.458ல் இறந்தார்கள்.

(2) அல் இ∴க்தியாராத் - பக்கம்: 30.

(3) இத்தா: விவாகரத்தின் மூலமோ மரணத்தின் மூலமோ கணவனை இழந்த ஒரு

(அவளுடைய) மாதவிடாய்க் காலத்தில் விவாகரத்துச் செய்வது தடையாகும். ஆனால் கர்ப்பிணியை விவாகரத்துச் செய்வது தடையாகமாட்டாது. ஏனெனில் சாதாரண பெண்ணை (அவளுடைய) மாதவிடாய்க் காலத்தில் விவாகரத்துச் செய்வது பின்வரும் இறைவசனத்திற்கு முரண்படுகின்றது:

﴿فَطَلِّقُوهُنَّ لِعِدَّتِهِنَّ﴾ [الطلاق: ١]

“அவர்களின் இத்தாவைக் கணக்கிட ஏற்ற வகையில் (மாதவிடாய் அல்லாத காலங்களில்) தலாக் கூறுங்கள்”. (அத்தலாக்: 01). ஆனால் கர்ப்பிணியை (அவளுடைய) மாதவிடாய்க் காலத்தில் விவாகரத்துச்செய்வது (இவ்வசனத்திற்கு) முரணாகாது. ஏனெனில் கர்ப்பிணியை விவாகரத்துச் செய்பவன் (அவள் மாதவிடாயுடன் இருந்தாலும் தூய்மையானவளாக இருந்தாலும்) அவளுடைய இத்தாவின் காலத்தைக் கணிக்கக் கூடிய வகையிலேயே விவாகரத்துச் செய்கின்றான். காரணம், கர்ப்ப காலத்தில் விவாகரத்துச் செய்யப்பட்டால் பிரசவத்தின் மூலமே “இத்தா” நிறைவு பெறுகின்றது. எனவேதான் சாதாரண பெண்களின்றி கர்ப்பிணிகளுடன் உறவுகொண்ட பின்பும் விவாகரத்துச் செய்வது தடையாகமாட்டாது.

### உ. கர்ப்பிணியின் மாதவிடாய் “இத்தா”வில் கணக்கிடப் படமாட்டாது.

சாதாரண பெண்களுக்கு மாற்றமாக கர்ப்பிணி விவாகரத்துச் செய்யப்பட்டு “இத்தா” அனுஷ்டிக்கும் காலப்பகுதியில் மாதவிடாய் ஏற்பட்டால் அதனைக்

பெண் அல்லாஹ்வின் ஏவலுக்குக் கட்டுப்பட்டவளாகவும், தான் கர்ப்பமுற்றவளாக இல்லை என்பதை உறுதிப்படுத்தவும் குறிப்பிட்ட காலத்திற்கு மறுமணம் செய்யாமல் துக்கம் அனுஷ்டிப்பதையே இத்தா எனப்படும். இதன் விரிவான சட்டங்கள் அல்குர்ஆனிலும், நபிமொழிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கணக்கிட்டு அவளுடைய இத்தாவை நிறைவு செய்யமுடியாது. ஏனெனில் கர்ப்பிணியின் “இத்தா” வின் காலம் (மாதவிடாய் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும்) பிரசவத்தின் மூலமே நிறைவு பெறுகின்றது. அதனைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

﴿وَأُوْلَٰتُ ٱلۡأَحۡمَالِ أَجَلُهُنَّ أَن يَضَعۡنَ حَمۡلَهُنَّۚ﴾ [الطلاق: ٤]

கர்ப்பிணிகளுக்குரிய (இத்தாக்) காலக்கெடு அவர்கள் தமது சுமையைப் பிரசவிக்கும் வரையிலாகும். (அத்தலாக்: 04).

# பாடம் 03

# மாதவிடாயில் தற்செயலாக ஏற்படும் மாற்றங்கள்

மாதவிடாயில் தற்செயலாக ஏற்படும் மாற்றங்கள் பல உள்ளன:

**I. வழமையாக மாதவிடாய் ஏற்படும் நாட்களின் எண்ணிக்கை மாறுபடல்:**

உதாரணமாக, வழமையாக ஆறு நாட்களுக்கு நீடிக்கும் மாதவிடாய் இம்முறை ஏழாவது நாள் வரை நீடித்தல், அல்லது வழமையாக ஏழு நாட்கள் நீடிக்கும் மாதவிடாய் இம்முறை ஆறு நாட்களிலேயே நின்றுவிடுதல்.

**உ. மாதவிடாய் ஏற்படும் வழமையான காலம் மாறுபடல்:**

உதாரணமாக, வழமையாக மாத இறுதியில் மாதவிடாய் ஏற்படும் ஒரு பெண்ணுக்கு இம்முறை மாத ஆரம்பத்திலேயே ஏற்படுதல், அல்லது வழமையாக மாத ஆரம்பத்திலேயே ஏற்படும் ஒரு பெண்ணுக்கு இம்முறை மாத இறுதியில் ஏற்படுதல்.

இவ்விரு நிலைகளிலும் மாதவிடாயை தீர்மானிப்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

“ஒருபெண் எப்போது இரத்தத்தைக் காண்கிறாளோ

அப்போது அவள் மாதவிடாய் ஏற்பட்டவளாகவும், எப்போது இரத்தம் நின்றுவிடுமோ அப்போது அவள் தூய்மையானவளாகவும் கருதப் படுவாள். நாட்களின் எண்ணிக்கையிலோ, காலத்திலோ மாற்றம் ஏற்படினும் சரியே" என்பதே மிகப் பலமான கருத்தாகும். சென்ற பாடத்தில் இதன் விளக்கம் ஆதாரங்களுடன் விவரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

அல்லாஹ்வும், அவனது தூதரும் மாதவிடாயின் சட்டங்களை மாதவிடாய் ஏற்படுதல் என்பதிலேயே தொடர்பு படுத்தியுள்ளனர். இதுவே ஷாபிஈ மத்ஹபுடைய கருத்தும், ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்களின் தெரிவுமாகும். இமாம் இப்னு ஃகுதாமா[(1)] (ரஹ்) அவர்களும் தனது அல்முஃனீ என்ற நூலில் இதனையே உறுதிப்படுத்தியுள்ளார்கள். அவர் பின்வருமாறு கூறியுள்ளார்:

(ஹன்பலி) மத்ஹபில் கூறப்பட்டுள்ள விதத்தில் (மாதவிடாயில்) வழமை என்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமாயின் அதனை நபியவர்கள் தமது சமூகத்திற்குத் தெளிவு படுத்தியிருப்பார்கள். அதனைத் தெளிவுபடுத்துவதைத் தாமதப்படுத்த முடியாது. ஏனெனில் (ஒன்றைத்) தெளிவுபடுத்துவதில் அதற்குரிய நேரத்தைவிடத் தாமதப்படுத்தலாகாது. நபி (ஸல்) அவர்களுடைய மனைவியரும், ஏனைய பெண்களும் அது பற்றிய தெளிவுபெறத் தேவையுடையோராக இருந்தும், அதுபற்றி

(1) அபூ முஹம்மத் முவப்ஃபகுத் தீன் அப்துல்லாஹ் பின் அஹ்மத் பின் முஹம்மத் பின் ஃகுதாமா அல்மக்திஸீ அத்திமஷ்கீ அல்ஹன்பலீ என்ற இவர் இப்னு ஃகுதாமா என்று அறியப்பட்டவராவார். ஹி.541ல் பலஸ்தீனில் பிறந்த இவர் சிரியாவின் தலைநகர் திமஷ்க் (டமஸ்கஸ்) சென்று மார்க்கக் கல்வியைத் தொடர்ந்தார். இமாம் அப்துல் ஃகனீ அல் மக்திஸீ அவர்களின் உறவினரான இவர் ஹன்பலி மத்ஹபில் பிரபலமான ஓர் அறிஞராகக் கருதப்பட்டார். மார்க்கச் சட்டக்கலை (ஃபிக்ஹு) தொடர்பான அல்முஃனீ, அல்காபீ, அல்முக்னிஃ போன்ற பல நூற்களை எழுதிய இவர் ஹி. 620 ல் மறைந்தார்கள்.

நபியவர்கள் பராமுகமாக இருந்திருக்க வாய்ப்புக்கள் அறவே இல்லை. தொடர் உதிரப்போக்குள்ள பெண்ணின் விடயம் பற்றியே தவிர வழமை பற்றிய எவ்விதச் செய்திகளையும் நபியவர்கள் குறிப்பிடவில்லை.[1]

**3. மஞ்சள் அல்லது மஞ்சள், கறுப்புக்கு இடையிலான மண் நிறம்:**

காயங்களிலிருந்து வெளிவரும் சீழைப் போன்ற மஞ்சள் நிறத்திலோ, அல்லது மஞ்சள், கறுப்புக்கு இடையிலான மண் நிறத்திலோ இரத்தம் வெளியாகுதல். மாதவிடாயின் போது, அல்லது தூய்மையாவதற்கு முன்பு மாதவிடாயைத் தொடர்ந்து இவ்வாறு வெளியானால் அதனையும் மாதவிடாயாகவே கருதப்படும். மாதவிடாயின்போது கடைபிடிக்கப்பட வேண்டிய சகல சட்டங்களும் இந்நிலையிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தூய்மையடைந்த பின்பு இவ்வாறு (மஞ்சள் அல்லது மண் நிறத்தில் இரத்தம்) வெளியானால் அதனை மாதவிடாயாகக் கருதப்பட மாட்டாது. ஏனெனில் (மாதவிடாயிலிருந்து) தூய்மை யடைந்த பின்பு மஞ்சள் அல்லது மஞ்சள், கறுப்புக்கு இடையிலான மண் நிறத்தில் வெளியாகும் இரத்தத்தை நாம் பொருட்படுத்தமாட்டோம் என உம்மு அதிய்யா[2] (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.[3]

---

(1) அல் முஃக்னீ: பாகம் 1, பக்கம் 256.

(2) உம்மு அதிய்யா என்று பிரபல்யமான இந்த நபித்தோழியின் பெயர் நுஸைபா பின்துல் ஹாரிஸ் (ரழி) என்பதாகும். (மதீனாவைச் சேர்ந்த) அன்ஸாரித் தோழியான இவர் நபியவர்களைத் தொட்டும் பல ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள். அவற்றில் ஜனாஸாக் குளிப்பாட்டும் முறை, மாதவிடாய் சம்பந்தப்பட்டவை குறிப்பிடத்தக்கவை. நபி (ஸல்) அவர்களின் புதல்வி ஸைனப் (ரழி) அவர்கள் மரணித்ததும் அவர்களது ஜனாஸாவை குளிப்பாட்டிய பெண்மணியும் இவர்களாவார். பிற்காலத்தில் பஸரா நகர் சென்ற இவர்கள் ஹி. 70 ல் அங்கேயே மரணித்தார்கள்.

(3) புஹாரி: 326.

இதனை பலமான அறிவிப்பாளர் வரிசையுடன் இமாம் அபூ தாவூத்[1] (ரஹ்) அவர்கள் அறிவிப்புச் செய்துள்ளார்கள். "தூய்மையடைந்த பின்பு" என்ற வார்த்தையைத் தவிரவுள்ள ஏனையவற்றை இமாம் புஹாரி[2] (ரஹ்) அவர்களும் அறிவிப்புச் செய்துள்ளார்கள். எனினும் மாதவிடாய் அல்லாத காலத்தில் வெளியாகும் மஞ்சள் அல்லது மஞ்சள், கறுப்புக்கு இடையிலான மண் நிறத் திரவம் பற்றிய பாடம் என்றே அதற்குத் தலைப்பிட்டுள்ளார்கள்[3]. ஸஹீஹுல் புஹாரியின் விளக்கவுரை "பத்ஹுல் பாரீ" என்ற நூலில் அதன் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்: ஏற்கனவே ஆஇஷா (ரழி) அவர்களின் ஹதீஸில் கூறப்பட்ட வெள்ளைத் திரவத்தைக் காணும் வரை என்ற கூற்றுக்கும்,

(1) ஸுலைமான் பின் அஷ்அஸ் அஸ்ஸிஜிஸ்தானீ (ரஹ்) என்ற இவர் அபூ தாவூத் என்ற புனைப்பெயர் கொண்டே மக்களிடத்தில் அறியப்பட்டனர். ஹி. 202 ல் பிறந்த இவர், இமாம் அஹ்மத் பின் ஹன்பல் மற்றும் இப்னு அபீ ஷைபா போன்றோரின் மாணவர்களில் ஒருவராகக் காணப்பட்டதுடன், இமாம் திர்மிதீ, இமாம் அபூ தாவூதின் மகன் அப்துல்லாஹ் போன்றோரின் ஆசான்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்கள். ஸுனன் அபீதாவூத் என்ற பிரபலமான ஹதீஸ் தொகுப்பின் நூலாசிரியரான இவர் மேலும் பல நூற்களை எழுதியுள்ளார்கள். ஹி. 275 ல் மறைந்தார்கள்.

(2) அபூ அப்தில்லாஹ் என்பது இவரின் புனைப் பெயராகும். இவரது பெயர் முஹம்மத் பின் இஸ்மாஈல் பின் இப்ராஹீம் இப்னு முஃகீரா இப்னு பர்திஸ்பஹ் அல் ஜுஃபீ அல் புஹாரீ என்பதாகும். ரஷ்யாவிலுள்ள புஹாரா எனும் ஊரில் ஹி. 194 ல் பிறந்த இவர்கள் இமாம், அல்லாமா, அல்ஹாபிழ் (பாரிய மனனச்சக்தி கொண்டவர்), இமாமுத் துன்யா போன்ற பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டார். அபூ பக்ர் அல் ஹுமைதீ, யஹ்ஹா பின் மஈன், அஹ்மத் பின் ஹன்பல் போன்ற மாபெரும் இமாம்களிடத்தில் கல்வி கற்றதுடன், முஸ்லிம், திர்மிதீ, இப்னு ஹுஸைஃதமா போன்ற மாபெரும் இமாம்களின் ஆசிரியராகவும் திகழ்ந்தார்கள். அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் வைத்து மதிக்கப்படும் நூலான ஸஹீஹுல் புஹாரியின் நூலாசிரியரான இவர் மேலும் பல நூற்களை எழுதியுள்ளமை இவர்களின் சிறப்பம்சமாகும். ஹி 256 ல் இவ்வுலகை விட்டும் பிரிந்தார்கள்.

(3) ஸஹீஹுல் புஹாரி: அத்தியாயம் 6, பாடம் 25.

இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உம்மு அதிய்யா (ரழி) அவர்களுடைய ஹதீஸுக்கு மிடையில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் இவ்வாறு தலைப்பிட்டுள்ளார்கள்.

அவ்விணக்கப்பாடு பின்வருமாறு: "வெள்ளைத் திரவத்தைக் காணும் வரை" என்ற ஆஇஷா (ரழி) அவர்களுடைய பொன்மொழி மாதவிடாயின்போது ஒரு பெண் காணும் மஞ்சள் அல்லது மண் நிறத் திரவத்தையே குறிக்கின்றது. அவ்வாறு கண்டாலும் வெள்ளைத் திரவத்தைக் காணும் வரை அவசரப்படக் கூடாது. ஏனைய காலங்களில் வெளிப்படும் மஞ்சள் மற்றும் மண் நிறத் திரவம் உம்மு அதிய்யா (ரழி) அவர்களின் பொன்மொழியின்படி மாதவிடாயாகக் கணிக்கப்படமாட்டாது.[1]

இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் மேற்கூறப்பட்ட பாடத்திற்கு முந்திய பாடத்தில் அறிவிப்பாளர் வரிசையை நீக்கிவிட்டுக் கூறிய அதே செய்தியே மேலே சுட்டிக்காட்டப்பட்ட ஆஇஷா (ரழி) அவர்களுடைய கூற்றாகும். அது பின்வருமாறு: சில பெண்கள் மாதவிடாயின்போது மர்மஸ்தானத்தில் வைத்துக் கட்டிய பஞ்சு மஞ்சள் நிறமாக இருக்கும்போது அதனை ஆஇஷா (ரழி) அவர்களிடம் அனுப்பி மாதவிடாயை விட்டும் தான் தூய்மையடைந்து விட்டேனா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொள்வார்கள். அவ்வமயம் "மர்மஸ்தானத்தில் வைக்கப்படும் பஞ்சை வெள்ளை நிறமாகக் காணும் வரை நீங்கள் அவசரப்பட்டு மாதவிடாயிலிருந்து தூ ய்மையாகிவிட்டதாகக் கருத வேண்டாம்" என அப்பெண்களுக்கு ஆஇஷா (ரழி) அறிவுரை பகர்வார்கள்.[2] வெள்ளைத் திரவம் என்பது மாதவிடாய்

---

(1) பத்ஹுல் பாரீ: பாகம் 1, பக்கம் 426.

(2) ஸஹீஹுல் புஹாரி: அத்தியாயம் 6, பாடம் 19.

முடிவடையும்போது கற்பப் பையிலிருந்து வெளியேறும் வெள்ளை நிற நீராகும்.

### 4. மாதவிடாயில் தொடர்ச்சியற்ற நிலை:

ஒரு நாள் இரத்தம் வருவதும் மறுநாள் நின்றுவிடுவதுமாக விட்டுவிட்டு மாதவிடாய் ஏற்படுதல். இதனை இரு வகையாக நோக்கலாம்.

(1) ஒரு பெண்ணுக்கு வழமையாகவே மாதவிடாய் தொடர்ச்சியாக வெளியாகாது விட்டுவிட்டு வெளியாகுதல். இது "இஸ்திஹாழா" எனப்படும் தொடர் உதிரப்போக்காகும். இதன்போது தொடர் உதிரப்போக்கின் சட்டத்தை கவனத்தில் கொள்ளவேண்டும்.

(2) ஒரு பெண்ணுக்கு வழமையாக இன்றி சில சமயங்களில் மாத்திரம் தொடர்ச்சியற்ற முறையில் இரத்தம் வெளியாகுதல். அதே வேளை, தூய்மையாக இருக்கும் நாட்களை தெளிவாக அறிய முடியுமாக இருத்தல். இவ்வாறு ஏற்படும் நிலையில் தூய்மையாக இருக்கும் நாட்களை தூய்மை எனக் கருதுவதா அல்லது மாதவிடாய் எனக் கருதுவதா என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

(1) இத்தூய நிலையையும் மாதவிடாயின் ஒரு பகுதியாகவே கருத வேண்டும் என்பது ஹனபீ மற்றும் ஷாபிஈ மத்ஹபின் பலமான கருத்தாகும். மேலும், ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) மற்றும் "அல் ஃபாஇக்" எனும் நூலின் ஆசிரியர் ஆகியோரின் தெரிவும் இதுவாகும். இவர்கள் முன்வைக்கும் காரணங்கள் பின்வருமாறு:

- இத்தூய காலத்தில் வெள்ளைத் திரவம் தென்படவில்லை.
- இதனைத் தூய்மை எனக் கருதினால் இந்நிலைக்கு

முன்னரும், பின்னரும் வெளியான இரத்தத்தை மாதவிடாய் எனக் கருத நேரிடும். இவ்வாறு யாரும் கருதவில்லை.

- இதனைத் தூய்மை எனக் கருதினால் (விவாகரத்திற்கான) இத்தாவின் காலம் ஐந்து நாட்களுடன் முடிவடைந்துவிடலாம்.
- மேலும் இரண்டிரண்டு நாட்களுக்கிடையில் குளித்தல் போன்ற சிரமங்களுக்கு முகங்கொடுக்கும் நிலை ஏற்படும். (இவ்வாறு) சிரமப்படுத்துவது இந்த மார்க்கத்தின் வழிமுறையில் இல்லாததாகும். இவ்வாறு வழிகாட்டிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்.

(2) இரத்தம் வரும் நிலையை மாதவிடாயாகவும், நின்றுவிட்ட நிலையை தூய்மையாகவும் கணிக்க வேண்டும். இதுவே ஹன்பலி மத்ஹபின் பிரபலமான கருத்தாகும். எனினும் மாதவிடாயின் காலமும், தூய்மையான காலமும் சேர்ந்து (ஹன்பலீ மத்ஹபின் கருத்தின் படி) மாதவிடாயின் அதிக காலத்தை (15 நாட்களை)த் தாண்டினால் அதனை இஸ்திஹாழாவாகக் கருத வேண்டும்.

(3) இமாம் இப்னு கு.ஃ.தாமா (ரஹ்) தனது "அல்மு.ஃ.னீ"எனும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: மாதவிடாய் ஏற்பட்டு ஒரு நாள் பூர்த்தியாக முன்பு இரத்தம் நின்று விட்டால், அவ்வாறே வெள்ளைத் திரவம் வெளிப்படல் அல்லது மாதவிடாய்க் காலப் பருவத்தின் இறுதியில் வழமையாக இரத்தம் நின்றுவிடல் போன்ற தூய்மை நிலையை அறிவிக்கும் அறிகுறிகளும் தென்படாவிட்டால், பிரசவ ருதுவில் கவனிப்பதைப் போன்று இங்கும் அதனைத் தூய்மை எனக் கருதமுடியாது. ஏனெனில் இரத்தம் என்பது ஒரு முறை வெளியேறி மறுமுறை நின்று விடக்கூடியது. மணிக்கொரு தடவை இரத்தம் நிற்கும் போதெல்லாம் குளிப்புக் கடமை என்பது பெண்கள்

மீது சிரமத்தை ஏற்படுத்துவதாகும். இது தவிர்க்கப்பட வேண்டியதாகும். அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

﴿وَمَا جَعَلَ عَلَيۡكُمۡ فِي ٱلدِّينِ مِنۡ حَرَجٖ﴾ [الحج: ٧٨]

இந்த மார்க்கத்தில் அவன் உங்களுக்கு எவ்வித சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை. (அல் ஹஜ்: 78).

இதனடிப்படையில் ஒரு நாளை விடக் குறைந்தளவு இரத்தம் வராமலிருப்பதை தூய்மையான நிலையாகக் கருதமுடியாது.(1)

எனவே இமாம் இப்னு கு.்.தாமா (ரஹ்) அவர்கள் முன்வைக்கும் இக்கருத்தே முதலிரண்டு கருத்துகளுக்கும் மத்தியில் நடுத்தரமானதாகும். அல்லாஹ்வே மிகச் சரியானதை அறிந்தவன்.

### 5. இரத்தத்தில் வறட்சி நிலை ஏற்படல்:

ஒரு பெண் வெறும் ஈரலிப்பை மாத்திரம் காண்கின்றாள். இது மாதவிடாயின் போது, அல்லது அதனுடன் தொடர்புடைய காலப் பருவத்தில் தூய்மையாக முன்பு ஏற்பட்டால் அவ்வீரலிப்பை மாதவிடாயாகவே கருத வேண்டும். எனினும், தூய்மையடைந்த பின்பு ஏற்படும் ஈரலிப்பை மாதவிடாயகக் கருத வேண்டியதில்லை. ஏனெனில் அவ்வீரலிப்பின் முடிவு அதனை மஞ்சள் அல்லது மஞ்சள், கறுப்புக்கு இடையிலான மண் நிறத் திரவத்துடன் சேர்த்துப் பார்ப்பதில்தான் உள்ளது. இதுவே அதற்குரிய (ஈரலிப்பு நிலையின்) சட்டமாகும்.

---

(1) அல் மு.்.னீ பாகம்: 1, பக்கம் 257.

# பாடம் 04
# மாதவிடாயின் சட்டங்கள்

மாதவிடாய் தொடர்பாக இருபதுக்கும் மேற்பட்ட சட்ட திட்டங்கள் இருப்பினும் அவற்றுள் அவசியப்படும் முக்கியமான சட்டங்கள் மாத்திரமே இங்கு முன்வைக்கப்படுகின்றன.

## முதலாவது: தொழு கை

மாதவிடாய் நிலையிலுள்ள பெண் மீது கடமையான மற்றும் உபரியான எத்தொழுகையையும் தொழுவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தொழுதால் ஏற்கப்படமாட்டாது. குறைந்த பட்சம் பரிபூரணமான ஒரு ரக்அத்[1] தொழுமளவு நேரமும், தூய்மையான நிலையிலும் இருந்தாலே தவிர ஒரு பெண் மீது தொழுகை கடமையாகமாட்டாது. (அவ்வாறு ஒரு ரக்அத் தொழும் நேர அளவு தூய்மை நிலையில் இருந்தால்) அந்நேரத்திற்குரிய தொழுகையை மாத்திரம் நிறை வேற்றுவது கடமையாகும். அது அத்தொழுகைக்குரிய ஆரம்ப நேரமாகவோ அல்லது இறுதி நேரமாகவோ இருக்கலாம்.

அதனடிப்படையில், ஆரம்ப நேரத்தில் மாதவிடாய் ஏற்பட்டதால் தொழுகை கடமையாவதற்குரிய உதாரணம்:

---

(1) ரக்அத்: தொழுகையில் இஹ்ராம் தக்பீர் சொல்லி ஆரம்பித்ததிலிருந்து பாத்திஹா ஓதியதன் பின் ருகூ∴, நடுநிலை, இரு ஸுஜூதுகள், அவ்விரண்டிற்குமிடையிலான இருப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது ஒரு ரக்அத்தாகும். அவ்வாறு ஸுபஹ் தொழுகையில் 2, ளுஹர், அஸர், இஷா ஆகிய தொழுகைகளில் 4, ம∴ரிப் தொழுகையில் 3 ரக்அத்கள் தொழவேண்டும்.

சூரியன் மறைந்த பின்பு (ம.்.ரிப் நேரம்) ஒரு ரக்அத் தொழும் நேர அளவிற்குப் பின் மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண், தான் தூய்மையானதன் பின்பு விடுபட்ட அந்த ம.்.ரிப்[1] தொழுகையைத் தொழுவது அவசியமாகும். மாதவிடாய் ஏற்பட முன்பு அத்தொழுகையின் ஒரு ரக்அத்தை தொழுவதற்குரிய நேரம் அவள் தூய்மை நிலையில் இருந்துள்ளமையே அதற்குரிய காரணமாகும்.

இறுதி நேரத்தில் மாதவிடாயிலிந்து தூய்மையான நிலையில் தொழுகை கடமையாவதற்கான உதாரணம்:

(.்.பஜ்ர் நேரம்) சூரியன் உதயமாக சற்று முன்பு ஒரு ரக்அத் தொழுமளவு நேரம் இருக்கும்போது ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் நின்றுவிட்டால், அவள் குளித்து சுத்தமாகிய பின்பு அந்த .்.பஜ்ர்[2] தொழுகையைத் தொழுவது கடமையாகும். தூய்மையான நிலையில் அத்தொழுகையின் ஒரு ரக்அத்தை தொழுவதற்குரிய நேரத்தை அவள் பெற்றுக்கொண்டமையே அதற்குரிய காரணமாகும்.

ஆனால் (கூறப்பட்ட இரு உதாரணங்களின் அடிப்படையிலும் ஒரு ரக்அத் தொழுமளவு நேரத்தை விடவும் குறைந்தளவு நேரமிருக்கும் நிலையில் ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் நின்றுவிட்டால், அல்லது ஆரம்பித்தால் அத்தொழுகை அவளுக்கு கடமையாகமாட்டாது. முதலாவது உதாரணத்தின் படி ஒரு பெண் சூரியன் மறைந்த சில விநாடிகளில் மாதவிடாயைக் காண்கின்றாள். இரண்டாவது உதாரணத்தின் படி சூரியன் உதயமாக

---

(1) ம.்.ரிப்: சூரியன் மறைந்தது முதல் செம்மேகம் மறையும் வரையுள்ள நேரம் ஷம.்.றிப்' எனப்படும். அவ்வேளையில் 3 ரக்அத்கள் தொழுவது கடமையாகும்.

(2) பஜ்ர்: அதிகாலை உதயமானதிலிருந்து சூரியன் உதயமாகும் வரையுள்ள நேரம் ஷபஜ்ர்' எனப்படும். அவ்வேளையில் 2 ரக்அத்கள் தொழுவது கடமையாகும்.

சில விநாடிகளுக்கு முன்பு மாதவிடாய் நின்று விட்டதை அறிகின்றாள். (இவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்நேரத் தொழுகை கடமையாகமாட்டாது.) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தொழுகையில் ஒரு ரக்அத்தை (அதற்குரிய நேரத்தில்) அடைந்து கொள்பவர் அத்தொழுகையை (முழுமையாக) அடைந்தவராவார்"[1]. எனவே ஒரு ரக்அத்தை விடவும் குறைந்தளவு நேரத்தைப் பெற்றுக்கொண்டவர் அத்தொழுகையை அடைந்து கொண்டவராகமாட்டார் என்பதே மேற்கண்ட நபிமொழியின் எதிர்மறை விளக்கமாகும்.

ஒரு பெண் அஸர்[2] அல்லது இஷாத்[3] தொழுகையின் இறுதி நேரத்தில் தூய்மையடைந்தால் அவள் அஸருடன் சேர்த்து ளுஹரையும்[4] அல்லது இஷாவுடன் சேர்த்து ம.ஃ.ரிபையும் தொழ வேண்டுமா? என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அவள் தூய்மையான நிலையில் இருக்கும்போது எத்தொழுகை நேரத்தை அடைந்து கொள்கிறாளோ அத்தொழுகை மாத்திரமே அவள் மீது கடமையாகும் என்பதே மிகப்பலமான

---

(1) அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரழி), ஆதாரம்: புஹாரி 580, முஸ்லிம் 607.

(2) அஸர்: ஒரு பொருளின் நிழல் அதன் நீளத்தின் அளவை அடைந்தது முதல் சூரியன் மறையும் வரையுள்ள நேரம் ஷஅஸர்' எனப்படும். அவ்வேளையில் 4 ரக்அத்கள் தொழுவது கடமையாகும்.

(3) இஷா: செம்மேகம் மறைந்தது முதல் நள்ளிரவு வரையுள்ள நேரம் 'இஷா' எனப்படும். அவ்வேளையில் 4 ரக்அத்கள் தொழுவது கடமையாகும்.

(4) ளுஹர்: சூரியன் அதன் உச்சியிலிருந்து மேற்கு நோக்கிச் சாய்ந்தது முதல் ஒரு பொருளின் நிழல் அதன் நீளத்தின் அளவை அடையும் வரையாகும். அவ்வேளையில் 4 ரக்அத்கள் தொழுவது கடமையாகும். மேற்கூறப்பட்ட ஐவேளைத் தொழுகைகளின் நேரங்களும் சூரியனின் வருடாந்த சூழற்சியைக் கணித்து வரையறுக்கப்பட்டு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.

கருத்தாகும். அதனடிப்படையில் அஸர் மற்றும் இஷா நேரத் தொழுகைகளை மாத்திரமே அவள் நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: "சூரியன் உதயமாவதற்கு முன்பு ஸுப்ஹுடைய ஒரு ரக்அத்தை அடைந்துகொள்பவர் ஸுப்ஹ் தொழுகையை (முழுமையாக) அடைந்து கொண்டவராவார். சூரியன் மறைவதற்கு முன் அஸருடைய ஒரு ரக்அத்தை அடைந்துகொள்பவர் அஸர் தொழுகையை (முழுமையாக) அடைந்து கொண்டவராவார்."[1].

மேற்கூறப்பட்ட நபிமொழியில் அஸர் தொழுகையை அடைந்துகொள்பவர் ளுஹர் தொழுகையையும் அடைந்துகொள்வார் என நபியவர்கள் கூறவில்லை. அவருக்கு (அச்சந்தர்ப்பத்தில்) ளுஹர் தொழுகை கடமை எனவும் குறிப்பிடவில்லை. எந்தவொரு வணக்கமாக இருப்பினும் கடமை என்பதைக் குறிக்கும் ஆதாரம் இன்றி கடமையாகமாட்டாது என்பதே வணக்க வழிபாடுகளில் பொது விதியாகும். இதுவே ஹனபீ மற்றும் மாலிக் மத்ஹபின் கருத்தாகும். "ஷரஹுல் முஹ.்.த்தப்" எனும் நூலின் ஆசிரியரான இமாம் நவவீ (ரஹ்)[2] அவர்கள் இவ்விரு மத்ஹபின் கருத்தாக இதனைப் பதிவு செய்துள்ளார்கள்[3].

---

(1) அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரழி), ஆதாரம்: புஹாரி 579, முஸ்லிம் 608.

(2) அபூ ஸகரிய்யா என்ற புனைப் பெயருடைய இவரின் முழுப்பெயர் முஹியத்தீன் யஹ்யா இப்னு ஷரப்.். அந்நவவீ என்பதாகும். ஷாபிஈ மத்ஹபில் பிரபலமான அறிஞராகத் திகழும் இவர் ஹி.631ல் பிறந்து, சிறுவயதிலேயே கல்வி கற்க ஆரம்பித்தார்கள். ஸஹீஹ் முஸ்லிமுக்கு நீண்ட விரிவுரை எழுதியுள்ள இவர்கள் அல்மஜ்மூ.்., ஷரியாலுஸ்ஸாலிஹீன்' போன்ற வேறு பல நூற்களையும் தொகுத்துள்ளார்கள். ஹி. 676ல் மரணமானார்கள்.

(3) பார்க்க: 'ஷரஹுல் முஹத்தப்' இமாம் நவவீ (ரஹ்) அவர்களுக்குரியது, பாகம் 3 பக் 70.

எனினும், அல்லாஹ்வை நினைவுகூர்தல், (அல்லாஹு அக்பர் என) தக்பீர் கூறல், (ஸுப்ஹானல்லாஹ் என) தஸ்பீஹ் கூறல், (அல்ஹம்துலில்லாஹ் என) அல்லாஹ்வைப் புகழ்தல், சாப்பிடும் போதும், ஏனைய சந்தர்ப்பங்களிலும் பிஸ்மில்லாஹ் சொல்லல், ஹதீஸ் மற்றும் மார்க்க சட்ட நூற்களை வாசித்தல், அல்குர்ஆன் ஓதுவதை செவிமடுத்தல், பிரார்த்தித்தல், அதற்காக ஆமீன் கூறுதல் போன்ற வணக்கங்கள் எதுவும் மாதவிடாய் நிலையிலுள்ள பெண்மீது தடையாகமாட்டாது. ஆஇஷா (ரழி) அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும்போது நபி (ஸல்) அவர்கள் அன்னையரின் மடியில் சாய்ந்தவாறு குர்ஆன் ஓதக் கூடியவராக இருந்துள்ளார்கள். மேலும் உம்மு அதிய்யா (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்: "நாங்கள் போர்க்களத்தில் காயமுற்றவர்களுக்குச் சிகிச்சையளிப்போம். நோயாளிகளைக் கவனிப்போம்". நான் நபி (ஸல்) அவர்களிடம் "எங்களில் ஒருத்திக்கு மேலங்கி இல்லாவிட்டால் (பெருநாள் தொழுகைக்கு) செல்லாமல் இருப்பது குற்றமா"? என வினவியதற்கு, "அவளுடைய தோழி தன்னிடம் மேலதிகமாக உள்ள மேலங்கியை அவளுக்கு அணியக் கொடுக்கட்டும். அவள் நன்மையான காரியங்களிலும், முஸ்லிம்களுக்கான (குத்பா) பிரசங்கத்திலும் பங்குகொள்ளட்டும்" என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்"[1] என்றனர்.

## மாதவிடாய் நிலையிலுள்ள பெண் அல்குர்ஆனை ஓதல். இதனை இரு வகையில் நோக்கலாம்:

*1.* கண்ணால் பார்த்து மனதால் ஓதுதல்: இவ்வாறு ஓதுவதில் தவறில்லை. உதாரணமாக அல்குர்ஆன் பிரதியையோ எழுதி வைக்கப்பட்டுள்ள காகிதத்தையோ

(1) அறிவிப்பாளர்: உம்மு அதிய்யா (ரழி), ஆதாரம்: புஹாரி 324, முஸ்லிம் 890.

முன்னால் வைத்து நாவினால் மொழியாது உள்ளத்தால் ஆராயும் விதமாக ஓதுதல். இது அனுமதிக்கப்பட்டது என்பதில் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை என இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் தமது “அல்மஜ்மூ.ஃ”எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.(1)

***2.*** நாவினால் மொழிந்தவாறு ஓதுதல்: இது அனுமதிக்கப்பட்டதா? இல்லையா? என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

1. அறிஞர்களில் பெரும்பான்மையானோர் அவ்வாறு ஓதக்கூடாது என்ற கருத்தையே கொண்டுள்ளனர்.

2. இமாம்களான புஹாரி, இப்னு ஜரீர் அத்தபரீ(2), இப்னுல் முன்திர் ஆகியோர் மாதவிடாய் நிலையிலுள்ள பெண் அல்குர்ஆனை ஓதுவதில் தவறில்லை என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இமாம் ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்)(3) பத்ஹுல் பாரீ எனும் தமது நூலில் “இமாம் மாலிக் மற்றும் இமாம் ஷாபிஈயின் பழைய

---

(1) பார்க்க: ‘ஷரஹுல் முஹத்தப்’ பாகம் 2 பக் 357.

(2) ஷஇமாமுல் முபஸ்ஸிரீன்’ என்ற சிறப்புப் பெயர் கொண்ட அபூ ஜ.ஃபர் முஹம்மத் இப்னு ஜரீர் அத்தபரீ அவர்கள் திப்ரிஸ்தான் என்ற ஊரில் ஹி. 224ல் பிறந்தார்கள். தனது 16வது வயதில் கல்விப் பயணத்தை ஆரம்பித்த அவர்கள், அல்குர்ஆன் விரிவுரைகளில் முதன்மையானதும், பழமையானதும், பிரபலமானதுமான “தப்ஸீருத் தபரீ” இன் நூலாசிரியராவார். “தாரீஹுத் தபரீ” என்ற பிரபல வரலாற்று நூலுடன் இன்னும் பல நூல்களையும் எழுதிய இவர்கள் ஹி. 310ல் பக்தாதில் மரணித்தார்கள்.

(3) அபுல் பழ்ல் ஷிஹாபுத்தீன் அஹ்மத் இப்னு அலீ இப்னு ஹஜர் அல்அஸ்கலானீ என்பவர்கள் ஷாபிஈ மத்ஹபின் பிரபல அறிஞராவார்கள். எகிப்தில் ஹி. 773ல் பிறந்த இவர் சிறு பிராயத்திலிருந்தே பல பிரதேசங்களுக்குச் சென்று கல்வி பயின்றார்கள். ஸஹீஹுல் புஹாரியின் விரிவுரையான “ஃபத்ஹுல் பாரீ” மற்றும் 70க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளமை இவர்களின் சிறப்பம்சமாகும். ஹதீஸ் கலையிலும் மக்தான சேவை புரிந்த இவர்கள் ஹி. 852ல் இவ்வுலகை விட்டும் பிரிந்தார்கள்.

கூற்றாகவும் இதனைப் பதிவு செய்துள்ளார்கள்"[1]. இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் இப்ராஹீம் அந்ந.்.கஈ (ரஹ்)[2] அவர்கள் வழியாக வரும் அறிவிப்பாளர் வரிசையை நீக்கிவிட்டு "அல்குர்ஆன் வசனத்தை ஓதுவதில் தவறேதுமில்லை" எனப் பதிவு செய்துள்ளார்கள்.[3]

ஷைஃஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: "மாதவிடாய் நிலையிலுள்ள பெண்ணுக்கு அல்குர்ஆன் ஓதுவதைத் தடைசெய்வதற்குத் தகுதியான எவ்வித ஆதாரமும் இல்லை. ஏனெனில்"குளிப்புக் கடமையான ஆணும், மாதவிடாய் நிலையிலுள்ள பெண்ணும் அல்குர்ஆனிலிருந்து எதனையும் ஓதலாகாது"[4] என்ற நபிமொழி பலவீனமானது என்பது ஹதீஸ்கலை அறிஞர்கள் அனைவரினதும் ஏகமான கருத்தாகும். மேலும், நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் பெண்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டுள்ளது. தொழுகையை நிறைவேற்றக் கூடாது என்பதைப் போன்று அல்குர்ஆனை ஓதுவதும் கூடாதென்றிருந்தால் நபியவர்கள் தமது சமூகத்துக்குத் தெளிவுபடுத்தியதில் இதுவும் அவசியம் இடம் பெற்றிருக்கும். மு.்.மீன்களின் தாய்மார்களான நபியவர்களின் மனைவியரும் அதனைக் கற்றிருப்பர். மக்களுக்கு மத்தியில் பரவலான ஒரு விடயமாகவும் இது இருந்திருக்கும். நபியவர்கள்

(1) பார்க்க: ஷ.்.பத்ஹுல் பாரீ' பாகம் 1, பக் 408.

(2) அபூ இம்ரான் இப்ராஹீம் இப்னு யஸீத் அந்ந.்.கஈ என்பவர் இராக்கிலுள்ள கூபா நகரைச் சேர்ந்த பிரபலமான தாபிஈன்களில் ஒருவராவார். பல நபித்தோழர்களைச் சந்தித்துள்ள இவர்கள் அறிவிக்கும் நபிமொழிகள் பல புஹாரி, முஸ்லிம் உட்பட (அஸ்ஸஹீஹுஸ் ஸித்தா எனப்படும்) ஆறு நபி மொழிக் கிரந்தங்களிலும் பதியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் ஹி. 96ல் மரணித்தார்கள்.

(3) ஸஹீஹுல் புஹாரி: பாகம் 1, பக்கம் 68.

(4) அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரழி), ஆதாரம்: திர்மிதீ 131.

தடைசெய்ததாக இவ்விடயத்தில் எவ்வித கூற்றும் இல்லாத நிலையில் இதனை ஹராமாக்க முடியாது. அவர்கள் அதனை தடை செய்யவில்லை என்பதே இங்கு அவதானிக்கப்பட வேண்டியது. அவர்களது காலத்தில் பெண்களில் அதிகமானோர் மாதவிடாய் ஏற்பட்ட நிலையிலும் அ(வ்வாறு ஓதுவ)தனைத் தடை செய்யப்படவில்லை என்றிருந்தால் அது அனுமதிக்கப்பட்டது என்பதே உறுதியானதாகும்”[1].

மேற்குறிப்பிடப்பட்ட அறிஞர்களின் கருத்து வேறுபாடுகளை அவதானிக்கும்போது, “மாதவிடாய் நிலையிலுள்ள ஒரு பெண் அல்குர்ஆனைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராகப் பணியாற்றல், அல்லது பரீட்சையின்போது ஓதுதல் போன்ற அவசியத் தேவைகளின்றி அல்குர்ஆனை ஓதுவதைத் தவிர்ந்து கொள்வதே மிகச்சிறந்தது” என்ற முடிவுக்கு வரலாம்.

## இரண்டாவது: நோன்பு

மாதவிடாய் நிலையிலுள்ள பெண் கடமையான மற்றும் ஸுன்னத்தான நோன்புகளை நோற்கக்கூடாது. அவை ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது. எனினும் கடமையான நோன்பை பிறிதொரு சந்தர்ப்பத்தில் நோற்பது கடமையாகும். ஆஇஷா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்: “எமக்கு மாதவிடாய் ஏற்படும். அப்போது நாம் நோன்பை மீட்டுமாறு (கழாச் செய்யுமாறு) ஏவப்படுவோம். தொழுகையை மீட்டுமாறு ஏவப்படமாட்டோம்”[2]. ஒரு பெண் நோன்பு நோற்றிருக்கும் நிலையில், சூரியன் மறைவதற்கு ஒரு விநாடிக்கு முன்பு மாதவிடாய் ஏற்பட்டாலும் அவளது நோன்பு வீணாகிவிடும். அது கடமையான நோன்பாக இருந்தால் அதனை மீட்டுவது (கழாச் செய்வது) கடமையாகும். எனினும், சூரியன் மறைய சற்று முன்பதாக மாதவிடாய் ஏற்படப்போகிறது என்ற உணர்வு

(1) பார்க்க: ஃபதாவா இப்னி தைமிய்யா பாகம் 26 பக்கம் 191.

(2) புஹாரி 315, முஸ்லிம் 335.

ஏற்பட்டு, சூரியன் மறைந்த பின்பே இரத்தம் வெளியானால் அப்பெண்ணின் நோன்பு பரிபூரணமானதாகும். வலுவான கருத்தின் படி அந்நோன்பு முறியமாட்டாது. ஏனெனில் உடம்பினுள் (வெளியாகாமல்) இருக்கும் இரத்தத்துக்கு எந்தொரு சட்டமும் கிடையாது. மேலும் நபியவர்களிடத்தில் "ஓர் ஆண் கனவில் காண்பதைப் போன்று ஒரு பெண்ணும் கண்டால் அவள் மீது குளிப்புக் கடமையாகுமா?" என வினவப்பட்டபோது, "ஆம், அவள் (விந்து) நீரைக் கண்டால்" எனப் பதிலளித்தார்கள்"[1]. (குளித்தல்) என்ற சட்டத்தை நபியவர்கள் விந்தைக் காண்பதிலேயே தொடர்பு படுத்தியுள்ளார்களே தவிர அது வெளியாவதற்கு முன்னர் தோன்றும் உணர்வில் அல்ல என்பதைக் அறியமுடிகிறது. அவ்வாறே, மாதவிடாய் வெளியாவதற்கு முன்பு தோன்றும் உணர்விலன்றி இரத்தத்தைக் காணும்போதே மாதவிடாயின் சட்டமும் அமுலாகும்.

பஜ்ர் உதயமாகும்போது மாதவிடாயுடன் இருந்த ஒரு பெண் நோன்பு நோற்றால், அந்நோன்பு ஏற்கப்படமாட்டாது. (பஜ்ர் உதயமாகி ஒரு விநாடியின் பின்பு அவள் தூய்மை நிலையை அடைந்தாலும் சரியே) பஜ்ருக்கு சற்று முன் தூய்மை நிலையை அடைந்த ஒரு பெண் நோன்பு நோற்றால் அவளுடைய நோன்பு ஏற்கப்படும். (அவள் பஜ்ருக்குப் பின்பு தான் குளித்தாலும் சரியே) (இவ்விடயத்தில் அப்பெண்ணும்) குளிப்புக் கடமையான ஆணைப் போன்றே. குளிப்புக் கடமையான ஒரு ஆண் பஜ்ர் உதயமாக முன்பு, நோன்பு நோற்பதாக நிய்யத் வைத்து, பஜ்ருக்குப் பின்புதான் குளித்தாலும் அவனுடைய நோன்பு ஏற்றுக்கொள்ளப்படும். ஆஇஷா (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்: "நபி (ஸல்) அவர்கள் தாம்பத்திய உறவில் ஈடுபட்டு, குளிப்புக் கடமையானவர்களாக

(1) அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரழி), ஆதாரம்: புஹாரி 130, முஸ்லிம் 311.

காலை நேரத்தை அடைவார்கள், பின்னர் நோன்பைத் தொடர்வார்கள்”[1].

## மூன்றாவது: தவா.:ப்[2]

க.்.பாவை (தவா.்.ப்) வலம்வருவது மாதவிடாய் நிலையிலுள்ள பெண்ணின் மீது தடையாகும். அவ்வாறு தவா.்.ப் செய்தால் ஏற்கப்படவும் மாட்டாது. ஆஇஷா (ரழி) அவர்களுக்கு (ஹஜ்ஜின்போது) மாதவிடாய் ஏற்படவே நபியவர்கள்: “தவா.்.ப் செய்வதைத் தவிர்த்து, ஹஜ் கடமையை நிறைவேற்றும் ஒருவர் செய்யும் ஏனைய சகல காரியங்களிலும் நீரும் ஈடுபடுவீர்” என அறிவுரை பகன்றார்கள்.[3].

ஸ.்.பா, மர்வா மலைகளுக்கிடையில்[4] “ஸஈ”[5]

---

(1) புஹாரி 1931, முஸ்லிம் 1109.

(2) தவா.்.ப் என்பது மக்காவிலுள்ள புனித க.்.பாவை வலம் வருவதைக் குறிக்கும். ஹஜ் மற்றும் உம்ராச் செய்வோர் இதனைக் கட்டாயம் ஏழு தடவைகள் (வுழூவுடன்) சுற்றுவது அவசியமாகும். இதற்கு விரிவான சட்டங்கள் உள்ளன.

(3) புஹாரி 299, முஸ்லிம் 1211.

(4) ஸ.்.பா, மர்வா ஆகியன மக்காவில் க.்.பாவிற்கு அருகாமையில் அமைந்துள்ள இரு சிறு மலைகளாகும். ஸ.்.பா க.்.பாவிலிருந்து தென்கிழக்காக சுமார் 130 மீ. தொலைவிலும், மர்வா க.்.பாவிலிருந்து வடகிழக்காக சுமார் 300 மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்விரு மலைகளுக்கும் இடையிலுள்ள தூரம் 394 மீ. ஆகும்.

(5) ஸஈ: ஸ.்.பா, மர்வா ஆகிய இரு மலைகளுக்குமிடையில் சற்று வேகமாக நடப்பதே ஸஈ (தொங்கோட்டம்) எனப்படும். நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் மனைவி ஹாஜர் தனது குழந்தை இஸ்மாஈல் அவர்களுக்குத் தண்ணீர் தேடி இவ்விரு மலைகளுக்கும் ஏறி இறங்கியதை நினைவுபடுத்துமுகமாகவே இது வணக்கமாக்கப்பட்டுள்து. ஏழு சுற்றுக்களைக் கொண்ட ஸஈயை ஸ.்.பாவிலிருந்து மர்வாவைச் சென்றடைவதை ஒரு சுற்றாகவும், மர்வாவிலிருந்து ஸ.்.பாவிற்குத் திரும்பி வருவதை இன்னொரு சுற்றாகவும் கணிக்கப்படும். முதல் சுற்றை ஸ.்.பாவிலிருந்து ஆரம்பிப்பது அவசியமாகும்.

தொங்கோட்டம் ஓடுதல், அரபாவில்[1] தரித்தல், முஸ்தலிபா[2] மற்றும் மினாவில்[3] இராத் தரித்தல், கல்லெறிதல் போன்ற ஹஜ், உம்ராவின் கிரியைகளை நிறைவேற்றுவதில் தவறேதுமில்லை. இதனடிப்படையில் தவா.:.ப் செய்து முடித்த மறுகனமோ, அல்லது ஸஈ செய்து கொண்டிருக்கும்போதோ ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் எப்பிரச்சினையும் கிடையாது.

## நான்காவது: தவா.:புல் வதா.:[4]

மாதவிடாயுடன் இருக்கும் பெண் மீது தாவா.:.புல் வதா.:. கடமையாகமாட்டாது.

ஹஜ்ஜின் கிரியைகள் அனைத்தையும் நிறைவேற்றிய பின்பு, சொந்த ஊருக்குத் திரும்ப முன்பு ஒரு பெண்ணுக்கு

(1) அர.:.பா: இது மஸ்ஜிதுல் ஹராத்திலிருந்து சுமார் 22 கி.மீ. தொலைவில் 10.4 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட சமதரையான பூமியாகும். ஹஜ் செய்யும் ஒருவர் துல்ஹஜ் (அரபு மாதங்களில் 12வது மாதம்) ஒன்பதாம் நாள் மதியத்தின் பின்பு சூரியன் மறையும் வரை இங்கு தரிக்க வேண்டும்.

(2) முஸ்தலி.:.பா: ஹஜ் யாத்திரிகள் அரபாவில் தரித்து, (துல் ஹஜ் 9 ஆம் நாள் மாலை) சூரியன் மறைந்த பின்பு முஸ்தலி.:.பாவுக்குச் சென்று, அங்கு இராத்தரிப்பது அவசியமாகும். மஸ்ஜிதுல் ஹராத்திலிருந்து 8 கி. மீ. தொலைவிலும், அரபாவிலிருந்து 7 கி.மீ. தொலைவிலும், மினாவுக்கும் அரபாவுக்குமிடையிலும் அமைந்துள்ள இவ்விடம் 12.25 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்டுள்ளது.

(3) மினா: மஸ்ஜிதுல் ஹராத்திலிருந்து வட கிழக்காக 7 கி.மீ. தொலைவிலுள்ள இடமே மினாவாகும். ஹஜ் யாத்திரிகள் குறிப்பிட்ட சில நாட்களில் இங்கு இராத்தரிப்பது கடமையாகும். கற்கள் எறியப்படும் ஜம்ராக்களும் இங்குதான் உள்ளன. நபி இப்ராஹீம் (அலை) தனது மகனை அறுக்க முயன்று, பின்னர் பதிலாக ஓர் ஆட்டைப் பலியிட்டதும், நபி (ஸல்) அவர்கள் மதீனாவாசிகளுடன் ஒப்பந்தம் செய்ததும் இங்குதான்.

(4) தவா.:.புல் வதா.:.: ஹஜ்ஜின் கிரியைகள் நிறைவடைந்த பின் மக்காவை விட்டுப் புறப்பட முன்பு இறுதியாகச் செய்ய வேண்டிய தவா.:.பையே தவா.:. புல் வதா.:. எனப்படுகின்றது.

மாதவிடாய் ஏற்பட்டு, (மக்காவை விட்டும்) வெளியேறும் வரை அது நீடித்தால், அவள் தவாபுல் வதா.்.வை நிறைவேற்றாது வெளியேறிவிடலாம். இறை இல்லம் க.்.பாவை வலம்வருவதை ஹஜ்ஜின் கடைசி வழிபாடாக ஆக்கிக் கொள்ளுமாறு ஹாஜிகள் கட்டளையிடப்பட்டுள்ளனர். எனினும், மாதவிடாய் ஏற்பட்ட நிலையிலுள்ள பெண்கள் மாத்திரம் அதில் சலுகை வழங்கப்பட்டுள்ளனர் என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்[(1)].

மாதவிடாய் ஏற்பட்ட பெண் பிரியாவிடை பெறும்போது மஸ்ஜிதுல் ஹராமின் வாயிலுக்கு வந்து பிரார்த்தனை புரிவது ஸுன்னத் ஆகமாட்டாது. ஏனெனில் நபியவர்கள் அவ்வாறு செய்ததாக எவ்வித அடிப்படைகளும் கிடையாது. வணக்க வழிபாடுகள் என்பன நபியவர்களின் தெளிவான சான்றுகளின் அடிப்படையிலேயே எடுக்கப்பட வேண்டும். மாறாக, இவ்விடயத்தில் அதற்கு மாற்றமான சான்றையே நபிவழியில் காணலாம். நபி (ஸல்) அவர்களின் (மற்றொரு) துணைவியரான ஸ.்.பிய்யா பின்த் ஹுயை (ரழி) அவர்களுக்கு ஹஜ்ஜத்துல் வதாவின்போது மாதவிடாய் ஏற்பட்டுவிட்டது. நபி (ஸல்) அவர்கள், அவர் எங்களையும் (மக்காவிலிருந்து செல்லவிடாமல்) தடுத்துவிட்டாரா? என என்னிடம் வினவியபோது, அவர் தவா.்.புஸ் ஸியாரா (ஹஜ்ஜுடைய கடமையான தவா.்.பைச்) செய்துவிட்டார்என நான் கூறினேன். அச்சமயம் நபி (ஸல்) அவர்கள், அவ்வாறாயின் பரவாயில்லை. அவர் புறப்பட்டுச் சென்றுவிடலாம் எனக் கூறினார்கள்.[(2)] இவ்வேளையில் நபியவர்கள் மஸ்ஜிதுல் ஹராத்தின் வாயிலுக்கு வந்து பிரார்த்திக்குமாறு ஏவவில்லை. அது நன்மையான விடயமாக இருந்தால் அதனைத் தெளிவுபடுத்தியிருப்பார்கள்.

---

(1) புஹாரி 1755, முஸ்லிம் 1328.

(2) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: புஹாரி 4401, முஸ்லிம் 1211.

எனினும், ஹஜ்ஜுடையவோ, உம்ராவுடையவோ கடமையான தவா.்.பாக இருந்தால் தூய்மையான பின்பு அதனை நிறைவேற்றி விட்டே செல்லவேண்டும்.

## ஐந்தாவது: பள்ளியில் தரித்தல்

மாதவிடாயுடன் இருக்கும் ஒரு பெண் பள்ளிவாசலில் தரிப்பது தடையாகும். பெருநாள் தொழுகைக்காக ஒதுக்கப்படும் தொழுமிடத்திலும் தரிக்கக் கூடாது. கன்னிப் பெண்களும், மாதவிடாய் ஏற்பட்ட பெண்களும் (பெருநாள் அன்று) வெளியே சென்று நன்மையான காரியங்களிலும், முஸ்லிம்களுக்கான பிரசங்கத்திலும் பங்குகொள்வார்கள். மாதவிடாய் நிலையிலுள்ள பெண்கள் பெருநாள் தொழுகை நடைபெறும் இடத்தைவிட்டும் விலகி இருப்பார்கள்[1] என நபி (ஸல்) அவர்கள் கூறியதைத் தான் செவிமடுத்ததாக உம்மு அதிய்யா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்.

## ஆறாவது: தாம்பத்திய உறவில் ஈடுபடுதல்

மாதவிடாய் நிலையில் இருக்கும் மனைவியுடன் தாம்பத்திய உறவில் ஈடுபடுவது கணவன் மீது தடையாகும். அதற்கு இணங்கி இடமளிப்பது அவள் மீது குற்றமாகும். அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

﴿ وَيَسْـَٔلُونَكَ عَنِ ٱلْمَحِيضِ ۖ قُلْ هُوَ أَذًى فَٱعْتَزِلُوا۟ ٱلنِّسَآءَ فِى ٱلْمَحِيضِ ۖ وَلَا تَقْرَبُوهُنَّ حَتَّىٰ يَطْهُرْنَ ﴾ [البقرة: ٢٢٢]

மாதவிடாய் பற்றி உம்மிடம் வினவுகின்றனர். அது ஓர் உபாதை(யான தீட்டு) ஆகும் என நீர் கூறும், ஆகவே மாதவிடாயின்போது பெண்களை விட்டும் விலகியிருங்கள்.

(1) புஹாரி 980, முஸ்லிம் 890.

அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள். (அல்பகரா: 222).

இவ்வசனத்தில் மாதவிடாய் என்று கூறப்பட்டிருப்பது அது ஏற்படும் காலம், இடம் (பெண்ணுறுப்பு) ஆகியவற்றையே குறிக்கின்றது. மேலும் நபி (ஸல்) அவர்கள் (அவளுடன்) உறவில் ஈடுபடுவதைத் தவிர ஏனைய எல்லாக் காரியங்களிலும் ஈடுபடுங்கள்[1] எனக் கூறியுள்ளார்கள். அவ்வாறே மாதவிடாயுடன் இருக்கும் பெண்ணுடன் அவளுடைய பெண்ணுறுப்பில் உறவில் ஈடுபடுவது மார்க்கத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதில் முஸ்லிம்களுக்கு மத்தியில் இரு கருத்துக் கிடையாது.

எனவே அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசிக்கும் எந்தவொரு மனிதனும் அல்குர்ஆன், ஸுன்னா மற்றும் முஸ்லிம்களின் ஏகமான முடிவின் பிரகாரமும் தடை செய்யப்பட்டுள்ள இவ்வாறான ஒரு செயலில் தன்னை ஈடுபடுத்துவது ஹராமாகும். அவ்வாறு ஈடுபட்டால், அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்தவனாகவும், நல்லோர்கள் பயணிக்கும் பாதையைப் பின்பற்றாதவனாகவும் கருதப்படுவான். இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் தனது “அல் மஜ்மூஃ” எனும் நூலில் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கூறியுள்ளதாக பின்வருமாறு கூறுகின்றார்கள்: யார் இத்தவறில் ஈடுபடுகின்றாரோ அவர் ஒரு பெரும் பாவத்தில் ஈடுபட்டவராவார். எங்களது மத்ஹபைச் சார்ந்த அறிஞர்களினதும் ஏனைய அறிஞர்களினதும் கூற்றாவது: மாதவிடாயுடன் இருக்கும் பெண்ணுடன் உடலுறவில் ஈடுபடுவது (ஹலால்) மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது என யார் கருதுவாரோ அவரை காபிர் (இறை நிராகரிப்பாளன்) என்றே தீர்ப்பளிக்கப்படும்.[2]

(1) அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரழி), ஆதாரம்: முஸ்லிம் 302.

(2) பார்க்க: ஷஅல் மஜ்மூஃ’ பாகம் 2 பக்கம் 359.

முத்தமிடுதல், கட்டி அணைத்தல், அபமல்லாத பகுதிகளில் இன்பம் அனுபவித்தல் போன்ற உடலுறவைத் தவிர்ந்த ஏனைய செயல்களின் மூலம் ஒரு ஆண் தனது இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்கான மாற்று வழிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன (இறைவனுக்கே எல்லாப் புகழும்) எனினும், பின்வரும் நபிமொழிக்கேற்ப தொப்புளுக்கும், முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதியில் திரையின்றி இன்பம் அனுபவிப்பதைத் தவிர்ப்பதே சிறந்தது. ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் மாதவிடாயுடன் இருக்கும்போது நபியவர்கள் எனக்கு வேட்டியொன்றை அணிந்துகொள்ளுமாறு ஏவி, என்னோடு இன்பம் அனுபவிப்பார்கள்.[1]

## ஏழாவது: விவாகரத்து (தலாக்)

மாதவிடாயுடன் இருக்கும் ஒரு பெண்ணை அதே நிலையில் (தூய்மையாக முன்பு) விவாகரத்துச் செய்வது கணவன் மீது ஹராமாகும். அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

﴿يَـٰٓأَيُّهَا ٱلنَّبِيُّ إِذَا طَلَّقْتُمُ ٱلنِّسَآءَ فَطَلِّقُوهُنَّ لِعِدَّتِهِنَّ﴾ [الطلاق: ١]

நபியே! நீங்கள் பெண்களைத் தலாக் சொல்வீர்களானால் அவர்களின் இத்தாவைக் கணக்கிட ஏற்ற வகையில் (மாதவிடாய் அல்லாத காலங்களில்) தலாக் கூறுங்கள். (அத்தலாக்: 1) அதாவது விவாகரத்துச் செய்யும்போது, அவர்கள் இத்தா இருக்கும் காலத்தைக் கணக்கிடக்கூடிய வகையில் விவாகரத்துச் செய்ய வேண்டும். ஒரு பெண் கர்ப்பிணியாக உள்ள நிலையிலோ, அல்லது மாதவிடாயிலிருந்து தூய்மையடைந்த பின்பு உடலுறவில் ஈடுபடாத நிலையிலோ மாத்திரமே இது சாத்தியமாகும். ஏனெனில் மாதவிடாயுடன் இருக்கும்போது விவாகரத்துச் செய்யப்பட்டால், அவளுடைய இத்தாக் காலத்தை சரியாக நிர்ணயிக்க முடியாது. காரணம்:

(1) புஹாரி 295.

அம் மாதவிடாய்க் காலத்தை, இத்தாவின் காலப் பகுதியாகக் கணக்கிட முடிவதில்லை. அவ்வாறே உடலுறவு கொண்ட பின்பு விவாகரத்துச் செய்யப்பட்டால், அவள் கர்ப்பம் தரித்து விட்டாளா? இல்லையா? என்ற பிரச்சினை எழலாம். இச் சந்தர்ப்பத்திலும் அவளது இத்தாவைக் கணக்கிட முடியாத நிலை ஏற்படுகின்றது. மாதவிடாயின் அடிப்படையில் இத்தாவை நிர்ணயிப்பதா? அல்லது கர்ப்பிணிகளுக்குரிய இத்தாவாகக் கணக்கிடுவதா? என்ற தெளிவற்ற நிலை தோன்றுவதால், அது பற்றிய தெளிவு வரும் வரை அவளை விவாகரத்துச் செய்வது ஹராமாகும்.

முன்னர் கூறப்பட்ட இறை வசனத்தின் பிரகாரமும், அடுத்து வரும் நபிமொழிக்கிணங்கவும் மாதவிடாய்க் காலத்தில் ஒரு பெண்ணை விவாகரத்துச் செய்வது ஹராம் என்பதைப் புரிந்துகொள்ளலாம். நான் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் என் மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டேன். அச்சமயம் அவர் மாதவிடாய் நிலையில் இருந்தார். எனவே, (என் தந்தை) உமர் இப்னுல் ஃகத்தாப் (ரழி) இது குறித்து இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் வினவியபோது, என் தந்தையாரிடம் இறைத்தூதர் (ஸல்) அவர்கள்: தம் மனைவியைத் திரும்ப அழைத்துக்கொள்ளுமாறும், அவள் மாதவிடாயிலிருந்து தூய்மையடைந்து, மீண்டும் அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டு, மீண்டும் அவள் தூய்மையடையும் வரை அவளைத் தம்மிடமே வைத்திருக்குமாறும் உங்கள் புதல்வருக்குக் கட்டளையிடுங்கள். அதன் பிறகு அவர் விரும்பினால், (இரண்டாம் மாதவிடாயிலிருந்து தூய்மையான) பின்பு (தொடர்ந்து அவளை) தம்மிடமே (மனைவியாக) வைத்திருக்கட்டும், அல்லது அவர் விரும்பினால் அவளுடன் உடலுறவு கொள்வதற்கு முன்பதாகவே அவளை விவாகரத்துச் செய்துவிடட்டும் என அறிவுரை

வழங்கினார்கள். (மாதவிடாயிலிருந்து தூய்மையான) இந்தக் கால எல்லையே மனைவியரை விவாகரத்துச் செய்வதற்கு (அல்குர்ஆனின் 2:228 வது வசனத்தில்) அல்லாஹ் அனுமதித்துள்ள (இத்தாவின்) காலத்தைக் கணக்கிட்டுக் கொள்வதற்கு ஏற்ற) கால எல்லையாகும்என்று கூறினார்கள்.(1)

ஒருவன் தனது மனைவி மாதவிடாய் நிலையிலிருக்கும்போதே விவாகரத்துச் செய்தால், அவன் அல்லாஹ்வுக்கு மாறுசெய்த பாவியாவான். அவன் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக்கோரி மீளுவதுடன், அல்லாஹ்வும், அவன் தூதரும் விதித்த ஒழுங்கின் பிரகாரம், மார்க்க அடிப்படையில் விவாகரத்துச் செய்வதற்காக, மனைவியை மீட்டெடுக்க வேண்டும். அவன் விவாகரத்துச் செய்யும் போதிருந்த மாதவிடாயிலிருந்து அவள் தூய்மையாகி, அடுத்த முறை மாதவிடாய் ஏற்பட்டு, அதிலிருந்தும் தூய்மையாகும் வரை அவளை அவ்வாறே (கணவன் தனது பொறுப்பில்) விட்டு வைக்க வேண்டும். அதன் பின்பு, அவன் விரும்பினால் அவளை தனது மனைவியாகவே வைத்துக் கொள்ளலாம். அவன் விரும்பினால் உடலுறவு கொள்ள முன்பு அவளை விவாகரத்துச் செய்துவிடலாம்.

மாதவிடாயின்போது விவாகரத்துச் செய்வது ஹராம் என்ற சட்டத்திலிருந்து பின்வரும் மூன்று சந்தர்ப்பங்கள் விதிவிலக்களிக்கப்படுகின்றன:

***1.*** (திருமணத்தின் பின் முதற்தடவை) உடலுறவில் ஈடுபட முன்பே விவாகரத்துச் செய்தால், அச்சந்தர்ப்பத்தில் மாதவிடாயுடனிருக்கும் போதும் விவாகரத்துச் செய்யலாம். ஏனெனில் அ(வ்வாறான நிலையிலுள்ள) வள் இத்தா அனுஷ்டிக்க வேண்டியதில்லை. இத்தாவைக் கணக்கிட ஏற்ற வகையில் (மாதவிடாய்

---

(1) அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரழி), ஆதாரம்: புஹாரி 5251, முஸ்லிம் 1471.

அல்லாத காலங்களில்) தலாக் கூறுங்கள் என்ற வசனத்திற்கும் இது முரணாகாது.

2. கர்ப்ப காலத்தில் மாதவிடாய் ஏற்பட்டாலும் விவாரகரத்துச் செய்யலாம். இது பற்றிய விபரம் முன்னர் கூறப்பட்டுள்ளது.

3. ஏதாவதொரு தொகையைப் பெற்றுக் கொண்டு விவாகரத்துச் செய்தல் (.·.குல்.·.). இச்சந்தர்ப்பத்திலும் மாதவிடாயின் போது விவாகரத்துச் செய்வதில் தவறில்லை.

உதாரணமாக, கணவன், மனைவி தம்பதிகளிடேயே பிரச்சினைகளும், சீரற்ற குடும்ப வாழ்க்கையும் தொடரும்போது, மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க கணவன் அவளிடமிருந்து ஒரு தொகையைப் பணத்தையோ, ஏதேனும் பொருளையோ பெற்றுக் கொண்டு, அவளை விவாகரத்துச் செய்தல். இந்நிலையில் மாதவிடாயின்போதும் விவாகரத்துச் செய்வது அனுமதிக்கப்பட்டதாகும். இதற்கு பின்வரும் நபிமொழி சான்றாகும். ஸாபித் இப்னு கைஸ் இப்னு ஷம்மாஸ் (ரழி) அவர்களின் துணைவி நபி (ஸல்) அவர்களிடம் வந்து, இறைத்தூதர் அவர்களே! (என் கணவர்) ஸாபித் இப்னு கைஸின் குணத்தையோ, மார்க்கப் பற்றையோ நான் குறை கூறவில்லை. ஆனால், நான் இஸ்லாத்தில் இருந்து கொண்டே இறை நிராகரிப்புக்குரிய செயல்களைச் செய்து விடுவேனோ என்று அஞ்சுகிறேன்எனக் கூறினார். அப்போது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள்,ஸாபித் உமக்கு (மணக் கொடையாக) அளித்த தோட்டத்தை நீ அவருக்கே திருப்பி வழங்கி விடுவீரா? என வினவினார்கள். அவர், ஆம் (வழங்கி விடுகின்றேன்) எனக் கூறவே, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் (ஸாபித் (ரழி) அவர்களிடம்), தோட்டத்தைப்

பெற்றுக்கொண்டு, அவளை ஒரு முறை தலாக் கூறி விடுங்கள் என்று கூறினார்கள்.[1]

நபி (ஸல்) அவர்கள், அப்பெண் மாதவிடாய் நிலையில் இருக்கின்றாளா? அல்லது சுத்தமான நிலையில் இருக்கின்றாளா? என்பதைப் பற்றி விசாரிக்கவில்லை. மேலும் இவ்வகையான விவாகரத்து, பெண் தன்னை விடுவித்துக்கொள்ள அவளின் விருப்பத்தின் அடிப்படையில் நடைபெறக் கூடியதே. எனவே அவசியம் ஏற்படும்போது அவள் எந்நிலையில் இருந்தாலும் அது அனுமதிக்கப்பட்டதாகும்.

மாதவிடாய் ஏற்பட்டுள்ள நிலையில் ∴குல்∴செய்யலாம் என்பதற்கான காரணத்தை இமாம் இப்னு ∴குதாமா (ரஹ்) அவர்கள் தமது அல் மு∴க்னீ எனும் நூலில் பின்வருமாறு விவரிக்கின்றார்கள்: ஒரு பெண்ணுடைய இத்தாக் காலம் நீளும் என்பதனாலேயே மாதவிடாயின்போது விவாகரத்துச் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் தனது கோபத்துக்கும், வெறுப்புக்குமுரிய ஒருவனின் தவறான அணுகுமுறையால் ஏற்படும் விபரீதத்தைப் போக்கவே (மார்க்கத்தில்) ∴குல்∴ அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தா நீளுவதை விட குடும்ப உறவில் ஏற்படும் விரிசலின் விளைவு விசாலமானது. எனவே தான் இவ்விரு விளைவுகளிலும் விபரீதம் கூடியதை குறைந்ததின் மூலம் தடுக்க இடமளிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே நபியவர்கள் ∴குல்ஐ வேண்டிவந்த அப்பெண்மணியிடம் அவளது நிலை பற்றி விசாரிக்கவில்லை[2].

மாதவிடாயின்போது திருமண ஒப்பந்தம் செய்வதில் தவறேதும் இல்லை. ஏனெனில் அதன் அடிப்படை “அனுமதிக்கப்பட்டது” என்பதாகும். அது அனுமதியற்றது

---

(1) அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரழி), ஆதாரம்: புஹாரி 5273.

(2) ஷஅல் முக்∴னீ' பாகம் 7, பக் 324.

என்பதற்கான எந்தொரு ஆதாரமும் கிடையாது. எனினும் கணவன் உறவில் ஈடுபடுவதை விட்டும் அச்சம் தீர்ந்த நிலை இருந்தால் அவள் மாதவிடாயுடனிருக்கும் போது அவனை அவளிடம் சென்றுவர அனுமதிப்பதில் தவறில்லை. அவ்வாறில்லையெனில் பாவத்தில் ஈடுபட்டுவிடாமலிருக்க அவள் தூய்மையாகும் வரை கணவன் அவளிடம் செல்லலாகாது.

## எட்டாவது: விவாகரத்தின் இத்தாவை மாதவிடாயைக் கொண்டு கணிப்பிடுதல்

முதற்தடைவ இல்லறத்தில் ஈடுபட்ட பின்பு விவாகரத்துச் செய்யப்பட்ட பெண் இத்தா அனுஷ்டிக்க வேண்டிய முறை பின்வருமாறு:

*1.* வழமையாக மாதவிடாய் ஏற்படும் பெண்: இவ்வாறான பெண் மூன்று மாதவிடாய் காலங்கள் பரிபூரணமாகும் வரை இத்தா அனுஷ்டிக்க வேண்டும். இறைவன் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

﴿ وَٱلْمُطَلَّقَٰتُ يَتَرَبَّصْنَ بِأَنفُسِهِنَّ ثَلَٰثَةَ قُرُوٓءٍ ﴾ [البقرة: ٢٢٨]

விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்கள், மூன்று மாதவிடாய் காலம் தங்களுக்காக எதிர்பார்த்திருக்கட்டும். (அல்பகரா: 228).

*2.* கர்ப்பிணிப் பெண்: இவ்வாறான பெண், குழந்தையைப் பிரசவிக்கும் வரை இத்தா அனுஷ்டிக்க வேண்டும். பிரசவத்துக்குரிய கால எல்லை நீண்டதாக இருப்பினும், குறுகியதாக இருப்பினும் சரியே. இறைவன் கூறுகின்றான்:

﴿ وَأُوْلَٰتُ ٱلْأَحْمَالِ أَجَلُهُنَّ أَن يَضَعْنَ حَمْلَهُنَّ ﴾ [الطلاق: ٤]

“கர்ப்பிணிகளுக்குரிய (இத்தாக்) காலக்கெடு அவர்கள் தமது சுமையைப் பிரசவிக்கும் வரையிலாகும்”. (அத்தலாக்: 04).

*3.* மாதவிடாய் ஏற்படாத வயதைக்கொண்ட சிறு பெண் பிள்ளை.

*4.* மாதவிடாய்ப் பருவத்தைத் தாண்டிய வயோதிப் பெண்.

*5.* அறுவைச் சிகிச்சை மூலம் கர்ப்பப்பை நீக்கப்பட்டதால், அல்லது வேறு காரணங்களால் மாதவிடாய் ஏற்படாத நிலையிலுள்ள பெண்.

மேற்கூறப்பட்ட மூன்று பிரிவினருடையவும் இத்தாவின் காலம் மூன்று மாதங்களாகும். இறைவன் கூறுகின்றான்:

﴿ وَٱلَّٰٓـِٔي يَئِسۡنَ مِنَ ٱلۡمَحِيضِ مِن نِّسَآئِكُمۡ إِنِ ٱرۡتَبۡتُمۡ فَعِدَّتُهُنَّ ثَلَٰثَةُ أَشۡهُرٖ
وَٱلَّٰٓـِٔي لَمۡ يَحِضۡنَ ﴾ [الطلاق: ٤]

உங்கள் பெண்களில் எவர் மாதவிடாயை விட்டும் நம்பிக்கையிழந்து (அவர்களுடைய இத்தாவைக் கணக்கிடுவது பற்றி) நீங்கள் சந்தேகம் கொண்டால், அவர்களுக்கும், (இதுவரை) மாதவிடாயே ஏற்படாதவர்களுக்கும் (இத்தாவின்) காலம் மூன்று மாதங்களாகும். (அத்தலாக்: 4).

*6.* நோய், பாலூட்டல் போன்ற அறியப்பட்ட காரணங்களால் மாதவிடாய் தடைப்பட்ட பெண்: இவ்வாறான பெண் (கால எல்லை நீண்டாலும் சரி) மீண்டும் மாதவிடாய் ஏற்படும் வரை இத்தா அனுஷ்டிக்க வேண்டும்.

*7.* நோயிலிருந்து குணமடைதல், அல்லது பாலூட்டல் நிறைவுறுதல் போன்ற மாதவிடாய் தடைப்பட்டதற்கான

காரணங்கள் நீங்கிய பின்பும் மாதவிடாய் ஏற்படாத பெண்: இவ்வாறான பெண், குறித்த காரணம் நீங்கியதிலிருந்து ஒரு வருடம் இத்தா அனுஷ்டிக்க வேண்டும். இதுவே மார்க்க விதிமுறைகளுக்கு நேர்படக்கூடிய வலுவான கருத்தாகும். ஏனெனில் காரணம் நீங்கிய பின்பும் மீண்டும் மாதவிடாய் ஏற்படாவிட்டால் அவள் காரணம் அறியப்படாது மாதவிடாய் தடைப்பட்ட நிலையில் இருக்கின்றாள்.

8. காரணம் அறியப்படாது மாதவிடாய் தடைப்பட்டவள்: இவ்வாறான பெண் முழுமையாக ஒரு வருடம் இத்தா அனுஷ்டிக்க வேண்டும். பெரும்பாலும் கர்ப்ப காலம் ஒன்பது மாதங்களாக இருப்பதனைக் கவனத்திற்கொண்டு முன்னெச்சரிக்கையாக ஒன்பது மாதங்களும், இத்தாவுக்குரிய காலமாக மீதி மூன்று மாதங்களும் இத்தா இருக்க வேண்டும்.

9. திருமண ஒப்பந்தம் முடிவுற்ற பின் தாம்பத்திய உறவில் ஈடுபடாத, கணவனுடன் தனிமைப்படாத நிலையில் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்: இவ்வாறான பெண் அறவே இத்தா அனுஷ்டிக்க வேண்டியதில்லை. மாதவிடாயையோ, வேறு விடயங்களையோ கணிக்க வேண்டிய தேவையில்லை. இறைவன் கூறுகிறான்:

﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِذَا نَكَحۡتُمُ ٱلۡمُؤۡمِنَٰتِ ثُمَّ طَلَّقۡتُمُوهُنَّ مِن قَبۡلِ أَن
تَمَسُّوهُنَّ فَمَا لَكُمۡ عَلَيۡهِنَّ مِنۡ عِدَّةٖ تَعۡتَدُّونَهَا﴾ [الأحزاب: ٤٩]

ஈமான் கொண்டவர்களே! மு∴மினான பெண்களை நீங்கள் மணந்து, பிறகு நீங்கள் அவர்களைத் தொடுவதற்கு முன்பதாகவே விவாகரத்துச் செய்து விட்டீர்களானால், அவர்கள் விடயத்தில் நீங்கள் கணக்கிடக்கூடிய (இத்தாவின்) தவணை எதுவும் உங்களுக்கு இல்லை. (அல்அஹ்ஸாப்: 49).

## ஒன்பதாவது: கர்ப்பமடையாத நிலையைத் தீர்மானித்தல்

ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்படுவதன் மூலம் அவள் கர்ப்பமடையவில்லை என்பதை ஊர்ஜிதப்படுத்துவதே மேற்கண்ட தலைப்பின் நோக்கமாகும். இது, (ஒரு பெண்) கர்ப்பமடையாத நிலையை உறுதி செய்யத் தேவைப்படும் எச்சந்தர்ப்பத்திலும் அவளுக்கு மாதவிடாய் ஏற்படுவதை அறிவது அவசியமாகும். இஸ்லாத்தில் இதனுடன் சம்பந்தப்பட்டதாகவே பல சட்டதிட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன.

உதாரணமாக, தனது மனைவி கருவுற்றிருந்தால், அக்குழந்தை தனது வாரிசாக வரலாம் என்ற நிலையிலுள்ள ஒருவர் மரணித்த பின்பு, மனைவி மறுமணம் செய்தால், அவளுக்கு மாதவிடாய் வரும் வரை அல்லது கருவுற்றதற்கான அறிகுறிகள் தென்படும் வரை (புதிய) கணவர் அவளுடன் தாம்பத்திய உறவில் ஈடுபட முடியாது. அவள் கருவுற்றிருப்பது தெளிவானால் முதல் கணவன் மரணிக்கும்போதே அச்சிசு கற்பத்தில் இருந்துள்ளது என்ற முடிவின் பிரகாரம் அக் குழந்தையையும் அனந்தரக்காரர்களில் ஒருவராகக் கணிக்க வேண்டும். அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டால், முதல் கணவன் மூலம் அவள் கருவுற்றிருக்கவில்லை என்ற முடிவின் பிரகாரம் அக்குழந்தைக்கு அனந்தரச் சொத்தில் பங்கில்லை என்ற முடிவுக்கு வரலாம்.

## பத்தாவது: கடமையான குளிப்பை நிறைவேற்றல்

மாதவிடாய் எற்பட்ட பெண் அதிலிருந்து தூய்மையான பின்பு தனது முழு உடம்பையும் கழுவியவாறு குளிப்பது கடமையாகும். நபி (ஸல்) அவர்கள் பாத்திமா பின்த்

அபீ ஹுபைஷுக்கு[1] பின்வருமாறு உபதேசித்தார்கள்: (உங்களுக்கு) மாதவிடாய் ஏற்பட்டால் தொழுகையை விட்டுவிடுங்கள். அது நின்றுவிட்டால் குளித்து விட்டு தொழுகையைத் தொடருங்கள்[2]

(முடிகளுக்குக் கீழுள்ள பகுதிகள் உட்பட) முழு உடம்பையும் தண்ணீரால் நனைப்பதே கடமையான குளிப்பின் மிகக் குறைந்த அளவாகும். ஆனால் சிறந்த முறை, நபிமொழியில் வழிகாட்டப்பட்டுள்ள பிரகாரம் குளிப்பதாகும். அன்னை ஆஇஷா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்: அஸ்மா பின்த் ஷகல்[3] (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், மாதவிடாயின் குளிப்பு பற்றி வினவினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், உங்களில் ஒருவர் (மாதவிடாயின் குளிப்பின்போது) தண்ணீரையும், இலந்தை இலைகளையும் எடுத்து நன்கு சுத்தம் செய்து கொள்ளட்டும். பிறகு தலைக்குத் தண்ணீர் ஊற்றி நன்றாகத் தேய்த்து, தலையின் சருமம் நனையும் வரை கழுவட்டும். பிறகு உடம்புக்குத் தண்ணீர் ஊற்றட்டும். அதன் பின்னர் கஸ்தூரி தடவப்பட்ட பஞ்சுத்துண்டு ஒன்றை எடுத்து சுத்தம் செய்துகொள்ளட்டும் என்றார்கள். அதற்கு அஸ்மா (ரழி) அவர்கள், அதை வைத்து அவள் எவ்வாறு சுத்தம் செய்வாள்? என வினவியபோது, நபி (ஸல்) அவர்கள், ஸுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன்!). அதனால் சுத்தம் செய்துகொள்ளட்டும் என்று (மீண்டும்) கூறினார்கள். உடனே நான், இரத்தம்பட்ட இடத்தை அதனால் தடவிக்கொள் என்று (பிறர் காதில் விழாதவாறு இரகசியமாகக்) கூறினேன்.[4]

(1) பாத்திமா பின்து அபீ ஹுபைஷ் என்பவர் குரைஷிக் கோத்திரத்தில் பனூ அஸத் என்ற கிளையைச் சேர்ந்த நபித் தோழியாவார். புஹாரி, முஸ்லிம் ஆகிய இரு கிரந்தங்களிலும் இவர்களின் சில செய்திகள் பதியப்பட்டுள்ளன.

(2) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: புஹாரி 320, முஸ்லிம் 333.

(3) அஸ்மா பின்து ஷகல், இவரைப் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

(4) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: முஸ்லிம் 332.

தண்ணீர் சேராதளவு இறுக்கமாக முடிச்சுகள் போடப்பட்டிருந்தாலும் அவற்றை அவிழ்க்க வேண்டிய அவசியம் கிடையாது. அல்லாஹ்வின் தூதரே! நான் தலை முடியை இறுக்கமாகப் பின்னிக்கொள்ளும் பெண் ஆவேன். பெருந்தொடக்கிலிந்து தூய்மை பெறுவதற்காகக் குளிக்கும்போது பின்னலை அவிழ்த்துவிட வேண்டுமா? என்று கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், இல்லை, மூன்று முறை உமது இரு கையளவு தண்ணீரை எடுத்து உன் தலை மீது ஊற்றிவிட்டால் போதுமானது. பின்னர் உனது (உடம்பின்) மீது தண்ணீரை ஊற்றிக்கொள். நீ தூய்மை பெற்றுவிடுவாய் என்று அறிவுரை பகன்றார்கள்(1).

தொழுகை நேரத்தில் ஒரு பெண் மாதவிடாயிலிருந்து தூய்மையானால் அத்தொழுகையை நிறைவேற்றுவதற்காக குளிப்பதை அவசரப்பத்திக் கொள்ளவேண்டும். அவள் பயணத்திலிருக்கும்போது தூய்மையாகி, தண்ணீரைப் பெற்றுக்கொள்ளாவிட்டால், அல்லது தண்ணீர் இருந்தும் நோயின் காரணமாக அதனைப் பயன்படுத்த முடியாத நிலை இருந்தால் அத்தடை நீங்கும் வரை தயம்மும்(2) செய்து தொழவேண்டும். பின்னர் குளிக்க வேண்டும்.

சில பெண்கள் தொழுகையொன்றை நிறைவேற்றப் போதுமான நேரம் இருக்கும்போது மாதவிடாய் நின்று விட்டாலும், அந்நேரத்தில் பரிபூரணமாகக் குளித்து முடிப்பதற்கு அவகாசமில்லை எனக் காரணம் கூறி

---

(1) அறிவிப்பாளர்: உம்மு ஸலமா (ரழி), ஆதாரம்: முஸ்லிம் 330.

(2) தயம்மும்: தண்ணீர் இல்லாத சந்தர்ப்பத்தில் அல்லது இருந்தும் பயன்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் வுழூ மற்றும் கடமையான குளிப்பிற்குப் பதிலாக இரு உள்ளங்கைகளையும் மண்ணில் ஒரு முறை அடித்து, ஊதிவிட்டு அவ்விரு கைகளினாலும் முகம் மற்றும் மணிக்கட்டு வரை இரு கைகளையும் ஒரு முறை தடவுவதையே தயம்மும் எனப்படும்.

குளிப்பதைப் பிற்படுத்துகின்றனர். இக்காரணம் ஏற்கத் தகாததாகும். ஏனெனில் கடமையான குளிப்பில் மிகக் குறைந்த அளவை நிறைவேற்றிவிட்டு, அத்தொழுகைக் குரிய நேரம் முடிவதற்குள் தொழுதுகொள்ளலாம். பின்னர் நேரம் கிடைக்கும் போது பரிபூரணமாகக் குளித்துக் கொள்ளலாம்.

# பாடம் 05

# தொடருதிரப்போக்கும், அதன் சட்டங்களும்

தொடருதிரப்போக்கு (இஸ்திஹாழா) இரு வகைப்படும்:

*1.* மாதம் முழுவதும் தொடராக இரத்தம் வெளியாகிக் கொண்டே இருத்தல்.

*2.* மாதத்தில் ஓரிரு நாட்களைத் தவிர ஏனைய நாட்களில் இரத்தம் வெளியாகிக் கொண்டே இருத்தல்.

முதல் வகைக்குரிய ஆதாரம்: நபி (ஸல்) அவர்களிடம் பாத்திமா பின்து அபீ ஹுபைஷ் (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! நான் தூய்மையாகாமலே இருக்கின்றேன் எனக் கூறினார்கள்.[1] மற்றோர் அறிவிப்பில்: எனக்கு தொடருதிரப்போக்கு ஏற்பட்டு தூய்மையாகாமலே இருக்கின்றேன் எனக் கூறினார்கள்[2].

இரண்டாம் வகைக்குரிய ஆதாரம்: ஹம்னா பின்து ஜஹ்ஷ்[3]

---

(1) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: புஹாரி 320, முஸ்லிம் 333.

(2) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: புஹாரி 228, முஸ்லிம் 333.

(3) ஹம்னா பின்து ஜஹ்ஷ்: இவர், நபியவர்களின் துணைவியரில் ஒருவரான அன்னை ஸைனப் (ரழி) அவர்களின் சகோதரியாகும். இவருடைய சகோதரர் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷும் ஒரு நபித்தோழராவார். ஆரம்பத்தில் முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்களுக்கு துணைவியாக இருந்த இவர், உஹது யுத்தத்தில் அவர் வீர மரணமடைந்த பின் தல்ஹா (ரழி) அவர்களை மணந்து கொண்டார்கள்.

(ரழி) அவர்கள் நபியவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! எனக்கு அதிக நாட்கள் கடுமையாக மாதவிடாய் ஏற்படுகிறது எனக் கூறினார்கள்.[(1)]

## தொடருதிரப்போக்கின் நிலைகள்:

இஸ்திஹாழா எனப்படும் தொடருதிரப்போக்கின் நிலைகள் மூன்றாகும்.

*1.* தொடருதிரப்போக்கு ஏற்படும் ஒரு பெண், தனக்கு ஏற்படும் மாதவிடாய்க் காலம் பற்றிய விபரத்தை அறிந்திருப்பாள். இவ்வாறான பெண் தனது வழமையான மாதவிடாய்க் காலத்தைக் கணக்கிட்டு, அந்நாட்களில் கடைப்பிடிக்கும் விடயங்களை இச்சமயத்திலும் கடைப்பிடித்து, எஞ்சிய நாட்களை இஸ்திஹாழாவாகக் கருதி, அதற்குரிய சட்டத்தைப் பேண வேண்டும்.

உதாரணமாக, ஒரு பெண்ணுக்கு மாதத்தின் முதல் ஆறு நாட்களே வழமையாக மாதவிடாய் ஏற்படுவதுண்டு. அவ்வாறான ஒரு பெண்ணுக்கு (இஸ்திஹாழா) தொடருதிரப்போக்கு ஏற்பட்டு, இரத்தம் வெளியாகிக் கொண்டே இருந்தால், மாதத்தின் முதல் ஆறு நாட்களையும் மாதவிடாயாகவும், எஞ்சிய நாட்களை இஸ்திஹாழாவும் கணிக்கவேண்டும். பாத்திமா பின்து அபீ ஹுபைஷ் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் எனக்கு தொடருதிரப்போக்கு ஏற்பட்டு தூய்மையாகாமலே இருக்கின்றேன், நான் தொழுகையை விட்டுவிடவா? என வினவினார்கள்.

---

(1) அறிவிப்பாளர்: ஹம்னா பின்து ஜஹ்ஷ் (ரழி), ஆதாரம்: அபூ தாவூத் 287, திர்மிதீ 128. இமாம் புஹாரி அவர்கள் இது "ஹஸன்" எனும் தரத்தைக் கொண்டதாகக் கூறியதாகவும், இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் "ஹஸன் ஸஹீஹ்" எனும் தரத்தைக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளதாக இமாம் திர்மிதி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதற்கு நபியவர்கள் இல்லை, அது ஒரு வகையான உபாதையாகும். (உங்களுக்கு) மாதவிடாய் ஏற்படும் நாட்களின் அளவிற்கு தொழுகையை விட்டுவிடுங்கள். பின்னர் குளித்துவிட்டு தொழுகையைத் தொடருங்கள் எனப் பகன்றார்கள்.[1] மேலும் நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹபீபா பின்து ஜஹ்ஷ்[2] (ரழி) அவர்களுக்கு பின்வருமாறு கூறினார்கள்: உங்களுக்கு மாதவிடாய் ஏற்படும் கால அளவிற்கு தாமதித்து நில்லுங்கள். பின்பு குளித்துவிட்டுத் தொழுகையை நிறைவேற்றுங்கள்.[3] இதனடிப் படையில் தொடருதிரப் போக்குள்ள பெண் வழமையான மாதவிடாய்க் கால அளவிற்கு (தொழுகை, நோன்பு போன்றவற்றில் ஈடுபடாமல்) இருந்துவிட்டு, பின்னர் குளித்துவிட்டுத் தொழுகையைத் தொடர வேண்டும். அதன் பின்பும் வெளியாகும் இரத்தத்தைப் பொருட்படுத்தக் கூடாது.

2. இஸ்திஹாழாவுக்கு முன்பு ஒழுங்கான தெளிவான மாதவிடாய்ச் சுற்று ஏற்படாத, முதல் முறை இரத்தம் வெளியான (பருவமடைந்த) நாளிலிருந்தே உதிரப் போக்குள்ளவளாக இருக்கும் பெண். இவ்வகைப் பெண் சில வித்தியாச நிலைகளை வைத்து, தொடருதிரப்போக்கை வேறு பிரித்துக்கொள்ள வேண்டும். இரத்தம் கறுப்பாகவோ, கனமானதாகவோ, வாடையுடையதாகவோ இருந்தால் மாதவிடாயின் சட்டத்தையும், அவ்வாறான தன்மைகள் காணப்படாதபோது இஸ்திஹாழாவுடைய சட்டத்தையும் பேணவேண்டும்.

---

(1) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: புஹாரி 325, முஸ்லிம் 333.

(2) உம்மு ஹபீபா பின்து ஜஹ்ஷ் என்பவர் ஸைனப் பின்து ஜஹ்ஷ் (ரழி) அவர்களின் மற்றுமொரு சகோதரியாவார். இவரைப் பற்றிய அதிக தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை.

(3) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: முஸ்லிம் 334.

உதாரணமாக, ஒரு பெண் முதலில் இரத்தத்தைக் கண்ட நாளிலிருந்தே (பருவமடைந்த நாள் முதல்) உதிரப் போக்குள்ளவளாகவே இருக்கின்றாள். எனினும் 10 நாட்கள் கறுப்பு நிறமாகவும், ஏனைய நாட்கள் சிவப்பாகவும், அல்லது 10 நாட்கள் கனமானதாகவும், ஏனைய நாட்கள் மென்மையான தாகவும், அல்லது 10 நாட்கள் மாதவிடாயின் வாடையுடனும், ஏனைய நாட்களில் அவ்வாடை யின்றியும் இரத்தம் வெளியாவதை அவதானிக் கின்றாள் எனின், முதலாவது உதாரணத்தில் கறுப்பு நிறமாகவும், இரண்டாவது உதாரணத்தில் கனமானதாகவும், மூன்றாவது உதாரணத்தில் வாடையுள்ளதாகவும் தென்படும் இரத்தத்தைக் கருத்திற்கொண்டு மாதவிடாயாகவும், (மூன்று உதாரணங்களிலும்) எஞ்சிய நாட்களை இஸ்திஹாழாவாகவும் கணிக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் பாத்திமா பின்து அபீ ஹுபைஷ் (ரழி) அவர்களுக்கு: "மாதவிடாய் இரத்தம் அறியப்படும் கறுப்பு நிறத்தைக் கொண்டதாகும். அவ்வாறிருந்தால், நீர் தொழுகையைத் தவிர்ந்து கொள்வீராக, (கறுப்பு அல்லாத) வேறு நிறமாக இருந்தால் வுழூச் செய்து தொழுவீராக, ஏனெனில் அது ஓர் உபாதையாகும்"(1) எனக் கூறினார்கள். இந்நபிமொழியின் அறிவிப்பாளர் வரிசையிலும், மூல வாசகத்திலும் சில கருத்துக்கள் இருப்பினும் அறிஞர்கள் இதனைக் கொண்டு சட்டங்களை அமுல்படுத்தியிருக்கின்றனர். பெரும்பான்மையான பெண்களின் வழமையை வைத்து இஸ்திஹாழாவையும், மாதவிடாயையும் பிரித்தறிவதை விட இந்நபிமொழியை செயற்படுத்துவது ஏற்றமானதாகும்.

---

(1) அறிவிப்பாளர்: உர்வா இப்னு ஸுபைர் (ரஹ்), ஆதாரம்: அபூ தாவூத் 304, நஸாஈ 215. இப்னு ஹிப்பான் ஹாகிம் போன்றோர் இதனை ஸஹீஹ் என்று கூறியுள்ளனர்.

3. இஸ்திஹாழாவுக்கு முன் ஒழுங்கான, தெளிவான மாதவிடாய்ச் சுற்றோ, பொருத்தமான வேறுபாடுகளோ இன்றி, முதற்தடைவ முதலே ஒரே விதமாகவோ, அல்லது மாதவிடாய் என முடிவெடுக்க முடியாதவாரோ இரத்தம் வெளியாகிக் கொண்டிருத்தல். இவ்வாறான பெண் பெரும் பான்மையான பெண்களின் வழக்கப்படி மாதத்தில் ஆறு அல்லது ஏழு நாட்களை மாதவிடாயின் காலமாக எடுத்துக் கொள்ள வேண்டும். முதற்தடவை இரத்தத்தைக் கண்ட நாள் முதல் (ஆறு அல்லது ஏழு நாட்கள் மாதாமாதம்) கணிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக: முதற்தடவையாக ஒரு பெண்ணுக்கு மாதத்தின் ஐந்தாவது நாள் இரத்தம் வெளிப்படுகிறது. அதிலிருந்து நிறத்தாலோ, அல்லது வேறு வகையிலோ மாதவிடாயை வேறு பிரித்தரியும் எவ்வித வேறுபாடுகளுமின்றி உதிரப் போக்கு தொடர்ந்து கொண்டே இருந்தால், இப்பெண்ணின் மாதவிடாயின் காலம், ஒவ்வொரு மாதத்திலும் ஐந்தாம் நாள் முதல் ஆறு அல்லது ஏழு நாட்கள் வரையாகும். ஹம்னா பின்து ஜஹ்ஷ் (ரழி) அவர்கள் நபியவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! எனக்கு அதிக நாட்கள் கடுமையாக மாதவிடாய் ஏற்படுகிறது, தொழுகை, நோன்பு ஆகியவற்றை விட்டும் அது என்னைத் தடுத்துவிடுகிறது. இதில் உங்கள் அபிப்பிராயம் என்ன? என விவினார்கள். நீங்கள் மர்ம உறுப்பில் பஞ்சு வைத்துக் கொள்ளுங்கள். அது உங்களது இரத்தத்தைப் போக்கிவிடும் என நபியவர்கள் கூறினார்கள். அப்போது "அதை விட அதிகமாக வெளியேறுகிறது என்று கூறவே, நபியவர்கள்: அவ்வாறாயின் ஒரு துணியை வைத்துக் கொள்ளுங்கள்" எனக் கூறினார்கள். "அதை விடவும் அதிகமாக வெளியேறுகிறது" என்று (ஹம்னா (ரழி)

> அவர்கள்) மீண்டும் கூறினார்கள். இந்நபிமொழியின் தொடரில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது: “இது ஷைத்தானின் உதைகளுள் ஓர் உதை. அல்லாஹ் அறிவித்தபடி ஆறு அல்லது ஏழு நாட்கள் நீர் மாதவிடாய் உள்ளவளாக இருந்து கொள்வீராக. பின்னர் குளித்து, நீர் முழுமையாக சுத்தமடைந்து விட்டதாக உறுதிகொண்ட பின் 23 அல்லது 24 நாட்கள் தொழுது, நோன்பும் நோற்றுக்கொள்வீராக”என்று கூறினார்கள்.(1)

இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யவதற்காக நபியவர்கள் “ஆறு அல்லது ஏழு நாட்கள்” எனக் குறிப்பிடவில்லை. மாறாக, அப்பெண்ணைப் போன்றவர்களின் உடலமைப்பு, வயது, இரத்த உறவு, இவரின் இரத்த அமைப்புக்கு நெருக்கமான மாதவிடாய் ஏற்படும் பெண், இவை போன்ற அடிப்படைகளைக் கவனித்தேயாகும். இதனடிப்படையில் யாருக்கு ஆறு நாட்கள் பொருத்தமோ, அவர்கள் ஆறு நாட்களாகவும், யாருக்கு ஏழு நாட்கள் பொருத்தமோ அவர்கள் ஏழு நாட்களாகவும் மாதவிடாய்க்குரிய காலமாகத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

## இஸ்திஹாழாப் பெண்களுக்கு நிகரானவர்களின் நிலை:

கர்ப்பப்பை, அல்லது அதன் கீழ்ப் பகுதியில் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை மூலம் சில சமயங்களில் ஒரு பெண்ணின் பிறப்புறுப்பிலிருந்து இரத்தப்போக்கு ஏற்படலாம். இது இரு வகைப்படும்:

---

(1) அறிவிப்பாளர்: ஹம்னா பின்து ஜஹ்ஷ் (ரழி), ஆதாரம்: அபூ தாவூத் 287, திர்மிதீ 128. இமாம் புகாரி அவர்கள் இது “ஹஸன்” எனும் தரத்தைக் கொண்டதாகவும், இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் “ஹஸன் ஸஹீஹ்” எனும் தரத்தைக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளதாக இமாம் திர்மிதீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

1. கர்ப்பப்பையை முழுமையாக நீக்கிவிடுதல், அல்லது அதிலிருந்து இரத்தம் வராது அடைத்து விடுதல் போன்றவை மூலம் சத்திர சிகிச்சையின் பின் மாதவிடாய் ஏற்பட வாய்ப்பில்லை என்பதை அறிய முடியுமாயிருத்தல். இவ்வாறான பெண்ணுக்கு இஸ்திஹாழாவின் சட்டம் பொருந்தமாட்டாது. (மாதவிடாயிலிருந்து) தூய்மையான பின்பு மஞ்சள் அல்லது மண் நிறத்தில் இரத்தம் வருவதையோ, அல்லது ஈரலிப்பான நிலையையோ கண்ணுற்ற ஒரு பெண்ணுக்குரிய சட்டமே பொருத்தமாகும். இவள் தொழுகை, நோன்பு போன்றவற்றை விடவோ, இல்லறத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கவோ அவசியமில்லை. இதன்போது குளிப்புக் கடமையாகவும் மாட்டாது. எனினும் தொழுகைக்காகச் செல்ல முன்பு இரத்தத்தைக் கழுவி சுத்தம் செய்துகொள்ள வேண்டும். மேலும் இரத்தம் வெளியாவதைத் தடுப்பதற்காக, தனது மர்ம உறுப்பில் துணி போன்ற ஒன்றைக் கட்டிக் கொள்ளவும் வேண்டும். ஐங்காலத் தொழுகை போன்று நேரம் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தொழுகைக்கும் நேரம் நுழைந்ததன் பின்பே வுழூச் செய்ய வேண்டும். அவ்வாறின்றி, ஸுன்னத்தான தொழுகைகளைப் போன்று பொதுவான தொழுகையாக இருந்தால் அதனைத் தொழ நினைக்கும் நேரம் வுழூச் செய்துகொள்ளலாம்.

2. சத்திரசிகிச்சைக்குப் பின்னரும் மாதவிடாய் ஏற்பட வாய்ப்பிருப்பதை அறிய முடியுமாயிருத்தல். இவ்வாறான பெண்ணுக்கு இஸ்திஹாழாவின் சட்டமே வழங்கப்படும். நபியவர்கள் பாத்திமா பின்து அபீ ஹுபைஷ் (ரழி) அவர்களுக்குக் கூறியதை இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். "அது மாதவிடாயல்ல. மாறாக, அது ஓர் உபாதையாகும். உங்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டால்

தொழுகையை விட்டுவிடுங்கள்".[1] "உங்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டால்" என்ற வாசகத்தின் மூலம் இஸ்திஹாழாவின் சட்டம், குறிப்பிட்ட தவனைக்கு முந்தியோ, பிந்தியோ மாதவிடாய் ஏற்பட வாய்ப்புள்ளவர்களுக்கே என்பதனை உணர்த்துகின்றது. மாதவிடாய் ஏற்பட வாய்ப்பற்றவர்களின் இரத்தம் எந்நிலையிலும் நோயின் காரணமாக வெளியாகும் இரத்தமாகவே கருதப்படும்.

## இஸ்திஹாழாவின் சட்டங்கள்:

முன்னர் விவரிக்கப்பட்டவை மூலம் எவ்வகையில் இரத்தம் வெளியேறுவதை மாதவிடாய் (ஹைழ்) எனவும், எவ்வகையில் வெளியேறுவதை தொடருதிரப்போக்கு (இஸ்திஹாழா) எனவும் அறிந்து கொண்டோம். மாதவிடாயாக இருக்கும் பட்சத்தில் அதற்கு மாதவிடாயுடைய சட்டத்தையும், தொடருதரப் போக்காக இருக்கும் பட்சத்தில் அதற்கு இஸ்திஹாழாவுடைய சட்டத்தையும் வழங்க வேண்டும். மாதவிடாய் தொடர்பான முக்கியமான சில சட்டங்கள் ஏற்கனவே கூறப்பட்டுவிட்டன.

இஸ்திஹாழா தொடர்பான சட்டங்கள் பெரும்பாலும் தூய்மையான காலத்துக்குரிய சட்டங்களைப் போன்றுதான். இஸ்திஹாழாப் பெண்ணுக்கும், சுத்தமான நிலையிலுள்ள பெண்ணுக்குமிடையில் பின்வரும் ஒரு சில வேறுபாடுகள் மாத்திரமே காணப்படுகின்றன்றமை குறிப்பிடத்தக்கது.

1. ஒவ்வொரு தொழுகைக்கும் தனித்தனியாக வுழூச் செய்வது அவசியமாகும். நபியவர்கள் பாத்திமா பின்து அபீ ஹுபைஷ் (ரழி) அவர்களுக்கு "பின்பு ஒவ்வொரு தொழுகைக்கும் நீர் வுழூச் செய்துகொள்வீராக"[2]

(1) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: புஹாரி 306, முஸ்லிம் 333.

(2) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: புஹாரி 228.

என்றார்கள். இதற்கு இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் “இரத்தத்தைக் கழுவுதல் பற்றிய பாடம்” என தலைப்பிட்டுள்ளார்கள். அதன் அர்த்தம் யாதெனில், அவ்வாறான பெண் நேரம் குறிப்பிடப்பட்ட தொழுகையை நிறைவேற்றுவதற்காக, அதன் நேரம் நுழைந்த பின்பே வுழூச் செய்யவேண்டும் என்பதாகும். அவ்வாறின்றி, (நேரம் குறிப்பிடப்படாத) உபரியான தொழுகையாக இருந்தால் அதனைத் தொழ நினைக்கும் போதே வுழூச் செய்துகொள்ளலாம்.

*2.* அவள் வுழூச் செய்ய விரும்பினால் இரத்தக் கரைகளைக் கழுவிவிட்டு, இரத்தம் வெளிவராதவாறு அவ்விடத்தில் பஞ்சு வைத்து துணியால் இறுகக் கட்டிக்கொள்ள வேண்டும். ஹம்னா பின்து ஜஹ்ஷ் (ரழி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் “நீங்கள் மர்ம உறுப்பில் பஞ்சு வைத்துக் கொள்ளுங்கள். அது உங்களது இரத்தத்தைப் போக்கிவிடும்”என நபியவர்கள் கூறினார்கள். அப்போது அதை விட அதிகமாக வெளியேறுகிறது என்று கூறவே, நபியவர்கள்: அவ்வாறாயின் ஒரு துணியை வைத்துக் கொள்ளுங்கள் எனக் கூறினார்கள். அதை விடவும் அதிகமாக வெளியேறுகிறது என்று (ஹம்னா (ரழி) அவர்கள்) மீண்டும் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் கடிவாளத்தைப் போன்று (இறுகக்) கட்டிக் கொள்ளுங்கள் என்றார்கள்.[1]

அதன் பின்பும் இரத்தம் வெளியாவது பெண்ணுக்கு

(1) அறிவிப்பாளர்: ஹம்னா பின்து ஜஹ்ஷ் (ரழி), ஆதாரம்: அபூ தாவூத் 287, திர்மிதீ 128. இமாம் புகாரி அவர்கள் இது “ஹஸன்” எனும் தரத்தைக் கொண்டதாகவும், இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் “ஹஸன் ஸஹீஹ்” எனும் தரத்தைக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளதாக இமாம் திர்மிதீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

எந்தொரு பாதிப்பையும் ஏற்படுத்தாது. நபியவர்கள் பாத்திமா பின்து ஹுபைஷ் (ரழி) அவர்களுக்கு "உங்களுடைய மாதவிடாய் நாட்களில் தொழுகையைத் தவிர்ந்து கொள்ளுங்கள். பின்பு குளித்துக் கொள்ளுங்கள். மேலும் ஒவ்வொரு தொழுகைக்கும் வுழூச் செய்து கொள்ளுங்கள். பின்பு தொழுகையை நிறைவேற்றுங்கள். பாயின் மீது இரத்தம் வடிந்தாலும் சரியே" என அறிவுரை பகன்றார்கள்.[1]

*3.* தாம்பத்திய உறவில் ஈடுபடுதல்: உறவில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதன் மூலம் தனது இச்சையைத் தவறான வழியில் தீர்க்க நேரிடும் என அஞ்சாவிட்டால் (இஸ்திஹாழா நிலையிலுள்ள பெண்ணுடன்) தாம்பத்திய உறவில் ஈடுபடுவது அனுமதிக்கப்பட்டதா? என்பதில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். (நிபந்தனைகளின்றி) பொதுவாகவே அனுமதிக்கப்பட்டது என்பதே சரியான கூற்றாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பத்திலொரு விகிதத்தினர், அல்லது அதை விட அதிகமான பெண்கள் இந்த (இஸ்திஹாழா) தொடருதிரப்போக்கு ஏற்படக் கூடியவர்களாகவே இருந்துள்ளார்கள். அல்லாஹ்வோ, அவனது தூதரோ அவர்களை உடலுறவு கொள்வதை விட்டும் தடுக்கவில்லை. மாறாக "மாதவிடாயின் போது பெண்களை விட்டும் ஒதுங்கியிருங்கள்" என்ற வசனம் ஏனைய காலங்களில் அவ்வாறு ஒதுங்கியிருப்பது கடமையில்லை என்பதற்கு சான்றாகும். மேலும் அவளிடமிருந்து தொழுகையே செல்லுபடியாகும் போது தாம்பத்திய உறவு என்பது அதனைவிட இலகுவான காரியமாகும். மாதவிடாய் நிலையிலுள்ள பெண்ணுடன் உறவு கொள்வதையும், தொடருதிரப்போக்குள்ள பெண்ணுடன் உறவுகொள்வதையும் (கியாஸ்) ஒன்றாக ஒப்பிடுவது முறையற்றதாகும். உறவில் ஈடுபடக் கூடாதென்ற

---

(1) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: இப்னு மாஜா∴ 624, அஹ்மத் 24145.

கருத்தைக் கொண்டோர் கூட அவ்விருவரையும் சமமாக நோக்கமாட்டார்கள். இவ்வாறு காரணங்களில் வித்தாயசம் இருக்கும் நிலையில் (கியாஸ் என்ற அடிப்படையில்) சட்டம் எடுக்க முடியாது.



# பாடம் 06
# பிரசவ ருதுவும், அதன் சட்டங்களும்

பிரசவ ருது (நிபாஸ்) என்பது ஒரு பெண்ணின் பிரசவத்தின் போது கர்ப்பப்பையிலிருந்து வெளியேறும் இரத்தப் போக்கைக் குறிக்கும். இது பிரசவத்தின் போதும் ஏற்படலாம். பிரசவத்தின் பின்னரும் ஏற்படலாம். அல்லது பிரசவத்திற்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னர் பிரசவ வலியுடனும் ஏற்படலாம். ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் "பிரசவ வலி ஆரம்பிக்கும்போது அவள் காணும் இரத்தம் நிபாஸாகும்" எனக் கூறியுள்ளார்கள்.[1] இரண்டு, மூன்று நாட்கள் என வரையறுக்காது, பிரசவ வலியுடன் இரத்தம் வந்து, அதனைத் தொடர்ந்து பிரசவம் நிகழ்ந்தாலே நிபாஸ் எனக் கருத வேண்டும், அவ்வாறின்றி அதனை நிபாஸாகக் கருத முடியாது என்பதே அவர்களின் நோக்கமாகும்.

பிரசவ ருது வெளியாகும் குறைந்த கால அளவுக்கோ, கூடிய கால அளவுக்கோ வரையறை உள்ளதா? அதன் கால எல்லை எவ்வளவு? என்பனவற்றில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்: "பிரசவ ருதுவுக்கு குறைந்த கால அளவோ, கூடிய கால அளவோ கிடையாது. ஒரு பெண் 40 நாட்களை விட, அல்லது 60 நாட்களை விட, அல்லது 70 நாட்களை விட அதிக நாட்களாக இரத்தத்தைக் கண்டு, பின்னர் அது நின்று விட்டாலும் நிபாஸாகவே கருத வேண்டும். எனினும் அது தொடர்ச்சியாக

(1) பார்க்க: ஃபதாவா இப்னி தைமிய்யா பாகம் 19 பக்கம் 240

வெளியாகிக்கொண்டே இருந்தால் அது நோய்க்குரிய இரத்தமாகும். இச்சந்தர்ப்பத்தில் அவளுக்குரிய நிபாஸின் கால எல்லையாக 40 நாட்களை வரையறுக்க வேண்டும். ஏனெனில் பல்வேறு அறிவிப்புக்களின் அடிப்படையில் அதுவே பெரும்பாலான பெண்களின் நிபாஸின் கால எல்லையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது(1).

(நூலாசிரியரின் கூற்று) நான் கூறுகின்றேன்: மேற்கூறப்பட்ட கருத்தின் அடிப்படையில் ஒரு பெண்ணுக்கு 40 நாட்களைத் தாண்டியும் பிரசவ ருது வெளியாகிக் கொண்டிருந்தால், (முன்னைய பிரசவங்களின் அனுபவத்தின் பிராகாரம்) பின்னர் நின்று விடுமென்ற எதிர்பார்ப்போ, நின்று விடுவதற்கான அறிகுறிகளோ தென்பட்டால் சற்று எதிர்பார்த்திருக்க வேண்டும். அவ்வாறில்லையெனில் 40 நாட்கள் பூர்த்தியாவதுடன் குளித்து சுத்தமாகிக் கொள்ள வேண்டும். ஏனெனில் அதுவே பெரும்பாலானவர்களின் நிபாஸின் காலமாகும். எனினும், அதனுடன் சேர்த்து மாதவிடாயின் காலத்தை எதிர்கொண்டால், அது நிறைவடையும் வரை காத்திருக்க வேண்டும். அதன்பின் இரத்தம் நின்றுவிட்டால் (பிரசவத்திற்கு முன்னர் இருந்த) வழமையின்படி நடந்து கொள்ள வேண்டும். இரத்தம் தொடர்ந்தும் வெளியானால் அதனை இஸ்திஹாழாவாகவே கருத வேண்டும். முன்னர் அவள் கடைப்பிடித்த இஸ்திஹாழாவின் சட்ட திட்டங்களைப் பேண வேண்டும். 40 நாட்களுக்கு முன்பே பிரசவ ருது நின்றுவிட்டால் அவள் தூய்மையாகிவிடலாம். எனவே குளித்து விட்டு தொழுகை, நோன்பு, கணவனுடன் தாம்பத்திய உறவில் ஈடுபடல் யாவும் அனுமதிக்கப் பட்டதாகும். எனினும் “ஒரு நாளை விடக் குறைந்த கால எல்லைக்குள் இரத்தம் நின்றுவிட்டால் எந்தவொரு சட்டமும் கிடையாது” என அல்மு.:. க்னீ என்ற நூலில் அதன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்(2).

---

(1) பார்க்க: .:.பதாவா இப்னி தைமிய்யா பாகம் 19 பக்கம் 239

(2) பார்க்க: ஷஅல்முக்.:.னீ’ பாகம்: 1, பக் 252.

பிரசவத்தின்போது மனித உருவமைப்பு தெளிவாக விளங்கும் வகையில் குழந்தையைப் பெற்றெடுத்தால் மாத்திரமே பெண்ணுக்கு நிபாஸ் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும். குறைப் பிரசவமாக மனித உருவமைப்பற்ற வகையில் சிசுவைப் பெற்றெடுத்தால் அப்பெண்ணுக்கு ளியாகும் இரத்தத்தை நிபாஸ் எனக் கருதப்படமாட்டாது. மாறாக அதனை நோய்க்குரிய இரத்தமாகவே கருதப்படும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் தொடருதிரப் போக்குள்ள பெண்ணுக்குரிய சட்டத்தையே அவளும் கடைப்பிடிக்க வேண்டும். மனித உருவமைப்பு தெளிவாக விளங்குவதற்கான குறைந்தபட்ச காலம் கர்ப்பம் தரித்தது முதல் 80 நாட்களாகும், அதிகபட்ச காலம் 90 நாட்களாகும். “இக்கால எல்லைக்கு முன்பதாக இரத்தம் வெளியானால் அதனைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. இக்கால எல்லையைத் தாண்டிய பின் வெளியானால் தொழுகை, மற்றும் நோன்பைத் தவிர்ந்திருக்க வேண்டும். பின்பு பிரசவத்தின் பின்னர் (பூரண உருவமைப்பைக் கொண்ட குழந்தையா? அல்லது மனித உருவமைப்பற்ற குறைப் பிரசவமா என்பது) தெளிவாகிவிடும். தெளிவாகிய பின்பு நினைத்ததற்கு மாற்றமாக இருந்தால் (அதாவது உருவமற்ற குறைப் பிரசவமாக இருந்தால் இஸ்திஹாழாவின் சட்டத்திற்கு) மீண்டு, விடுபட்ட தொழுகை, நோன்பு போன்றவற்றை மீட்ட வேண்டும். அவ்வாறு விடயம் தெளிவாகாவிட்டால் (நிபாஸ் என்ற) வெளிப்படையான சட்டமே தொடர்ந்திருக்கும். (விடுபட்ட தொழுகைகளை) மீட்டத் தேவையில்லை” என அல்மஜ்த் இப்னு தைமிய்யா[1] அவர்கள் கூறியுள்ளார்கள்.[2]

---

(1) மஜ்துத்தீன் என்ற சிறப்புப் பெயர் கொண்ட இவரின் முழுப்பெயர் அப்துஸ்ஸலாம் பின் அப்தில்லாஹ் இப்னு தைமிய்யா என்பதாகும். ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்களின் பாட்டனாராகிய இவர்கள் ஹதீஸ் மற்றும் தப்ஸீர் கலையில் சிறந்து விளங்கியதுடன் ஹன்பலி மத்ஹபின் சிறந்த இமாமாகவும் திகழ்ந்தார்கள். ஹி. 652ல் இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

(2) பார்க்க: கஷ்ஷா∴புல் கினா∴ பாகம் 1, பக் 219.

## (நிபாஸ்) பிரசவ ருதுவின் சட்டங்கள்:

பின்வரும் விடயங்களைத் தவிர நிபாஸின் சட்டங்கள் யாவும் மாதவிடாயின் சட்டங்களைப் போன்றாகும்.

1. இத்தா: இது விவாகரத்தை அடிப்படையாக வைத்து கணிக்கப்படுமே தவிர நிபாஸை அடிப்படையாக வைத்துக் கணிக்கப்படமாட்டாது. ஏனெனில், பிரசவத்திற்கு முன்னர் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்ணின் இத்தாவின் காலம் பிரசவத்துடன் முடிவடைந்து விடுகின்றது. பிரசவத்திற்குப் பின் விவாகரத்துச் செய்யப்பட்டால் முன்னர் விளக்கப்பட்ட பிரகாரம் மாதவிடாயின் சட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

2. ஈலா.: ஈலா.வுக்குரிய (நான்கு மாத காலத்) தவணைக்குள் மாதவிடாயின் காலமும் கணக்கெடுக்கப்படும். எனினும், (நிபாஸ்) பிரசவ ருதுவின் காலம் இதனுள் கணக்கெடுக்கப்பட மாட்டாது.

   ஈலா. என்பது ஒருவன் தனது மனைவியுடன் இதன் பின்பு ஒருபோதும் அல்லது நான்கு மாதங்களுக்கதிகமான காலம் இல்லற உறவில் ஈடுபடுவதில்லை என சத்தியம் செய்வதாகும். அவ்வாறு சத்தியம் செய்த பின், அவனுடைய மனைவி தன்னுடன் உறவில் ஈடுபடுமாறு வேண்டினால், நீதிபதி, சத்தியம் செய்யப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதகாலம் கணவனுக்கு தவணையளித்து, அத்தவணை பூர்த்தியான பின் மனைவியுடன் தாம்பத்திய உறவில் ஈடுபடுமாறோ, அல்லது மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க விவாகரத்துச் செய்யும்படியோ கட்டளையிடுவார். இதற்குள் மனைவிக்கு மாதவிடாய் ஏற்பட்டால், ஈலாவின் தவனை நான்கு மாதங்களாகவும், பிரசவ

இரத்தம் ஏற்பட்டால், அதன் கால அளவிற்கேற்ப நான்கு மாதங்களை விட அதிக காலமும் வழங்கப்படும்.

3. பருவமடைதல்: இது மாதவிடாயின் மூலம் மாத்திரமே ஏற்படும். நிபாஸின் மூலம் ஏற்படமாட்டாது. தாம்பத்திய உறவில் ஈடுபட முன்னரே வெளியாகும் திரவம் வெளிவராத நிலையில் ஒரு பெண், கர்ப்பம் தரிக்க முடியாது. எனவே கர்ப்பம் தரிக்க முன்னர் வெளிப்படும் அத்திரவத்தின் மூலமே அவள் பருவமடைகின்றாள்.

4. மாதவிடாய் குறிப்பிட்ட சில காலங்கள் நின்று விட்டு, மீண்டும் வழமை போன்றே வர ஆரம்பித்தால் சந்தேகமின்றி அதனை மாதவிடாய் என்றே தீர்மானிக்க வேண்டும். உதாரணமாக: ஒரு பெண்ணின் வழமையான மாதவிடாயின் காலம் எட்டு நாட்கள் என்றால், அவளுக்கு நான்கு நாட்கள் மாதவிடாய் ஏற்பட்டு நின்று விட்டது. பின்னர் ஏழாம், எட்டாம் நாட்களில் மீண்டும் இரத்தம் வெளியானால் அதனையும் சந்தேகமின்றி மாதவிடாய் என்றே கருத வேண்டும். மாதவிடாயின் சட்டங்கள் யாவும் அந்நிலையிலும் பின்பற்றப்பட வேண்டும். ஆனால் நிபாஸைப் பொருத்தவரையில் இடையில் நின்றுவிட்டு, பின்பு நாற்பது நாட்களுக்குள்ளேயே மீண்டும் இரத்தம் வந்தால் அவ்விரத்தம் சந்தேகத்திற்குரியதாகும். இவ்வாறு ஏற்படும் பெண், கடமையான தொழுகை, நோன்புகளை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்ற வேண்டும். கடமையான வணக்கங்களைத் தவிர மாதவிடாய் நிலையிலுள்ள பெண்ணுக்குத் தடைசெய்யப்பட்டுள்ள ஏனையை அனைத்து விடயங்களும் இப்பெண்ணுக்கும் ஹராமாகும். இவ்வாறாக இரத்தம் வெளியாகும் காலத்தில் அவள் நிறைவேற்றியவைகளில் மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணொருவள் தூய்மையான பின்பு (நோன்பு போன்ற) மீட்ட வேண்டியவற்றை

இப்பெண்ணும் தூய்மையான பின்பு நிறைவேற்றுவது அவசியமாகும். ஹன்பலி மத்ஹபின் பிரபலமான மார்க்க அறிஞர்களிடம் இதுவே பலமான கருத்தாகும். எனினும் இவ்விவகாரத்தில் வலுவான கருத்து பின்வருமாறே அமைகின்றது:

- பெரும்பாலும் (நிபாஸ்) பிரசவ ருது வெளியாகும் கால வட்டத்தினுள் இவ்வாறு நின்றுவிட்டு, மீண்டும் வெளியானால் அதனையும் நிபாஸாகவே கருதப்படும்.
- பிரசவ ருதுவின் கால எல்லை முடிந்த பின்பு வெளியானால் அதனை மாதவிடாயாகவே கருதப்படும்.
- பிரசவ ருது தொடர்ந்து வந்து கொண்டே இருந்தால் அதனை இஸ்திஹாழாவாகவே கருதப்படும்.

இமாம் இப்னு ஃகுதாமா (ரஹ்) அவர்கள் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுடைய கூற்றெனத் தனது ‘அல்முஃனீ’ எனும் நூலில் அறிவித்திருக்கும் கூற்றுக்கு இக்கருத்தே நெருக்கமானதாகும். இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளதாவது: “ஒரு பெண் (இரத்தம் நின்று) இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின் மீண்டும் இரத்தம் வெளிவருவதைக் கண்டால் அதுவும் நிபாஸாகும். அவ்வாறில்லையெனில் அது மாதவிடாயாகும்”.(1) ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்களின் தெரிவும் இதுவே. இவ்வாறு வெளியாகும் இரத்தங்களில் சந்தேகமான இரத்தம் என யதார்த்தத்தில் எதுவும் கிடையாது. சந்தேகம் என்பது மனிதர்களிடமுள்ள அறிவு, விளக்கம் போன்றவற்றைக் கொண்டு வேறுபடக்கூடியது. அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் சகல சந்தேகங்களுக்கும் தெளிவு உள்ளது. ஓர்

(1) பார்க்க: ஷஅல்முக்ஃனீ’ பாகம் 1, பக் 253.

வணக்கம் முழுமை பெற கட்டாயம் மீட்டப்பட வேண்டிய நிலையிலுள்ள தவறொன்று ஏற்பட்டாலே அன்றி, அல்லாஹ் எந்தொரு நோன்பையோ, அல்லது தவா.ஃ.பையோ இரு தடவைகள் நிறைவேற்றுமாறு அடியார்களைப் பணிக்கவில்லை. அடியார்களுக்கு ஏவப்பட்டுள்ள எக்கடமையாயினும் யாரொருவர் அவரின் சக்திக்குட்பட்ட விதத்தில் ஒழுங்காக நிறைவேற்றுவாரோ அவர் தமது பொறுப்பிலிருந்து நீங்கிவிட்டவராவார். அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

﴿لَا يُكَلِّفُ ٱللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا﴾ [البقرة: ٢٨٦]

அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் சிரமப்படுத்தமாட்டான். (அல்பகரா: 286).

மேலும்:

﴿فَٱتَّقُواْ ٱللَّهَ مَا ٱسْتَطَعْتُمْ﴾ [التغابن: ١٦]

ஆகவே, உங்களால் இயன்றளவு அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள். (அத்த.ஃ.காபுன்: 16).

**5.** வழமைக்கு முன்பதாகவே மாதவிடாயிலிருந்து ஒரு பெண் தூய்மையானால், எவ்வித முரண்பாடுமின்றி கணவன் அவளுடன் இல்லறத்தில் ஈடுபடலாம். ஆனால், பிரசவ ருது ஏற்பட்ட ஒரு பெண், 40 நாட்களுக்கு முன்பதாகவே தூய்மையானால், அவளுடன் கணவன் தாம்பத்திய உறவில் ஈடுபடுவது வெறுக்கத்தக்க செயலாகும் என்பதே (ஹன்பலி) மத்ஹபின் பிரபலமான கருத்தாகும். எனினும் அது வெறுக்கத்தக்க செயலாகமாட்டாது என்பதே சரியானதும், பெரும்பாலான அறிஞர்களினதும் கூற்றாகும். ஏனெனில் வெறுக்கத்தக்க செயல் என்பது மார்க்கத்தின் ஒரு சட்டமாகும். எனவே, ஒன்றை வெறுக்கத்தக்கது என சட்டம் கூறுவதாயின், பொருத்தமான ஆதாரம்

முன்வைக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் உஸ்மான் பின் அபில் ஆஸ்[1] (ரழி) அவர்களைப் பற்றி இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் முன்வைத்துள்ள பின்வரும் ஓர் அறிவிப்பைத் தவிர வேறு எந்த ஆதாரமும் கிடையாது. உஸ்மான் பின் அபில் ஆஸ் (ரழி) அவர்களின் மனைவிக்கு நிபாஸ் ஏற்பட்டு, 40 நாட்கள் கழிவதற்கு முன்பதாகவே (தாம்பத்திய உறவில் ஈடுபடுவதற்காக) அவர்களை நோக்கி வந்தபோது, அவர்கள் தன்னிடம் நெருங்க வேண்டாம் எனத் தடுத்தார்கள். இவர்களின் இந்நிகழ்வை வெறுக்கத் தக்க செயல் என்பதற்கான ஆதாரமாகக் கொள்ள முடியாது. ஏனெனில், சில வேளை தமது மனைவி தூய்மையடைந்திருப்பது உறுதியற்ற நிலையில் தாம்பத்திய உறவில் ஈடுபடுவதை அவர் அஞ்சி பேணுதலுக்காகத் தவிர்ந்திருக்கலாம். அல்லது உறவில் ஈடுபடுவதின் மூலம் மீண்டும் இரத்தம் வெளிவரலாம் எனக் கருதியோ, அல்லது அதுபோன்ற வேறு காரணங்களுக்காகவோ தவிர்ந்திருக்கலாம். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

---

(1) அபூ அப்தில்லாஹ் என்ற புனைப் பெயரைக்கொண்ட உஸ்மான் பின் அபில் ஆஸ் என்பவர் தாஇபைச் சேர்ந்த ஷஸகீ.ப்’ கோத்திரத்திலுள்ள பிரபலமான நபித்தோழராவார். ஹி. 9 ல் நபியவர்களிடம் கூட்டமாக வந்து இஸ்லாத்தை ஏற்றபோது, அக்கூட்டத்துக்கு தலைவராக நபியவர்கள் இவரை நியமித்தார்கள். அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் தாஇப் நகரிற்கு கவர்ணராக இருந்த இவர்களை பின்னர் ஒமான் மற்றும் பஹ்ரைன் பகுதிகளுக்கும் உமர் (ரழி) அவர்கள் இவரை பணியாளராக நியமித்தார்கள். ஹி. 51 ல் பஸராவில் மரணித்தார்கள்.

# பாடம் 07

# மாதவிடாயைத் தடுக்கும், அல்லது வரவழைக்கும் சாதனங்களைப் பயன்படுத்தல் மற்றும், கருத்தடை அல்லது கருக்கலைப்புச் சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பான சட்டங்கள்

## மாதவிடாயைத் தடுக்கும் சாதனங்களைப் பயன்படுத்தல்:

ஒரு பெண் மாதவிடாயைத் தடுக்கும் சாதனங்களை, பின்வரும் இரு நிபந்தனைகளுடன் பயன்படுத்தலாம்:

*1.* அதன் மூலம் தனக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாதிருத்தல். அவ்வாறு பாதிப்புகள் ஏதும் ஏற்படலாமென அஞ்சினால் அதனைப் பயன்படுத்த முடியாது. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَلَا تُلْقُوا۟ بِأَيْدِيكُمْ إِلَى ٱلتَّهْلُكَةِ﴾ [البقرة: ١٩٥]

இன்னும் அழிவின் பக்கம் உங்கள் கைகளைக் கொண்டு செல்லாதீர்கள். (அல்பகரா: 195). மேலும் கூறுகின்றான்:

﴿وَلَا تَقْتُلُوٓا۟ أَنفُسَكُمْ ۚ إِنَّ ٱللَّهَ كَانَ بِكُمْ رَحِيمًا﴾ [النساء: ٢٩]

உங்களை நீங்களே கொன்றுவிடாதீர்கள் (அந்நிஸா: 29).

*2.* மனைவிக்கு ஏற்படும் மாதவிடாயுடன் கணவனுக்கு

ஏதாவது ஒருவகையில் தொடர்பிருந்தால் அவரிடம் அனுமதி பெற வேண்டும்.

உதாரணமாக: விவாகரத்துச் செய்யப்பட்டு மாதவிடாய் அடிப்படையில் இத்தா இருக்கும் ஒரு பெண்ணாக இருந்தால், அப்பெண்ணுக்கு (முதல் இரு விவாகரத்தில்) கணவன் செலவினங்களை வழங்குவது கடமையாகும். இவ்வாறான பெண்ணாக இருந்தால், தனக்குக் கிடைக்கும் செலவினங்களை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் இத்தாவின் காலத்தை நீடிப்பதற்காக மாதவிடாய்த் தடுப்பு சாதனங்களை மேற்கொள்ளலாம். இந்நிலையில் அவள் தனது கணவனின் அனுமதியின்றி அச்சாதனங்களைப் பயன்படுத்தலாகாது.

அவ்வாறே மாதவிடாயைத் தடுப்பதன் மூலம் கருத்தரிப்பதை தடைசெய்யலாம் என்ற நிலையிலும் கணவனிடம் அனுமதி பெறவேண்டும்.

அனுமதிக்கப்பட்ட வைகளாக இருப்பினும் மாதவிடாயைத் தடை செய்யும் சாதனங்களை தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தாமலிருப்பதே ஏற்றமானது. ஏனெனில் இயற்கையாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒன்றை அதன் ஒழுங்கில் விட்டுவிடுவதே ஆரோக்கியத்திற்கும், பாதுகாப்புக்கும் மிகப் பொருத்தமானது.

### மாதவிடாயை வரவழைக்கும் சாதனங்களைப் பயன்படுத்தல்:

மாதவிடாயை வரவழைக்கும் சாதனங்களை இரு நிபந்தனைகளுடன் பயன்படுத்தலாம்:

*1.* கடமையான வணக்கத்தை விடுவதற்கான தந்திர நோக்கமாக இல்லாதிருத்தல்.

உதாரணமாக, நோன்பு நோற்காது தவிர்ப்பதற்காக ரமழான் மாதத்தை நெருங்கும்போது பயன்படுத்தல்,

அல்லது பொதுவாகவே தொழுகையை விடுவதற்காகப் பயன்படுத்தல்.

*2.* கணவனின் அனுமதியுடன் பயன்படுத்தல்.

ஏனெனில் மாதவிடாய் ஏற்படும்போது, மனைவியின் மூலம் முழுமையான இல்லற சுகத்தை அனுபவிக்க முடியாது. எனவே அவனுடைய உரிமையைப் பாதிக்கும் ஒரு செயலை அவன் அனுமதியின்றி செய்யலாகாது. அவ்வாறே (முதலாவது, அல்லது இரண்டாவது தடவை) விவாகரத்துச் செய்யப் பட்டவளாக இருந்தால், இவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் அவளை மீட்டெடுக்கும் உரிமையை கணவனிடமிருந்து அவசரமாக நீக்குவதாக அமைந்துவிடும்.

### கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தல்:

இது இரு வகைப்படும்.

*1.* நிரந்தரமாகவே கருத்தடை செய்தல்.

இது அனுமதியற்றது. ஏனெனில் இதன் மூலம் கருத்தரிப்பது முழுமையாகத் துண்டிக்கப்படுவதுடன், சந்ததியினரையும் குறைத்துவிடும். மேலும், இது இஸ்லாமிய சமூகத்தைப் பெருக்குதல் என்ற இறைவனின் நோக்கத்திற்கு முரணானதாகும். மேலும் தற்போது இருக்கும் குழந்தைகள் எப்போது மரணிப்பார்கள் என்ற உத்தரவாதம் கிடையாது. சிலவேளை, பிள்ளைகள், கணவனை இழந்து விதவையாக நேரிடலாம்.

*2.* தற்காலிகமாகக் கருத்தடை செய்தல்.

உதாரணமாக, ஒரு பெண் அடிக்கடி கருத்தரிக்கக்

கூடியவளாக இருந்து, அது அவளுக்கு சிரமமாக இருப்பதால், இரு வருடங்களுக்கொரு முறை என்ற அடிப்படையில் ஒழுங்கான கருத்தரிப்பை ஏற்படுத்துவதற்காக தற்காலிகமாகக் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவதாக இருந்தால் கணவனின் அனுமதியுடனும், அவளுக்கு எவ்விதப் பாதிப்பும் அற்ற நிலையிலும் அனுமதிக்கப் பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்களின் காலத்தில், நபித்தோழர்கள் தமது மனைவியர் கருத்தரிப்பதைத் தவிர்ப்பதற்காக "அஸ்ல்" செய்யக்கூடியவர்களாக இருந்தனர். அதனை விட்டும் அவர்கள் தடை செய்யப்படவில்லை. ("அஸ்ல்" என்பது: ஒரு மனிதன் மனைவியுடன் தாம்பத்திய உறவில் ஈடுபட்டு தனது விந்துவை உள்ளே செலுத்தாமல் வெளியே விடுவதாகும்.)

## கருக்கலைப்புச் சாதனங்களைப் பயன்படுத்தல்:

இது இரு வகைப்படும்.

*1.* வயிற்றிலுள்ள சிசுவை முழுமையாக அழித்துவிடும் நோக்கில் பயன்படுத்தல்.

சிசுவிற்கு உயிர் வழங்கப்பட்ட பின்பு கருக்கலைப்புச் சாதனங்களைப் பயன்படுத்துவது ஹராம் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. ஏனெனில் இது அல்லாஹ்வால் கண்ணியப்படுத்தப்பட்ட ஓர் உயிரை, எவ்விதக் காரணமும் இன்றி கொலை செய்வதாகும். அவ்வாறு ஓர் உயிரைக் கொலை செய்வது அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவு ஆகிய அனைத்தின் அடிப்படையிலும் ஹராமாகும். ஆனால், சிசுவிற்கு உயிர் கொடுக்கப்பட முன்பு

கருக்கலைப்புச் செய்தல் பற்றி அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். அவற்றில் சில பின்வருமாறு:

1. பொதுவாகவே அனுமதிக்கப்பட்டது.
2. அறவே அனுமதியற்றது.
3. தொடக்க நிலையிலுள்ள கரு இரத்தக்கட்டியாக மாற்றமடைய முன்பு அனுமதிக்கப்பட்டது. (அதாவது கருத்தரித்து 40 நாட்களுக்குள்)
4. மனித உருவமைப்பு ஏற்பட முன்பு அனுமதிக்கப்பட்டது.

எனினும், அவசியத் தேவையின்றி கருக்கலைப்புச் செய்யாமலிருப்பதே ஏற்றமானது. உதாரணமாக, சிசுவை சுமக்க முடியாதளவு ஒரு தாய் சுகயீனமுற்றிருத்தல். இச்சந்தர்ப்பத்தில் அச்சிசுவிற்கு மனித உருவமைப்பு ஏற்பட முன்பு கருக்கலைப்புச் செய்ய அனுமதியிருப்பதுடன், மனித உருவமைப்பு ஏற்படும் காலஅளவு சென்ற பின்பு அனுமதிக்கப்படமாட்டாது.

*2.* வயிற்றிலுள்ள சிசுவை அழித்துவிடும் நோக்கம் இல்லாதிருத்தல்.

உதாரணமாக ஒரு பெண்ணுடைய கர்ப்பகாலம் முடிந்து பிரசவ நேரம் நெருங்கும்போது குழந்தையை வெளியில் எடுக்கும் முயற்சியைக் குறிப்பிடலாம். (ஸின்டோ பயன்படுத்தல்). தாய்க்கோ, குழந்தைக்கோ பாதிப்பில்லாத பட்சத்திலும், சத்திர சிகிச்சை (ஸிஸேரியன்) மேற்கொள்ளாமலும் இருந்தால் இவ்வாறு செய்வதற்கு பூரண அனுமதியுண்டு. சத்திர

சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால், நான்கு நிலைகள் உள்ளன:

1. தாயும், குழந்தையும் உயிருடன் இருத்தல்.

   இந்நிலையில் குழந்தையைப் பிரசவிக்க முடியாமல் ஒரு பெண் தவிப்பது போன்ற இக்கட்டான சூழ்நிலையிலன்றி சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியாது. ஏனெனில், உடல் என்பது ஓர் அடியானுக்கு (அல்லாஹ்வினால்) வழங்கப்பட்டுள்ள அமானிதமாகும். பெரியதோர் நலனுக்காகவே தவிர இத்தகைய ஆபத்தான விடயத்தை முன்னெடுக்க முடியாது. சிலவேளை பாதிப்பெதுவும் ஏற்படாது என நினைத்து, இக்காரியத்தில் இறங்கினாலும், பின்னர் அதுவே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியும் விடலாம்.

2. தாயும், குழந்தையும் இறந்திருத்தல்.

   இச்சந்தர்ப்பத்தில் சத்திரசிகிச்சை செய்ய முடியாது. ஏனெனில் அதன் மூலம் எவ்விதப் பயனையும் அடைய முடியாது.

3. தாய் உயிருடனும், குழந்தை இறந்தும் இருத்தல்.

   எவ்வித பாதிப்பும் தாய்க்கு ஏற்படாவிடின் குழந்தையை வெளியிலெடுக்க சத்திரசிகிச்சை செய்யலாம். வயிற்றிலிருக்கும் ஒரு சிசு இறந்துவிட்டால் (அல்லாஹ்வே மிக்க அறிந்தவன்) பெரும்பாலும் சத்திர சிகிச்சையின்றி அதனை வெளியேற்ற முடியாது. அச்சிசு தொடர்ந்தும் வயிற்றிலேயே இருப்பது, தாய் வேறொரு சிசுவை கருத்தரிப்பதற்குத் தடையாக இருப்பதுடன், வேறு பல சிரமங்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. சில சமயம்

முன்னைய கணவனிடமிருந்து விவாகரத்துச் செய்யப்பட்டு, இத்தா இருப்பவளாக இருந்தால் நிரந்தரமாக (கணவனோ, குழந்தைகளோ இன்றி) விதவையாகவே இருக்க நேரிடும்.

4. தாய் இறந்தும், குழந்தை உயிருடனும் இருத்தல்.

இச்சந்தர்ப்பத்தில் குழந்தை தொடர்ந்து உயிருடன் இருக்க மாட்டாது எனக் கருதினால், சத்திரசிகிச்சை செய்ய முடியாது.

அக்குழந்தை உயிருடனிருக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தால் பின்வருமாறு செயற்பட வேண்டும்:

- அக்குழந்தையின் ஒரு பகுதி வெளியே வந்திருந்தால் மீதியை வெளியே எடுப்பதற்காக தாயுடைய வயிற்றில் ஒரு பகுதியைப் பிளக்க வேண்டும்.
- அக்குழந்தையின் எப்பகுதியும் வெளியே வராவிட்டால், மத்ஹபுடைய அறிஞர்களின் கருத்துப் பிரகாரம் தாயுடைய வயிற்றை பிளக்கக்கூடாது. ஏனெனில் அது உடலை உருக்குலைத்து, சித்திரவதை செய்வது போன்றாகும்.

எனினும் வயிற்றில் ஒரு பகுதியைப் பிளக்காமல் குழந்தையை வெளியே எடுக்க சாத்தியம் இல்லாதபோது, அவ்வாறு பிளந்து எடுக்கலாம் என்பதே வலுவான கருத்தாகும். இப்னு ஹுபைரா(1) என்ற அறிஞரின் தெரிவும்

(1) இப்னு ஹுபைரா: அபுல் முளப்பர் ஔனுத்தீன் யஹ்யா இப்னு ஹுபைரா இப்னு முஹம்மத் இப்னு ஹுபைரா என்பதே இவரது முழுப்பெயராகும். இவர் அப்பாஸிய அமைச்சர்களில் பிரபலமானவர். வரலாறு, இலக்கியம், மார்க்கச் சட்டக்கலை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கிய இவர் பல நூற்களை இயற்றியுள்ளார்கள். ஹி. 560 ல் மரணமானார்கள்.

இதுவே. அக்கருத்தே ஏற்றமானதென "அல் இன்ஸாப்"எனும் நூலில் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[1].

(இந்நூலாசிரியரின் கூற்று) நான் கூறுகின்றேன்: "குறிப்பாக இக்காலத்தில் இதனை மிக ஏற்றமானதாகவே கருதுகிறேன். ஏனெனில் சத்திர சிகிச்சையை சித்திரவதையெனக் கருதமுடியாது. ஏனெனில் பிளக்கப்பட்ட வயிறு மீண்டும் தைக்கப்பட்டுவிடுகிறது. மேலும் மரணித்தவருக்கு இருக்கும் கண்ணியத்தை விட உயிரோடுள்ளவரின் கண்ணியம் மகத்தானது. உயிருடனிருக்கும், பாவக் கறைகள் எதுவும் படியாத பச்சிலம் பாலகனைப் பாதுகாப்பது கடமையாகும். தாயின் வயிற்றில் இருக்கும் சிசுவானது பாவங்களற்ற ஒரு மனிதப்பிறவியாகும். எனவே அதனைப் பாதுகாப்பது இன்றியமையாத கடமையாகும். அல்லாஹ் மிக்க அறிந்தவன்.

குறிப்பு: முன்னர் கூறப்பட்ட கருக்கலைப்பு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் கணவனின் அனுமதி பெறுவது அவசியமாகும்.

(1) பார்க்க: 'அல்இன்ஸா.'.ப்' பாகம் 2, பக் 556.

# முடிவுரை

நாம் முக்கிய தலைப்பிட்டு விளக்க நாடிய விடயங்களே இங்கு பதியப்பட்டவை. இவற்றை நாம் அடிப்படை விடயங்களுடன் மாத்திரம் சுருக்கிக் கொண்டோம். ஏனெனில் இதன் பகுதிகள், பிரிவுகள், இதனுடன் தொடர்புடைய பெண்களுடன் தொடர்புள்ள பல்வேறு பிரச்சினைகள் என்பன கரை காணாத கடல் போன்றதே. எனினும் நுண்ணறிவுள்ள எவரும் சிறிய பிரச்சினைகளை அதன் அடிப்படைகளுடனும், அதன் பிரிவு, பகுதிகளை அதற்கு நிகரானவற்றுடனும் இணைத்துப் பார்த்து விளங்கிக்கொள்வர்.

நபிமார்கள் கொண்டுவந்த மார்க்கத்தை எத்தி வைப்பதிலும், அதனைத் தெளிவுபடுத்துவதிலும் அல்லாஹ்வுக்கும், அடியார்களுக்கும் மத்தியில் ஒரு பாலமாகவே தான் இருக்கின்றேன் என்பதை மார்க்கத் தீர்ப்பளிக்கும் முப்தி[(1)] விளங்கிக்கொள்ள வேண்டும். அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவில் (இருந்து அவர் அளிக்கும் விளக்கங்களுக்கு) அவரே பொறுப்பானவர். ஏனெனில் விளங்கி செயற்பட ஓர் அடியான் கட்டளையிடப் பட்டிருப்பது இவ்விரு மூலாதாரங்களின் அடிப்படையில் மாத்திரம்தான். இவற்றுக்கு மாற்றமான எதனையும் தட்டிவிடுவது அவசியமாகும். அவற்றை அடிப்படையாக வைத்து அமல் செய்ய முடியாது. சிலவேளை இஜ்திஹாத் அடிப்படையில் அவ்வாறான கூற்றைக் கூறியவர், அவரது தவறுக்காக

---

(1) "முப்தி": அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் அடிப்படையில் ஆய்வு செய்து மார்க்கத் தீர்ப்பு வழங்குபவர்.

மன்னிப்பு வழங்கப்பட்டு, கூலியும் வழங்கப் பட்டிருக்கலாம். ஆனால், அதனைத் தவறென்று அறிந்தவர் அதனைப் பின்பற்ற முடியாது.

ஒரு முப்தி தனது எண்ணத்தை அல்லாஹ்வுக்காகத் தூய்மையாக்குவது அவசியமாகும். தன்னிடம் வரக்கூடிய பிரச்சினைகளுக்கு சரியான முடிவை எட்டவும், அதில் உறுதியாக இருக்கவும் அல்லாஹ்விடம் உதவியைக் கோர வேண்டும். அவர் தனது ஆய்வில், அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன், மற்றும் அஸ்ஸுன்னாவில் இடம்பெற்றுள்ள வற்றையே எடுக்க வேண்டும். அவ்விரண்டிலும் ஆய்வு செய்து, அதனை விளங்குவதற்குத் துணையாகவே அறிஞர்களின் கூற்றுக்களை எடுக்கவேண்டும்.

ஒருவரிடம் பல்வேறு கேள்விகள் உருவாகி, அவற்றுக்கான தெளிவைப் பெற, தனது சக்திக்குட் பட்டவாறு அறிஞர்களின் கருத்துக்களில் தேடுதல் முயற்சியை மேற்கொள்கின்றார். எனினும், அவரது உள்ளம் திருப்திகொள்ளும் விதமான தகுந்த பதிலை அவற்றில் அவர் பெற்றுக்கொள்வதில்லை. அல்லது அறவே அதனைப் பற்றி எதுவும் கூறப்பட்டிருக்காது. இச்சந்தர்ப்பத்தில் அவர் அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவின் பால் தனது தேடுதலை முன்வைத்தால், அவருடைய கேள்விகளுக்கு நெருக்கமான, பொருத்தமான தீர்ப்பை அவற்றில் கண்டுகொள்வார். இத்தகைய தெளிவு அவரது உளத்தூய்மை, அறிவுத்திறமை, விளக்கம் ஆகியவற்றைப் பொருத்தே அமைகின்றன.

ஒரு முப்தி மார்க்கத் தீர்ப்பு வழங்கும்போது, அவசரப்படாமல் நிதானத்தைக் கடைபிடிப்பது அவசியமாகும். அவசரப்பட்டு வழங்கிய எத்தனையோ தீர்ப்புக்கள், பின்னர் ஆராய்ந்து, தவறென்று உணர்ந்து, கவலைப்பட்ட சந்தர்ப்பங்கள்

ஏராளம். சில சந்தர்ப்பங்களில் தான் வழங்கிய தீர்ப்பை திருத்திக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்டவரை அணுக முடியாத நிலையும் ஏற்படுவதுண்டு.

ஒரு முப்தியின் நிதானம், உறுதி போன்றவற்றை மக்கள் அறிந்து கொண்டால் அவருடைய தீர்ப்பில் நம்பிக்கை கொள்வர். அவர் நிதானமின்றி அவசரப் படுவதை மக்கள் அறிந்தால் (அவசரப்படுபவர் அதிக தவறுகள் விடுபராக இருப்பார் என்ற வகையில்) அவர் வழங்கும் தீர்ப்பில் மக்கள் நம்பிக்கையிழந்து விடுவர். அவருடைய அவசரத்தினாலும், தவறினாலும் தன்னையும், பிறரையும் பல நல்ல தீர்ப்புக்கள், அறிவுகளை விட்டும் தூரமாக்கி விடுகின்றார்.

எம்மையும், எமது முஸ்லிம் சகோதரர்களையும் நேரான வழியில் செலுத்துமாறும், அவனது பராமரிப்பின் கீழ் எம்மைப் பொறுப்பேற்கும் படியும், அவனது கண்காணிப்பின் மூலம் தவறுகளை விட்டும் எம்மைக் காத்தருளுமாறும் அல்லாஹ்விடம் வேண்டுகின்றோம். அவன் கண்ணியமிக்கவனும், கொடையாளனுமாவான். எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் தோழர்கள், குடும்பத்தார் அனைவர் மீதும் அல்லாஹ் சாந்தியும் சமாதனமும் அருள்வானாக. அனைத்து நல்லறங்களும் எவனுடைய அருட்கொடையால் பரிபூரணமடைகின்றதோ அந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

அல்லாஹ்வின்பால் தேவையுள்ள அடியானாகிய முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன் ஆகிய நான் ஹி.1392 ஷஃபான் மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை ளுஹா நேரத்தில் இவ்வாக்கத்தை நிவர்த்தி செய்தேன்.



# மாதவிடாய் சட்டங்கள் சம்பந்தமான முக்கியமான சில மார்க்கத் தீர்ப்புகள்

### கேள்வி: 01

மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண் தூய்மையாகி, பஜ்ருக்குப் பின் குளித்துவிட்டு, தொழுது, அன்றைய தின நோன்பைப் பூர்த்தி செய்தால் அவள் அவற்றை மீட்டவேண்டுமா?

**பதில்:**

ரமழான் மாதத்தில் ஒரு பெண் பஜ்ருடைய நேரத்துக்கு ஒரு நிமிடம் முன்னதாக தூய்மையானாலும் அவள் அன்றைய தின நோன்பை நோற்பது கடமையாகும். அவளுடைய நோன்பு செல்லுபடியாகும். அதனை அவள் மீட்டத் தேவையில்லை. ஏனெனில் அவள் பஜ்ருக்குப் பின்னர்தான் குளித்தாலும், சுத்தமான நிலையிலேயே நோன்பு நோற்றிருக்கின்றாள். அதனால் அவளுக்கு எக்குற்றமும் கிடையாது. இது குளிப்புக் கடமையான நிலையிலுள்ள ஓர் ஆண் ஸஹர் உணவை உட்கொண்டு, நோன்புக்காக நிய்யத் வைத்துவிட்டு, பஜ்ருக்குப் பின்பு குளிப்பதைப் போன்றாகும். அவனுடைய நோன்பும் செல்லுபடியாகும்.

இச்சந்தர்ப்பத்தில் பெண்களிடமுள்ள இன்னொரு விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு பெண் நோன்பு நோற்ற நாளில், நோன்பு திறந்த பின்பு, இஷாத் தொழுவதற்கு முன்பு மாதவிடாய் ஏற்பட்டால் அன்றைய தினம் ரோற்ற நோன்பு செல்லுபடியற்றது என சிலர்

நினைக்கின்றனர். இதற்கு எந்தொரு அடிப்படையுமில்லை. மாறாக ம.்.ரிபுக்கு ஒரு வினாடிக்குப் பின்பு மாதவிடாய் ஏற்பட்டாலும் அவள் நோற்று முடித்த நோன்பு பூரணமானதும், செல்லுபடியானதுமாகும்

## கேள்வி: 02

பிரசவ ருது (நிபாஸ்) வெளியாகிய ஒரு பெண் நாற்பது நாட்களுக்கு முன்னர் தூய்மையானால் அவள் தொழுவதும், நோன்பு நோற்பதும் அவசியமா?

**பதில்:**

ஆம். அவள் எப்போது தூய்மையாகின்றாளோ, அச்சமயம் முதல் சகல கடமைகளையும் தொடரவேண்டும். தூய்மையாகிய காலம் ரமழான் மாதமாக இருந்தால் நோன்பு நோற்பது கடமையாகும். உரிய நேரத்தில் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். அவளுடைய கணவன் அவளுடன் தாம்பத்திய உறவில் ஈடுபடலாம். ஏனெனில், அவள் தூய்மையடைந்ததன் பின் நோன்பு, தொழுகை, உடலுறவு போன்றவற்றைத் தடுக்கும் எந்தக் காரணிகளும் அவளிடம் இல்லை.

## கேள்வி: 03

ஒரு பெண்ணின் வழமையான மாதவிடாயின் காலம் 08 அல்லது 07 நாட்களாகும். பின்னர் ஓரிரு தடவைகளோ அல்லது அதற்கதிகமாகவோ தொடர்ந்து இரத்தம் வெளியாகின்றது. இதற்கான மார்க்கத் தீர்ப்பு யாது?

**பதில்:**

இப்பெண்ணின் வழமை 06 அல்லது 07 நாட்களாக இருந்து, பின்னர் அது 08, 09, 10, 11 என நீண்டுகொண்டு சென்றால் இக்காலப் பகுதியில் அப்பெண் தொழாமல்

நோன்பு நோற்காமல் தூய்மையாகும் வரை காத்திருக்க வேண்டும். ஏனெனில் நபியவர்கள் மாதவிடாயின் காலத்தை குறிப்பிட்ட சில நாட்களின் எண்ணிக்கை கொண்டு வரையறுக்கவில்லை. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَيَسْـَٔلُونَكَ عَنِ ٱلْمَحِيضِ ۖ قُلْ هُوَ أَذًى ﴾ [البقرة: ٢٢٢]

“மாதவிடாய் பற்றி உம்மிடம் வினவுகின்றனர். அது ஓர் உபாதை(யான தீட்டு) ஆகும் என நீர் கூறும்” (அல்பகரா: 222). எனவே, இரத்தம் வெளியாகிக்கொண்டிருக்கும் காலமெல்லாம் காத்திருந்து, தூய்மையான பின்பு, குளித்து விட்டுத் தொழ வேண்டும். அடுத்த மாதம் (இம்மாதத்தை விடக்) குறைவான நாட்கள் வெளியாகி, தூய்மையாகி விட்டால் உடனே குளிக்க வேண்டும். முந்திய மாதம் வெளியான நாட்களின் அளவைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆகவே, ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் வெளியாகும் நாட்கள் முந்திய மாதங்களை விட அதிகமாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும், மாதவிடாய் வெளியாகிக்கொண்டிருக்கும் காலமெல்லாம் தொழக்கூடாது என்பதே இங்கு முக்கியமான விடயமாகும். தூய்மையான பின்பு (குளித்துவிட்டுத்) தொழ வேண்டும்.

### கேள்வி: 04

ஒரு பெண், சூரியன் மறைய முன்பு தனக்கு மாதவிடாய் வெளியாவதைப் போன்று உணர்கின்றாள். ஆனாலும், சூரியன் மறைந்த பின்பே அது வெளியாகிறது. அல்லது மாதவிடாயின்போது ஏற்படும் வலியை உணர்கின்றாள். இப்பெண்ணின் அன்றைய தின நோன்பு ஏற்றுக் கொள்ளப்படுமா? அல்லது அதனை மீட்ட வேண்டுமா?

**பதில்:**

சூரியன் மறைய முன் ஒரு பெண் மாதவிடாய் வருவதைப் போன்று உணர்ந்தாலும் அது சூரியன் மறைந்த பின்பு

தான் வெளியானால், அல்லது மாதவிடாயின்போது ஏற்படும் வலியை உணர்ந்தாலும், சூரியன் மறைந்த பின்பே இரத்தம் வெளியானால் அவள் அன்றைய தினம் நோற்ற நோன்பு செல்லுபடியானதாகும். அது கடமையான நோன்பாயிருந்தால் அதனை மீட்டத் தேவையில்லை, அது உபரியானதாக இருந்தால் அதன் நன்மைகள் வீணாகமாட்டாது.

## கேள்வி: 05

ஒரு பெண் இரத்தம் வெளிவருதைக் காண்கிறாள். எனினும் அது மாதவிடாய் என்று உறுதியாக விளங்கவில்லை. அவள் அன்றைய தினம் நோற்ற நோன்பு ஏற்கப்படுமா?

**பதில்:**

மாதவிடாய் என்று உறுதியாகும் வரை ஒரு பெண்ணின் அடிப்படை நிலை, அவள் தூய்மையானவள் என்பதாகும். அதனடிப்படையில் அவள் அன்றைய தினம் நோற்ற நோன்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

## கேள்வி: 06

ஒரு பெண் தனக்கு மாதவிடாய் வரும் நாட்களில் ஒரு நாள் இரத்தம் வெளிவருவதையும், மறு நாள் பகல் முழுவதும் இரத்தம் வெளிவராமலிருப்பதையும் காண்கின்றாள். அவள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

**பதில்:**

மாதவிடாயின் காலத்தினுள் ஏற்படும் சுத்தம், இரத்தமில்லாத நிலை என்பன மாதவிடாயுடன் தொடர்பானதே. எனவே, அதனைத் தூய்மையெனக் கருதமுடியாது. அதனடிப்படையில் மாதவிடாய் நிலையிலுள்ள ஒரு பெண் தவிர்ந்து கொள்ள வேண்டிய அனைத்து விடயங்களை விட்டும் இவளும்

தவிர்ந்து கொள்ளவேண்டும். வேறு சில அறிஞர்கள் “ஒரு பெண் ஒரு நாள் இரத்தத்தையும், மறு நாள் தூய்மையையும் கண்டால் 15 நாட்கள் வரை இரத்தத்தை மாதவிடாயாகவும், இரத்தமின்மையை தூய்மையாகவும் கணிக்க வேண்டும். அதனை விட அதிக நாட்கள் வெளியானால், அதனை இஸ்திஹாழாவாகக் கருதவேண்டும்” எனக் குறிப்பிட்டுள்ளனர். இதுவே இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் மத்ஹபில் பிரபலமான கருத்தாகும்.

## கேள்வி: 07

ஒரு பெண் மாதவிடாயின் இறுதி நாட்களில் இரத்தத்தின் அறிகுறிகளைக் காணவில்லை. அதே சமயம் தூய்மையாவதற்கான அடையாளமான வெள்ளைத் திரவம் வெளிவரவுமில்லை. அத்தினத்தில் அவள் நோன்பு நோற்க வேண்டுமா? அல்லது என்ன செய்ய வேண்டும்?

**பதில்:**

(மாதவிடாயின் இறுதியில்) வழமையாக வெள்ளைத் திரவம் வெளியாகும் சில பெண்களைப் போன்று இப்பெண் இல்லாவிட்டால், நோன்பு நோற்பது கடமையாகும். அவ்வாறில்லையெனில் வெள்ளை திரவத்தைக் காணும்வரை நோன்பு நோற்காது காத்திருக்க வேண்டும்.

## கேள்வி: 08

மாதவிடாய், அல்லது பிரசவ ருது வெளியாகும் நிலையில் ஒரு பெண் அத்தியவசியத் தேவையின்போது பார்த்தோ, மனனமாகவோ அல்குர்ஆனை ஓதுவதன் சட்டம் யாது? உதாரணமாக மாணவியாக அல்லது ஆசிரியையாக இருப்பதைப் போன்று.

**பதில்:**

ஆசிரியை, அல்லது வழமையாக இரவு, பகலாக ஓதிவரும் மாணவி போன்றோர் அசுத்தமாக இருக்கும் நிலையில் தேவைக்காக அல்குர்அனை ஓதுவதில் தவறில்லை. ஆனால் நன்மையை நாடி ஓதுவதாயிருந்தால் அதனைத் தவிர்ந்து கொள்வதே ஏற்றமானது. ஏனெனில் அதிகமான அறிஞர்கள், ஒரு பெண் மாதவிடாயுடன் அல்குர்ஆனை ஓதக்கூடாது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

### கேள்வி: 09

மக்களுடன் சேர்ந்து நோன்பு நோற்பதற்காக மாதவிடாயைத் தடுக்கும் மாத்திரைகளைப் பயன்படுத்துவது பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

**பதில்:**

இதனை நான் எச்சரிக்கை செய்கின்றேன். ஏனெனில் இதுபோன்ற மாத்திரைகளின் பயன்பாட்டால் பாரிய விளைவுகள் உள்ளன. அவை பற்றி வைத்தியர்கள் முன்வைத்துள்ள சான்றும் என்னிடமுள்ளது. இது ஆதமுடைய பெண்மக்களுக்கு அல்லாஹ் எழுதி வைத்துள்ள விதி. எனவே அல்லாஹ் எழுதியதைப் பொருந்திக் கொள்வீராக. தடைகள் இல்லாதபோது நோன்பு நோற்று, (மாதவிடாய், பிரசவ ருது போன்ற) தடைகளின்போது கண்ணியமும், உயர்வும் மிக்க அல்லாஹ்வின் விதியைப் பொருந்திக் கொண்டு நோன்பை விட்டுவிடுவீராக என பெண்களுக்குக் கூறவேண்டியுள்ளது.

### கேள்வி: 10

சில பெண்களுக்கு மாதவிடாய் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றது. சிலவேளை ஓரிரு நாட்கள் நின்றுவிட்டு மீண்டும் வந்து விடுகின்றது. இந்நிலையில் தொழுகை, நோன்பு மற்றும் ஏனைய வணக்கங்களை நிறைவேற்றுவதன் சட்டம் யாது?

**பதில்:**

பெரும்பாலான அறிஞர்களின் பரவலான கருத்து யாதெனில், ஒரு பெண்ணுக்கு வழமை முறை ஒன்று இருந்து, அவ்வழமை முடிந்துவிட்டால் குளித்துவிட்டு தொழுகை, நோன்பு போன்ற வணக்கங்களை நிறைவேற்றுவாள். வழமையான நாட்களின் பின்பு இரண்டு, மூன்று தினங்கள் அவள் காணும் இரத்ததத்தை மாதவிடாயாகக் கருத முடியாது. ஏனெனில், இவ்வாறான அறிஞர்களிடம், ஒரு பெண் சுத்தமாயிருக்கும் மிகக் குறைந்த காலம் 13 நாட்களாகும். வேறு சில அறிஞர்கள், ஒரு பெண் எப்போது இரத்தத்தைக் காண்கின்றாளோ அப்போது மாதவிடாய் நிலை எனவும், இரத்தத்தைக் காணாதபோது தூய்மை நிலை எனவும் குறிப்பிடுகின்றனர். இரண்டு மாதவிடாய்களுக்கும் மத்தியில் 13 நாட்கள் இல்லாவிடினும் சரியே.

### கேள்வி: 11

ஒரு பெண் தனக்கு நோன்பு கடமையான நாளிலிருந்தே நோன்பு பிடித்து வருகின்றாள். எனினும் மாதவிடாயின்போது விடுபட்ட நோன்புகளை இதுவரை அவள் மீட்டவில்லை. விடுபட்ட மொத்த நாட்கள் எத்தனை என்பதையும் மட்டிட முடியாத நிலையில் அவள் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:**

இறை நம்பிக்கை கொண்ட எமது பெண்களுக்கு மத்தியில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதையிட்டு

பெரிதும் வருந்துகின்றேன். இவ்வாறு விடுபட்ட நோன்புகளை மீட்டாமலிருப்பதற்கு இரு காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்றில் அதன் சட்டத்தை அறியாமலிருப்பது, அல்லது அவ்விடயத்தில் பராமுகமாக இருப்பது. இரண்டுமே சோதனைகளே. அறியாமைக்குப் பரிகாரம் அதனைப் பற்றி விபரம் கேட்டுத் தெரிந்து கொள்வதாகும். பராமுகமாக இருப்பதற்கான பரிகாரம் அல்லாஹ்வையும், அவனது கண்காணிப்பையும் அஞ்சுவதும், அவனுடைய தண்டனையைப் பயப்படுவதும், அவனது பொருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய விடயங்களின்பால் விரைவதுமாகும். மேற்குறிப்பிட்ட பெண், தான் செய்த தவறுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் கோரி, அவன்பால் மீண்டு, இயன்றளவு ஆய்வு செய்து கணிப்பிட்டு, விடுபட்ட நோன்புகளை நோற்பது கடமையாகும். இதன் மூலம் அவளின் பொறுப்பை விட்டும் அவள் நீங்கிவிடலாம். அவளுடைய பாவமீட்சியை அல்லாஹ் ஏற்றுக்கொள்ள வேண்டுமென நாமும் ஆதரவு வைக்கின்றோம்.

## கேள்வி: 12

பெண்ணிடமிருந்து வெளியாகும் வெள்ளை அல்லது மஞ்சள் நிறத் திரவம் சுத்தமானதா? அல்லது அசுத்தமானதா? அது தொடராக வெளியாகிக் கொண்டிருந்தால் வுழூச் செய்ய வேண்டுமா? அது விட்டு விட்டு வெளியானால் என்ன சட்டம்? குறிப்பாக ஆசிரியைகள் உட்பட பெரும்பான்மையான பெண்கள், வுழூச் செய்யத் தேவைப்படாத, இயற்கையாக ஏற்படக்கூடிய ஈரலிப்பாகவே அதனைக் கருதுகின்றனர்.

### பதில்:

எனது ஆய்வின் பிரகாரம் நான் விளங்கியது யாதெனில், பெண்களிடமிருந்து வெளியாகும் திரவம் அவளுடைய

சிறுநீர்ப் பையிலிருந்து வெளிவராது கர்ப்பப்பையிலிருந்து வெளியானால் அது சுத்தமானதாகும். எனினும் அது சுத்தமாயிருந்தாலும் வுழூ முறிந்துவிடும். ஏனெனில் வுழூ முறிய (மர்மஸ்தானத்திலிருந்து) வெளிப்படும் திரவம் அசுத்தமானதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. சடப்பொருளற்ற காற்று பின் துவாரத்தால் வெளியானாலே வுழூ முறிகின்றதென்றால், ஒரு பெண் வுழூவுடனிருக்கும் நிலையில் அத்திரவம் வெளியானால், அவளுடைய வுழூ முறிந்துவிடும். அவள் தனது வுழூவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

எனினும், அது தொடராகவே வெளியாகிக் கொண்டிருந்தால், வுழூ முறியமாட்டாது. எனினும் ஒவ்வொரு தொழுகைக்கும் அதன் நேரம் நுழைந்த பின்பே வுழூச் செய்து கொள்ள வேண்டும். சிறுநீர் தொடராக வழிந்துகொண்டே இருப்போர் விடயத்தில் அறிஞர்கள் கூறியிருப்பதைப் போன்று, (நேரம் நுழைந்த பின்பு) வுழூச்செய்து அந்நேரத்துக்குரிய கடமையான தொழுகையையும், விரும்பியளவு உபரியான தொழுகைகளையும் தொழலாம், அல் குர்ஆனைத் தாராளமாக ஓதலாம். இதுவே பெண்களின் மர்மஸ்தானத்திலிருந்து வெளியாகும் திரவம் சம்பந்தமான சட்டமாகும். சுருங்கக் கூறின், சுத்தமா? இல்லையா? என்றால், சுத்தமானது எனவும், வுழூ முறியுமா? முறியமாட்டாதா? என்றால், வுழூ முறிந்துவிடும் என்றும், தொடராகவே வெளியாகிக் கொண்டிருந்தால் வுழூ முறியமாட்டாது என்றும், எனினும் நேரம் நுழைந்த பின்பே வுழூச் செய்ய வேண்டும் என்றும், மறைவிடத்தில் (துணி போன்ற) ஏதாவதொன்றை வைத்துக் கொண்டே தொழ வேண்டும் என்றும் விளங்கலாம்.

அத்திரவம் தொடராக இன்றி விட்டுவிட்டு வரக்கூடியதாக இருந்து, தொழுகை நேரத்தில் நின்றுவிடுவது வழமையாக இருந்தால் அது நிற்கும் வரை தொழுகையைத் தாமதப்படுத்த

வேண்டும். தொழுகையின் நேரம் தாண்டிவிடும் என அஞ்சினால் வுழூச் செய்துவிட்டு, மறைவிடத்தில் ஏதாவது தடுப்பை வைத்துக் கொண்டு தொழ வேண்டும்.

இதில் அதிகம், குறைவு என்ற வேறுபாடு எதுவுமில்லை. ஏனெனில் இவை அனைத்தும் மர்ம உறுப்பிலிருந்தே வெளியாகின்றன. எனவே அது குறைவாக வெளியனாலும், அதிகமாக வெளியனாலும் வுழூ முறிந்துவிடும். இதற்கு மாற்றமாக, உடம்பின் ஏனைய பகுதிகளிலிருந்து வெளியாகும் இரத்தம், வாந்தி போன்றன, அவை குறைவாக இருந்தாலும், அதிகமாக இருந்தாலும் வுழூ முறியமாட்டாது.

சில பெண்கள் (மர்ம உறுப்பால் வெளியாகும்) இத்திரவத்தின் மூலம் வுழூ முறியமாட்டாது எனக் கருதுகின்றனர். அவர்களின் இக்கருத்துக்கு இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் "இது வுழூவை முறிக்கமாட்டாது" என்று கூறியிருப்பதைத் தவிர வேறு எந்த சான்றும் கிடையாது. அவரும் அதற்கான ஆதாரம் எதனையும் முன்வைக்கவில்லை. அல்குர்ஆனிலோ, நபிமொழிகளிலோ, நபித்தோழர்களின் கருத்துக்களிலோ அவரது கூற்றுக்கு ஆதாரம் இருந்தால் ஏற்றுக்கொள்ள முடியும்.

ஒரு பெண் அல்லாஹ்வை அஞ்சி, சுத்தம் சம்பந்தமான விடயங்களில் கவனம் செலுத்துவதும், ஆர்வம் காட்டுவதும் அவசியமாகும். ஏனெனில் 100 தடவைகள் தான் தொழுதாலும் வுழூவின்றி அவை ஏற்கப்படுவதில்லை. மேலும், "யார் (வேண்டுமென்று) வுழூவின்றி தொழுவாரோ அவர் இறை நிராகரிப்பாளராக ஆகிவிடுவார், ஏனெனில் அது அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளைப் பரிகாசிப்பதைச் சார்ந்ததாகும்" என சில அறிஞர்கள் கூறியுள்ளமை இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

## கேள்வி: 13

ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட ஒரு நாள் அல்லது அதை விட அதிகமானவோ, குறைவானவோ நாட்கள் மண் நிறத்தில் வரும் திரவத்திற்குரிய சட்டம் யாது? அவ்வாறு வெளியாகும் திரவம் சில சந்தர்ப்பங்களில் கறுப்பு அல்லது பழுப்பு அல்லது அதற்கு நெருங்கிய நிறத்தில் மெல்லிய நூல் வடிவத்தில் வெளியாகின்றது. இதே திரவம் மாதவிடாயின் பின்பு வெளியானால் அதன் சட்டம் யாது?

### பதில்:

இத்திரவம் மாதவிடாய்க்குரிய அறிகுறியாக இருந்தால் அதனையும் மாதவிடாய் இரத்தமாகவே கருத வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் ஏற்படும் வலியின் மூலம் அதனை உறுதி செய்யலாம். மாதவிடாயின் பின்பு மண் நிறத்தில் வெளிவரும் திரவம் நீங்கும் வரை காத்திருக்க வேண்டும். ஏனெனில் மாதவிடாயைத் தொடர்ந்து வரும் மண் நிறத் திரவம் மாதவிடாயைச் சேர்ந்ததாகும். “வெள்ளைத் திரவத்தைக் காணும் வரை அவசரப்படாதீர்”.(1) என அன்னை ஆஇஷா (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## கேள்வி: 14

உம்ராவுக்காக இஹ்ராம் நிய்யத் வைத்த ஒரு பெண் மக்காவை வந்தடைந்ததும் அவளுக்கு மாதவிடாய் ஏற்படுகின்றது. அவளுடன் வந்த நெருங்கிய உறவினரான ஆண் துணை (மஹ்ரம்) உடனே புறப்படவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளார். மக்காவில் அவளுக்கு வேறு (மஹ்ரம்) ஆண் துணை யாரும் கிடையாது. இந்நிலையில் இவள் என்ன செய்ய வேண்டும்?

(1) புஹாரி பாகம் 1, பக் 71 (ஹதீஸ் இல 320க்கு முன்)

### பதில்:

அவள் ஸஊதி அரேபியாவில் தங்கியிருப்பவளாக இருந்தால், அவனுடன் சேர்ந்து இவளும் இஹ்ராத்துடனையே திரும்பிச் செல்வாள். தூய்மையான பின்பு மீண்டும் வந்து உம்ராவை நிறைவேற்றுவாள். ஏனெனில் இவ்வாறானவர்களுக்கு திரும்பி வருவதில் பாரிய சிரமம் எதுவும் ஏற்படுவதில்லை. கடவுச்சீட்டு, விசா போன்றவை அவசியப்படுவதுமில்லை. ஆனால், அவள் வெளிநாட்டிலிருந்து வந்தவளாக இருந்தால், தனது மறைவிடத்தில் ஏதாவது தடுப்பை வைத்துக் கொண்டு, தவா∴ப், ஸஈ ஆகியவற்றைச் செய்து, முடியையும் கத்தரித்து, அதே பிரயாணத்தில் உம்ராவை பூர்த்தி செய்துவிடுவாள். ஏனெனில் இதுபோன்ற இக்கட்டான நிலையில் இவளது தவா∴ப் அத்தியவசியமான, நிர்ப்பந்தமான ஒன்றாக மாறிவிடுகிறது. மார்க்கத்தில் தடுக்கப்பட்டவைகள் நிர்பந்த்தத்தின் போது அனுமதிக்கப்பட்டதாகும்.

### கேள்வி: 15

நான் ஹஜ் செய்யும் போது எனக்கு மாதவிடாய் ஏற்பட்டது. அதனை பிறரிடம் கூற வெட்கப்பட்டு, மஸ்ஜிதுல் ஹராத்தினுள் நுழைந்து, தொழுது, தவா∴பும், ஸஈயும் செய்தேன். பிரசவ ருது வெளியாகியதன் பின்பே அம்மாதவிடாய் வெளியானதும் குறிப்பிடத்தக்கது. இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

### பதில்:

மாதவிடாயோ, பிரசவ ருதுவோ வெளியாகும் நிலையில் ஒரு பெண், மக்காவிலோ, அல்லது தனது ஊரிலோ, அல்லது வேறு எந்த இடத்திலுமோ தொழுவது தடைசெய்யப்பட்டதாகும். ஏனெனில் நபியவர்கள் பெண்களைப் பற்றிக் கூறும்போது "அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் அவள் தொழவோ, நோன்பு

நோற்கவோமாட்டாள் அல்லவா?" என்று கூறினார்கள்[1]. மேலும் மாதவிடாய் நிலையிலுள்ள ஒரு பெண் தொழவோ, நோன்பு நோற்கவோ முடியாது என்பது முஸ்லிம்களுக்கு மத்தியில் ஏகோபித்த கருத்தாகும். இவ்வாறிருந்தும் இக்குற்றத்தைச் செய்துள்ள அப்பெண், செய்த தவறுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோர வேண்டும்.

மாதவிடாயுடன் அவள் செய்த தவா.்.ப் செல்லுபடியற்றது. ஹஜ்ஜின்போது தவா.்.பை விட ஸஈயை முற்படுத்தலாம் என்ற கருத்தே வலுவானதாக இருப்பதனால், அவள் செய்த ஸஈ செல்லுபடியானதாகும். எனினும் ஹஜ்ஜுடைய கட்டாயக் கடமையான தவா.்.புல் இபாழாவை அவள் மீண்டும் நிறைவேற்றியே ஆகவேண்டும். ஏனெனில் இதனை நிறைவேற்றாமல் இஹ்ராத்தின் போது விலக்கப்பட்ட காரியங்கள் யாவும் அனுமதிக்கப்படமாட்டாது. இதனைத் ஷஅத்தஹல்லுலுஸ் ஸானீ'[2] எனப்படும். ஆகவே, இப்பெண் திருமணம் செய்திருந்தால், கடமையான இத்தவா.்.பை நிறைவேற்றி முடிக்கும் வரை கணவன் அவளுடன் தாம்பத்திய உறவில் ஈடுபட முடியாது. திருமணம் செய்யாத பெண்ணாக இருந்தால், தவா.்.ப் செய்யும் வரை திருமண ஒப்பந்தம் எதுவும் செய்ய முடியாது. அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

---

(1) அறிவிப்பாளர்: அபூ ஸஈத் அல்குத்ரீ (ரழி), ஆதாரம்: புஹாரி 304, முஸ்லிம் 80.

(2) துல் ஹஜ் மாதம் 10 ம் நாள் செய்ய வேண்டிய கல்லெறிதல், முடி சிரைத்தல். அறுத்துப் பலியிடல், தவா.்.ப், ஸஈ செய்தல் ஆகிய ஐந்து காரியங்களில் ஏதாவது மூன்றைச் செய்துவிட்டால் இஹ்ராத்தின்போது விலக்கப்பட்ட காரியங்களில், தாம்பத்திய உறவு மற்றும் திருமண ஒப்பந்தம் செய்தல் ஆகியவற்றைத் தவிர்ந்த ஏனையவை யாவும் அனுமதிக்கப்பட்டு விடும். இதனையே "தஹல்லுல் அவ்வல்" எனப்படும். முழுமையாக ஐந்து காரியங்களையும் நிறைவேற்றி முடித்தால் "தஹல்லுல் ஸானீ" ஏற்பட்டு விடும். அப்போது இஹ்ராத்தின்போது தடை செய்யப்பட்டவை யாவும் அனுமதிக்கப்பட்டதாக ஆகிவிடும்.

## கேள்வி: 16

தானும், தனது மனைவியும் யன்பு. என்ற ஊரிலிருந்து உம்ராச் செய்ய வந்ததாகவும், மக்கா வந்தடைந்ததும் அவரது மனைவிக்கு மாதவிடாய் ஏற்பட்டுவிட்டதாகவும், அவர் தனியாக உம்ராவை நிறைவேற்றி முடித்துவிட்ட நிலையில் தனது மனைவிக்குரிய சட்டம் என்ன? என ஒரு சகோதரர் வினவுகின்றார்.

### பதில்:

உங்களது மனைவியைப் பொறுத்தவரையில் அவள் சுத்தமாகும் வரை காத்திருந்து, அதன் பின்பு உம்ராவை நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் ஸ.பிய்யா[1] (ரழி) அவர்களுக்கு மக்காவில் வைத்து மாதவிடாய் ஏற்பட்டபோது நபியவர்கள் “அவர் எங்களையும் (மக்காவிலிருந்து செல்லவிடாமல்) தடுத்துவிட்டாரா?” என வினவியபோது, “அவர் கடமையான தவா.பைச் செய்துவிட்டார்”எனக் கூறப்பட்டது. அச்சமயம் நபி (ஸல்) அவர்கள், “அவ்வாறாயின் பரவாயில்லை. அவர் புறப்பட்டுச் சென்றுவிடலாம்” எனக் கூறினார்கள்.[2]

“அவர் எங்களையும் (மக்காவிலிருந்து செல்லவிடாமல்) தடுத்துவிட்டாரா?” என்ற நபியவர்களின் வினாவானது, ஒரு

(1) நபியவர்களின் மனைவியருள் ஒருவரான ஸ.பிய்யா (ரழி) அவர்கள் யூதர்களின் தலைவர்களில் ஒருவரான ஹுயய் பின் அ.ஹ்தப் என்பவரின் மகளாவார்கள். .கைபர் போரின் போது தனது முன்னைய கணவர் கொலை செய்யப்பட்டதும் முஸ்லிம்களால் இவர்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள். திஹ்யா என்ற நபித்தோழர் இவர்களை தனது அடிமைப் பெண்ணாக எடுத்துக் கொண்டார்கள். நபியவர்கள் அவர்களிடமிருந்து ஸ.பிய்யாவை மீட்டெடுத்து உரிமையிட்டுத் திருமணம் செய்து கொண்டார்கள். ஹி. 50 அல்லது 52ல் இவர்கள் மரணமானார்கள்.

(2) அறிவிப்பாளர்: ஆஇஷா (ரழி), ஆதாரம்: புஹாரி 4401, முஸ்லிம் 1211.

பெண்ணுக்கு ஹஜ்ஜுடைய கடமையான தவா∴புக்கு முன்பு மாதவிடாய் ஏற்பட்டால், தூய்மையாகும் வரை காத்திருந்து, பின்னர் தவா∴ப் செய்வது கடமை என்பதையே சுட்டிக் காட்டுகின்றது. உம்ராவுடைய தவா∴பும் உம்ராவின் கடமைகளுள் ஒன்று என்ற அடிப்படையில் அதே சட்டத்தையே கடைப்பிடிக்க வேண்டும். எனவே தவா∴ பை நிறைவேற்றி முடிக்க முன்பதாக ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் அதிலிருந்து தூய்மையாகும் வரை காத்திருந்து, பின்பு தவா∴ப் செய்வது அவசியமாகும் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!





IslamHouse.com

IslamHouse-Tamil @IslamHouseTa IslamHouseTa https://islamhouse.com/ta

For more details visit
www.GuideToIslam.com

GUIDE TO ISLAM

contact us :Books@guidetoislam.com

GuidetoIslam.org Guidetoislam1 Guidetoislam www.Guidetoislam.com

المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة

هاتف: ٩٦٦١١٤٤٥٤٩٠٠+ فاكس: ٩٦٦١١٤٩٧٠١٢٦+ ص ب: ٢٩٤٦٥ الرياض: ١١٤٥٧

ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH

P.O.BOX 29465 RIYADH 11457 TEL: +966 11 4454900 FAX: +966 11 4970126

# மாதர்களுக்கான
# உதிரப் போக்கு

இறைவன் ஆண்களையும் பெண்களையும் படைத்து, இரு சாராருக்கும் தனித்துவமான சில இயல்புகளை வைத்துள்ளான். பெண்களுக்கு இறைவன் படைத்துள்ள இயற்கை உபாதைகளுள், அவர்கள் பருவமடைந்தது முதல் கருவறையிலிருந்து வெளிப்படும் உதிரப்போக்கு பிரதானமானதாகும். ஸஊதி அரேபியாவின் பிரபல மார்க்க அறிஞர் அஷ்ஷேக் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன் (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட “الدماء الطبيعية للنساء» (பெண்களுக்கேற்படும் இயற்கை உதிரப்போக்கு) என்ற இச்சிறு நூல் முக்கியமானது.




IslamHouse.com

Osoul Center
www.osoulcenter.com